

பேனா உலகில் ஒரு அதிசயம்!
நிக்கல் ஸில்வர் மூடி
ஐந்து நிறங்கள்
தங்கத்தைப் போன்ற முனையுடன் ஸ்ட்ரீம் லைன்
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பேனா இதுதான். ஐந்தே ரூபாய்க்கு மிகவும் அழகாய் செய்யப்பட்ட கோல்டன் பிளாட்டினம் பௌண்டன் பேனா என்றால் மிகவும் மலிவல்லவா? கவர்ச்சிகரமான ஐந்து நிறங்களில் வருகிறது. தூசி அடைவதைத் தடுத்து சரளமாக ஊறச் செய்வதில் பெயர் பெற்ற "தங்கம் போன்ற" முனையுடன் கூடியது. மிகவும் பொருத்தமாகவும் அழகாகவும் இயந்திரத்தினால் வார்க்கப்பட்ட நிக்கல் ஸில்வர் மூடியுடன் கூடியது. உங்களுக்கேற்ற பேனா இதுதான்!
ரூ. 5/-
இங்கிலாந்தில் செய்யப்பட்டது
புதிய கோல்டன்
Platignum
REGD
"தங்கத்தைப் போன்றது"
வர்த்தக விசாரணைகளுக்கு முழு உரிமைபெற்ற விநியோகஸ்தர்கள் :
மூல்லர் & பிப்ஸ் (இந்தியா) லிமிடெட், 15, கங்குராம செட்டித் தெரு, மதராஸ்


ORIENT
SIGN OF PERFECTION
N
Cigarettes
10 CIGARETTES
ஓரியண்ட்
சிகரெட்
நேஷனல் டுபாகோ கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

இது ஒரு ஸோப் அன்றி



மாயமல்லா?

உள்ளதை உள்ளபடி சொல்லுகிறோம். இவ்விளம்பரத்தின் மூலம் நாங்கள் விற்க விரும்புவதெல்லாம் எளியோர் பணக்காரர் யாவருக்கும் கிட்டக்கூடிய ஓர் உயர்தரஸ்நான ஸோப். காந்தி ஸோப் உங்களுக்கு அழகு சிருங்காரம் முதலியவற்றை உண்டாக்குமென்று நாங்கள் வாக்குறுதி கொடுக்கவில்லை.

ஆனல் காந்தி ஸோப் பரிமளம் பொருந்தியவை என்றும் மிருதுவான சருமத்துக்கு கெடுதலை உண்டாக்காது என்றும் உறுதி சொல்லுவோம்.

இதர உயர்தர ஸ்வஸ்திக் தயாரிப்புகள். சிக்காய்ஸோப், பரிமள ஆமணக்கெண்ணெ, ஸ்வஸ்திக் கூவர ஸோப், சலவை ஸோப்புகள், கோவாலின் பிராண்ட் வனஸ்பதி முதலியன.



காந்தி ஸோப்

குணத்துக்கு நிகரற்றது.

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட் பம்பாய்.

மதராஸ் சேல்ஸ் டிப்போ: No. 14, G. ஸ்டிரிங்கர் தெரு. (சௌகார் ஸ்கொயர்) மதராஸ்.
பெங்களூர் சேல்ஸ் டிப்போ: ஆற்காடு ஸ்ரீனிவாஸாச்சார் தெரு. பெங்களூர் ஸிட்டி.
கொச்சின் சேல்ஸ் டிப்போ: பஜார் ரோடு, மட்டஞ்சேரி, கொச்சின்.

கல்கி

பொருளடக்கம்

மலர் 7 இதழ் 50 | ஜூலை 11 | சர்வதாரி ஆனி 28

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார். | இதழ் 50

என்ன சேதி?

ஞாபக மூட்டுகிறோம்

"நீங்கள் பிரஜா உரிமைகளா கேட்கின்றீர்கள்? உங்களுக்குச் சரியான பாடம் கற்பிக்கிறோம்" என்று இலங்கை சர்க்கார் அங்குள்ள இந்தியர்கள் மீது பாணப்பிரயோகம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். நமது இலங்கைக் கடிதங்களை வாசிப்போர், அங்கு இந்தியர்கள் எவ்வளவு தூரம் துன்பப்பட நேர்ந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். இலங்கைப் பிரதம மந்திரி ஸ்ரீ. சேனநாயகா சில மாதங்களுக்கு முன் புதுடில்லிக்குச் சென்றிருந்தார். அங்கு பண்டித ஜவாஹர்லால் நேருவைச் சந்தித்துப் பேசினார். பேச்சு திருப்திகரமாக முடிந்தது என்று அறிக்கையும் வெளியாயிற்று. ஆனால் பலன் என்ன? இலங்கையிலுள்ள ஏழைத் தொழிலாளர்கள் இந்தியாவிலுள்ள தங்கள் பெண்டு பிள்ளைகளுக்குச் சொற்பத் தொகை கூட அனுப்ப முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இலங்கையிலே பல பல ஆண்டுகளாக நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்த இந்தியர்களின் பிரஜா உரிமைகளைப் பறிக்க இலங்கை சர்க்கார் பல சூழ்ச்சிகளும் செப்பிடு வித்தைகளும் செய்து வருகிறார்கள்.

லார்டு மவுண்ட்பாட்டன் சென்ற வாரம் லண்டனில் பேசியபோது குறிப்பிட்ட ஒரு விஷயத்தை இச்சந்தர்ப்பத்தில் இலங்கை சர்க்காருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம். "பிரிட்டன் மீது இந்தியாவுக்குள்ள நல்ல எண்ணத்தைச் சிதைக்க முற்படுவது அயோக்கியத்தனமும் பைத்தியக்காரத்தனமும் ஆகும்" என்று லார்டு மவுண்ட்பாட்டன் மறைமுகமாகச் சர்ச்சில் கோஷ்டியினரைக் கண்டித்தார். இந்தியாவின் நல்ல எண்ணத்தைப் பெறுவதில் பிரிட்டிஷ் வல்லரசே அவ்வளவு சிரத்தை காட்டும்போது, அவ்விஷயத்தில் இந்தியாவை அடுத்துள்ள இலங்கை ஆயிரம் மடங்கு அதிகச் சிரத்தை காட்ட வேண்டும் அல்லவா? ஆனால் ஸ்ரீ சேனநாயகா சர்க்கார் செய்யும் காரியங்களோ வெனில், இந்தியாவின் நல்லெண்ணத்தை இழப்பது ஒருபுறமிருக்க, இந்தியாவின் விரோதத்தையும் விலை கொடுத்து வாங்கிக் கொள்வதாக இருக்கின்றன!

வீரரின் சீரிய தொண்டு

"நான் இறக்கிறேன்; ஆனால் எதிரிகளுக்கு நீங்கள் ஓர் அங்குலம் கூட விட்டுக் கொடுக்கக் கூடாது" என்று சொல்லிய வண்ணம் பிரிகேடியர் உஸ்மான் இளம் வயதில் வீர சுவர்க்கம் அடைந்தார். அவரது சிப்பாய்களும் அவர் இட்ட ஆணையைச் சிரமேற்கொண்டு காஷ்மீரப் போர் முனையில் எதிரிகளை முறியடித்தனர். காஷ்மீர யுத்தத்தில் தங்களுடைய வீரப் பிரதாபத்தை நிலைநாட்டிய ஒரு சில அதிகாரிகளில் பிரிகேடியர் உஸ்மானும் ஒருவர். கொள்ளைக்காரர்களைத் தூண்டிவிட்டுப் பாமர ஜனங்களைப் படுகொலை செய்வது மதத்தின் ஓர் அம்சம் என்று கருதும் கோஷ்டியினர் இருக்கும் இக்காலத்தில், துன்பத்துக்கு ஆளானோர் எந்த ஜாதியினராயினும் எம்மதத்தினராயினும் அவர்களைக் காப்பாற்றுவதே தமது கடமை என்று கருதித் தொண்டு ஆற்றிய பிரிகேடியர் உஸ்மானின் பெருமை சரித்திரத்தில் புகழிடம் பெற வேண்டியதாகும். எனவே கவர்னர் ஜெனரல் ராஜாஜி, பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு முதலிய மாபெரும் தலைவர்களும் உயர்தர ராணுவ வீரர்களும் மாண்ட உஸ்மானுக்கு மரியாதை செலுத்தியிருப்பது முற்றிலும் தகும். காஷ்மீரத்திலுள்ள நிரபராதிகளான ஜனங்களைக் கொள்ளைக்காரர்களிடமிருந்தும் மத வெறியர்களிடமிருந்தும் காப்பாற்றுவதற்காகக் குண்டு மாரியையும் பொருட்படுத்தாது தமது உயிரைத் துச்சமாக மதித்த பிரிகேடியர் உஸ்மானின் தீரம், மற்ற சிப்பாய்களுக்கும் சிறந்த உதாரணமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

நிகழ்ச்சிச் சித்திரம்



-சாஸ்திரி



நைஜாமிடமிருந்து காயிதே ஆஜம் பெற்ற இருபது கோடி ரூபாய் பத்திரங்கள், இந்திய சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் பலனாக, வெறும் காகிதங்களாகி விட்டன! காயிதே ஆஜம் அவற்றைச் சுருட்டுப் பற்ற வைக்க உபயோகிக்கலாம்.
20 கோடி ரூபாய்
இந்தியாவில் பிறந்து இந்தியராக வளர்ந்து இந்தியாவுக்காக வீர சுவர்க்கம் அடைந்த வீரருக்கு பாரதத்தாய் மரியாதை செய்கிறாள்.
பிரிகேடியர் உஸ்மான்
கம்யூனிஸ்ட் ஐக்ய முன்னணியில் ஒரு சிறு பிளவு ஏற்பட்டிருக்கிறது. யூகோஸ்லாவியா தலைவர் மார்ஷல் டிட்டோ தோழர் ஸ்டாலினிடமிருந்து பிய்த்துக் கொள்ளப் பார்க்கிறார்.
வேண்டாம்! வேண்டாம்!
டிட்டோ
ஸ்டாலின்

கொடு, பெட்டிச் சாவியை!

வாழையடி வாழையாக ஒரு குடும்பம் வறுமையில் உழன்று கொண்டிருந்தது. பல தலைமுறைகளாகவும் வறுமை நீங்கி சுபிட்சம் உதயமாவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை. எனவே அதன் ஸ்தூல வாழ்வு மாத்திரமல்ல, ஆத்மார்த்த வாழ்வும் சிதைந்து கொண்டு வந்தது.

அப்படியே சென்று கொண்டிருந்தால் அந்தக் குடும்பத்தின் கதி என்ன என்ற கேள்வி பிறந்தது. ஆனால் அந்தக் கேள்விக்குப் பதில் எதுவும் கிடைக்கவில்லை.

அத்தகைய நிலைமையில் அந்தக் குடும்பத்தில் ஒரு மகா புருஷர் ஜனித்தார். அவர் அறுபது வருஷ காலம் எத்தனையோ துன்பங்களுக்கு இலக்கானார்; எவ்வளவோ தியாகம் செய்தார்; எல்லையற்ற கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தார். அவரது சலியா உழைப்பும் சோர்வற்ற ஊக்கமும் இறுதியில் பலனை அளித்தன.

அந்தக் குடும்பம் வறுமையிலிருந்து உத்தாரணம் செய்யப்பட்டது. அதற்குச் செல்வமும் கிட்டியது. பிறரைத் துரோகம் செய்தோ அல்லது பிளாக் மார்க்கெட்டின் மூலமாகவோ கிட்டவில்லை. தர்மநெறி வழுவாது அவர் செய்த பெரு முயற்சியினாலேயே அந்தச் செல்வம் கிடைத்தது.

அவரால்தான் அந்தக் குடும்பம் அதோகதியாகாமல் காப்பாற்றப்பட்டது என்பதை உலகம் ஒப்புக்கொண்டது.

இந்தச் சமயத்தில்தான் அவருடைய பிள்ளையாண்டான் ஒரு பெரிய வெடிகுண்டைத் தூக்கிப் போட்டான். குடும்பத்திலிருந்து பிய்த்துக்கொண்டு கிளம்பினான். தகப்பனார் எவ்வளவோ நல்ல வார்த்தை சொல்லியும் பலனில்லை. குடும்ப நிர்வாகத்தில் அவனுக்கும் பங்கு உண்டு என்று தந்தை மன்றாடினார். பிள்ளையாண்டானுக்கு அதெல்லாம் பிடிக்கவில்லை. அவன் கூறியது என்ன தெரியுமா?

"குடும்பத்தை வறுமையிலிருந்து உத்தாரணம் செய்தது நீங்கள்தான். பல வருஷங்கள் கஷ்டப்படவும் மகத்தான தியாகங்கள் செய்யவும் செல்வம் சேகரிக்கவும் மாத்திரம்தான் உங்களுக்கு யோக்கியதையும் உரிமையும் உண்டேயன்றி, அதைச் சரிவர நிர்வாகம் செய்யவோ திருடர்களிடமிருந்து காப்பாற்றவோ உங்களுக்குத் தெரியாது. ஆகையால், பெட்டிச் சாவியை என்னிடம் கொடுத்துவிட்டு வெளியேறுங்கள். என் கையில் நிர்வாகம் வந்தால்தான் இந்தக் குடும்பம் உருப்படும்" என்றான் பிள்ளையாண்டான்!

• • •

நமது சோஷலிஸ்டு தலைவர்களும் இன்று அவ்விதமேதான் கூறுகிறார்கள்!

அன்னியரிடம் அடிமைப்பட்டு அல்லலுற்று விமோசனம் பெற வகை தெரியாமல் பாரத நாடு தவித்துக் கொண்டிருந்தது. அத்தகைய துர்ப்பாக்கிய நிலைமையிலிருந்து மீளும் வழி என்ன என்று பாரத மக்கள் திகைத்துக்கொண்டிருந்தபோதுதான், அந்தகாரத்தில் மின்னொளி போன்று காங்கிரஸ் தோன்றியது.

கடுகளவில் ஜனித்த காங்கிரஸ் காலக்கிரமத்தில் மகா மேருவாக வளர்ந்து, எவரஸ்டு போன்ற தியாக சிகரத்தையும் எட்டியது; பல ஆண்டுகள் படாத பாடு பட்டுச் செங்கல் மேல் செங்கல்லாக அடுக்கிச் சுதந்திர மாளிகையையும் நிர்மாணித்தது.

அப்படிப்பட்ட காங்கிரஸ் மீதுதான் பாரதநாட்டு மக்களுக்கு நம்பிக்கை இல்லையென்று இப்போது சோஷலிஸ்டுகள் பிரசாரம் செய்து வருகிறார்கள்!

இந்தியா சுதந்திரம் பெற்றபின் கிளம்பியுள்ள பயங்கரமான பிரச்னைகளைச் சமாளிப்பதில் வெற்றி பெற வேண்டுமாயின், நம் தேசம் முழுவதும் உறுதியும் ஒற்றுமையும் ஐக்கிய பாவமும் திகழ வேண்டும். இது சொத்தை, அது சொள்ளை என்று கூறிக் கொண்டு அனாவசியமான வாதங்களைக் கிளறக் கூடாது.

சென்ற அறுபது வருஷ காலமாகத் தேச ஜனங்கள் எந்த ஸ்தாபனத்தின் மீது தளரா நம்பிக்கை கொண்டிருந்தார்களோ, அந்த ஸ்தாபனத்தின் மீது ஜனங்களுக்குள்ள நம்பிக்கை இப்போது திடீரென்று மறைந்து விட்டதென்று கூறுவது அர்த்தமற்றதாகும்.

காங்கிரஸ் ஜனங்களை நாச மார்க்கத்தில் செலுத்தி விட்டது என்றும், எனவே அதன்மீது ஜனங்களுக்கு நம்பிக்கை போய்விட்டது என்றும் முன்பெல்லாம் பிரிட்டிஷார் கூட அடிக்கடி பிரசாரம் செய்வது வழக்கம். பின்னர் நடக்கும் தேர்தலில் காங்கிரஸ் வாதிகள் பன்மடங்கு அதிக வெற்றி பெற்று, தங்கள் மீது ஜனங்களுக்குள்ள பூரண நம்பிக்கையை நிரூபித்து விடுவார்கள். அவ்வளவுதான்; பிரிட்டிஷ் பிரமுகர்களின் நிலைமை திருடனைத் தேள் கொட்டிய கதையாக முடியும்!

• • •

இப்போது குறிப்பாக ஐக்கிய மாகாண சோஷலிஸ்டுகளின் நிலைமையும் அதே கதையாக முடிந்திருக்கிறது.

ஐக்கிய மாகாணம் சோஷலிஸ்டுகளின் கோட்டை என்றும், அப்படியிருந்தும்கூட சமீபத்தில் நடந்த ஜில்லா போர்டு தேர்தல்களில் அவர்கள் கோட்டை விட்டு விட்டார்கள் என்றும் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். மொத்த ஸ்தானங்களில் அப்போது தொண்ணூறு சத விகிதம் காங்கிரசுக்கே கிடைத்தன.

அதன் பிறகாவது சோஷலிஸ்டுகள் தங்களுடைய பலவீனத்தை அறிந்து தங்களுடைய போக்கை மாற்றிக் கொண்டிருக்கலாம். ஆனால் அவ்விதமின்றி அவர்கள் மீண்டும் காங்கிரசின் பலத்தைச் சோதிக்கத் துணிந்ததுதான் ஆச்சரியமாகும்.

ஐக்கிய மாகாண சட்ட சபையிலிருந்து பல சோஷலிஸ்டுகள் ராஜினாமாச் செய்தனர். அதாவது அந்த ஸ்தானங்களுக்கு நடக்கும் தேர்தல்களில் காங்கிரஸ் அபேட்சகர்கள் நின்று பார்க்கட்டும் என்று சவால் விடுத்தனர். காங்கிரசும் மேற்படி சவாலை ஏற்றுக் கொண்டது.

இரு கட்சிகளின் சார்பிலும் உயர்தரத் தலைவர்கள் தீவிரப் பிரசாரம் செய்தனர். ஐக்கிய மாகாண சட்ட சபை உப தேர்தல்களை பொட்டி வாக்காளர்களுக்குப் புத்திமதி கூறுவதற்காகப் பண்டித ஜவாஹர்லால் நேருவே லக்ஷ்மணபுரிக்குச் சென்றிருந்தாரெனில், அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம்.

சோஷலிஸ்டுக் கட்சி சார்பிலும் ஸ்ரீ ஜெயப் பிரகாச நாராயணன், ஸ்ரீ ராம் மனோஹர லோஹியா போன்ற தலைவர்கள் காங்கிரஸ் மீது வசை மொழிப் பிரயோகம் செய்யத் தயங்கவில்லை.

ஜில்லா போர்டு தேர்தல்களில் காங்கிரஸ் வாதிகள் பல்வேறு சூழ்ச்சிகளைக் கையாண்டு வெற்றி பெற்றனர் என்று சோஷலிஸ்டு தலைவர்கள் பிரசாரம் செய்தார்கள். ஆனால் ஐக்கிய மாகாண ஜனங்கள் அதற்கெல்லாம் மசியவில்லை. காங்கிரஸ் மீது தங்களுக்கு நூறு சத விகிதம் நம்பிக்கை இருக்கிறது என்பதை மீண்டும் காட்டி விட்டார்கள்!

மேற்படி தேர்தலில் பெரும்பான்மையான ஸ்தானங்களிலும் காங்கிரஸ் அபேட்சகர்களே வெற்றி பெற்றனர். சோஷலிஸ்டு அபேட்சகர்களில் சிலர் ஜாமீன் தொகைகளையும் இழக்க நேர்ந்தது.

இதெல்லாவற்றையும் காட்டிலும் ஆச்சரியம் என்னவென்றால், மதிப்பிற்கு உரியவரும் ஐக்கிய மாகாணத்திலுள்ள சிறந்த தலைவர்களில் ஒருவருமான ஆச்சாரிய நரேந்திரதேவ் கூடத் தோல்வியுற்றதுதான். காங்கிரஸ் அபேட்சகர் அவரைக் காட்டிலும் அதிகமாக ஆயிரம் வோட்டுகளுக்கு மேல் பெற்று வெற்றியடைந்தார்!

• • •

அரசியல் கட்சிகள் இருப்பதுதான் ஜனநாயக முறை என்பதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. சோஷலிஸ்டு தலைவர்கள் சிறந்த தியாகிகள் என்பதையும் யாரும் மறுக்கவில்லை.

ஆனால், காங்கிரஸ் ஒரு சாதாரண கட்சியல்ல. அறுபது வருஷ காலமாக வேறு எந்தக் கட்சியின் உதவியின்றியும், மற்றக் கட்சிகளின் எதிர்ப்பைச் சமாளித்தும் தனித்து நின்று சுதந்திரப் போரில் அரும் பெரும் தியாகங்கள் செய்து வெற்றி பெற்ற மகத்தான ஸ்தாபனம்; தேச மகா ஜனங்களின் ஏகப் பிரதிநிதி ஸ்தாபனம்.

காங்கிரஸ் தலைவர்களோ ஈடு இணையற்ற தியாகிகள். மற்றும் சோஷலிஸ்டுகளும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளும் மகாத்மா காந்தியின் பூரண நம்பிக்கையைப் பெற்ற ஸ்தாபனம் காங்கிரஸ் மகா சபைதான்.

எனவே, ஜனநாயக முறையில் ஏற்படும் கட்சிகளுக்கும் காங்கிரசுக்கும் மிகுந்த வேற்றுமை உண்டு என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

ஐக்கிய மாகாண சட்ட சபைத் தேர்தல்கள் மற்ற மாகாணங்களுக்கும் ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும். அந்த மாகாணத்தில் காங்கிரஸ் மிகுந்த செல்வாக்குடன் இருந்து வருகிறது என்பது தேர்தல் முடிவிலிருந்து நிதர்சனமாகி யிருக்கிறது. அதாவது அங்குள்ள காங்கிரஸ் வாதிகள் தூங்காமல் விழிப்புடன் இருந்து வருகிறார்கள். மற்ற மாகாணங்களில் உள்ள காங்கிரஸ்வாதிகளும், காங்கிரஸ் மந்திரிகளும் தேர்தல் சமயத்தில் விழித்துக் கொண்டால் போதும் என்று தூங்கிக் கொண்டிருக்கக் கூடாது.

பொது ஜனங்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை அறிந்து உடனுக்குடன் பரிகாரம் செய்ய முற்பட வேண்டும்.

சுதந்திர இந்தியாவின் எதிர்கால அரசியல் மகா சாஸனத்தின்படி வயது வந்தவர் சகலருக்கும் வோட்டுரிமை கிடைக்குமாதலால், பாமர ஜனங்களின், ஏழைகளின், தொழிலாளர்களின் ஆதரவையும் மதிப்பையும் முழு நம்பிக்கையையும் பெற காங்கிரஸ் சர்க்கார் இப்போது முதற் கொண்டே முயற்சிக்க வேண்டும்.

அட்டைப் பட விளக்கம்

இரும்பு மனிதர்



“சர்ச்சிலை நொறுக்கிவிட்டார்!” “சர்ச்சிலுக்குச் சர்தாரின் சவுக்கடி!” “சர்ச்சில் தவிடுபொடி யானார்!” “சர்தாரின் அணுகுண்டு சர்ச்சிலைச் சின்னாபின்னமாக்கி விட்டது!” என்பது போன்ற பெருந் தலைப்புக்கள் ஒரு நாள் காலையில் வெளியான தினப்பத்திரிகைகளில் காணப்பட்டன. விஷயம் என்னவென்றால், சர்ச்சில் பிரிட்டனில் தொழிற் கட்சி அரசாங்கத்தைத் தாக்கி ஓர் அறிக்கை விட்டிருந்தார். அதில் இந்தியா விஷயத்தையும் பிரஸ்தாபித்து கன்னாபின்னாவென்று உளறி யிருந்தார். சர்ச்சில் எப்படியும் கெட்டிக்காரர் அல்லவா? அவருடைய உளறல் பிதற்றல், பொய், புளுகு எல்லாமே சாமர்த்தியமாகத்தான் இருக்கும். உலகத்தை ஏமாற்றுகிற முறையிலும் இருக்கும். உதாரணமாக சர்ச்சில் துரை காஷ்மீரைப் பற்றிச் சொல்லும்போது “நூற்றுக்குத் தொண்ணூறு பேர் முஸ்லிம்கள் உள்ள காஷ்மீர் மீது இந்திய அரசாங்கம் அநியாயமாய்ப் படை யெடுத்திருக்கிறது!” என்றார். ஆனால் ஹைதராபாத் பிரச்னையைப் பற்றிக் குறிப்பிடும்போது அங்கே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் ஹிந்துக்கள் என்பதைக் குறிப்பிடவில்லை. ‘பழமை பெரும் ராஜ்யமான ஹைதராபாத்தை இந்திய சர்க்கார் ஆக்கிரமிக்கப் பார்க்கின்றனர்!” என்றார்.

மேற்படி சர்ச்சில் அறிக்கையைப் பற்றிப் பல தினப் பத்திரிகைகள் கண்டித்துத் தலையங்கங்கள் எழுதின. ஆனால் சர்தார் வல்லபாய் அறிக்கை வெளிவந்தபோது “இதுதான் சர்ச்சிலுக்குச் சரியான பதில்” என்று எல்லாருமே ஒப்புக் கொண்டார்கள். அதில் ஒவ்வொரு வார்த்தையும் ஒரு அணுகுண்டாகத்தான் இருந்தது. அதைக் காட்டியபோது சர்ச்சில் தாம் ஒன்றும் பதில் சொல்ல விரும்பவில்லை என்றாராம். விரும்பி யிருந்தாலும் பதில் சொல்ல முடிந்திராதுதான்!

பிரிட்டிஷார் இந்தியாவைப் பிளந்துவிட்டு அரசியல் சுதந்திரம் கொடுத்தபோது ஏறக்குறைய அறுநூறு சுதேச ஸம்ஸ்தானங்களுக்கும் சுதந்திரம் கொடுத்தார்கள். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் சுதந்திரக் கொடியை நாட்டப் போவதாகத் திருவாங்கூர் முதலிய சில ஸம்ஸ்தானங்கள் பகற்கனவு கண்டன. அந்த முட்டாள்தனத்தை வல்லபாய் சர்தார் பட்டேல் தமது திறமையினாலும் உறுதியினாலும் இராஜ தந்திரத்தினாலும் ஒழித்துக் கட்டினார். அறுநூறு ஸம்ஸ்தானங்களில் ஹைதராபாத் ஒன்றைத் தவிர பாக்கி எல்லா ராஜ்யங்களும் சுதந்திர இந்தியாவுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டன. அதோடு சின்ன ஸம்ஸ்தானங்களெல்லாம் தொகுதி தொகுதியாகச் சேர்ந்து ஐக்கிய நிர்வாகத்தை ஏற்படுத்திக் கொண்டன. இதன் பயனாக, அறுநூறு ஸம்ஸ்தானங்கள் இருந்த இடத்தில் இப்போது அறுபது ஸம்ஸ்தானங்கள் இருக்கின்றன.

ஸம்ஸ்தானப் பிரச்னை என்பது இப்போது காஷ்மீர் ஒன்று.—ஹைதராபாத் ஒன்று.—ஆக இரண்டு இடத்தில்தான் மிச்சம் இருந்து வருகிறது.

ஹைதராபாத் பிரச்னை சம்பந்தமாக லார்ட் மவுண்ட்பாட்டனுடைய சமரசப் பிரயத்தனத்துக்கு ஜூன் 21-ம் தேதி காலையில் மவுண்ட்பாட்டன் புறப்படும் வரையில் சர்தார் பட்டேல் இடம் கொடுத்திருந்தார். அது ஒன்றும் பயன்படவில்லை என்று மவுண்ட்பாட்டனே ஒப்புக் கொண்டு ஒப்பாரி வைத்த பிறகுதான் சர்தார் தமது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்திருக்கிறார்.

சர்ச்சிலை நொறுக்கித் தள்ளிய இரும்பு மனிதர் ஹைதராபாத்தைக் கூடிய சீக்கிரம் வழிக்குக் கொண்டு வருவார் என்று எதிர்பார்க்கலாம்.

மலை மறைந்தது!

ஏழு வருஷங்களுக்கு முன்பு கோகலே மண்டபத்தில் ஒரு சங்கீதக் கச்சேரி கேட்டுக் கொண்டிருந்தேன். மேடைக்கு எதிரில் முன் வரிசையில் நான் இருந்தேன். மேடையின்மீது சங்கீத வித்வானின் இரு பக்கத்திலும் சில பிரமுகர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்களில் ஒருவருடைய முகத் தோற்றம் எங்கேயோ எப்போதோ பார்த்தது மாதிரி யிருந்தது. ஆனால் யார் என்று இனம் கண்டுபிடிக்க முடியவில்லை. கொஞ்ச நேரம் சங்கீதத்தைக் கூடக் கவனியாமல் யோசித்துப் பார்த்தும் தெரியவில்லை. பக்கத்தில் இருந்த நண்பரைக் கேட்டேன். அவர் என் காதோடு, "இவரைத் தெரியாதா? பிரசித்திபெற்ற மனிதர் ஆயிற்றே? ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் இவர்தான்!" என்றார்.

அதற்கு முன்னால் ராஜா ஸர் அவர்களைப் படங்களிலே மட்டுந்தான் பார்த்திருந்தேன். படங்களிலே பெரிய தலைப்பாகையுடனும் கோட் தரித்துக் கொண்டும் விளங்குவார்கள். இங்கே வெறும் ஷர்ட்டும் அங்கவஸ்திரமும் தரித்து விளங்கினார்கள். "ராஜா ஸர்" என்னும் பட்டத்துக்கோ, தென்னாட்டின் மிகப் பெரிய தனவந்தர் என்பதற்கோ அடையாளம் எதுவும் இல்லை. அதுமட்டுமல்ல. சங்கீதத்தை நன்கு அநுபவித்துக் கொண்டிருந்தார்கள். தலையை அதிகமாய் ஆட்டவுமில்லை; பேஷ், சபாஷ் என்றெல்லாம் கூப்பாடு போடவும் இல்லை. ஆயினும் முகபாவத்திலிருந்தே நல்ல சங்கீத ரஸிகர் என்று தெரிந்தது.

கச்சேரி முடிந்ததும் மேடையில் ராஜா ஸர் அவர்களுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த இன்னொரு செட்டியார்ப் பிரமுகர் கீழே இறங்கி வந்தார். அவர் என் அருகில் வந்ததும் எனக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது. "ராஜா உங்களைப் பார்க்க விரும்புகிறார்கள்!" என்று அவர் சொன்னார். "என்னையா?" "என்னைத்தானா?" என்று இரண்டு மூன்று தடவை கேட்டேன்.

"ஆமாம்; உங்களைத்தான்! கல்கி என்பது நீங்கள்தானே?"

"ஆமாம்."

"உங்களைச் சந்தித்துப் பேசுவதற்குத்தான் ராஜா ஸர் விரும்புகிறார்கள்."

அதற்கு முன்னாலெல்லாம் ராஜா ஸர் அவர்களைப் பற்றி என் அபிப்பிராயம் ஒரு விதமா யிருந்தது. சுருக்கச் சொன்னால் சில சமயம் அவரைப் புலி—சிங்கம் என்றும், வேறு சில சமயம் ராட்சதன்—போட்சதன் என்றும் நினைத்திருந்தேன். ராஜா ஸர் அவர்கள் எப்பொழுதும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பிலேயே இருந்து வந்தவர்கள். ராஜபகதூரி லிருந்து படிப்படியாக ராஜா ஸர் ஆனவர்கள். அதோடு மட்டுமல்லாமல் ராஜா ஸர் அவர்கள் தம்முடைய விரோதிகளை அதா ஹதம் செய்து விடுவார்கள் என்றும் ஒரு வதந்தி பரவி யிருந்தது.

எனவே கொஞ்சம் தயக்கத்துடனேயே அவர்களை நெருங்கிச் சென்றேன்.

"தமிழிசையைப் பற்றி நீங்கள் எழுதியிருந்ததைப் படித்தேன். ரொம்ப சந்தோஷம்!" என்று வெகு சாந்தமான குரலில் ராஜா ஸர் சொன்னார்கள்.

"எனக்கும் சந்தோஷந்தான். தாங்கள் தமிழிசை இயக்கம் ஆரம்பிப்பதற்கு எட்டு வருஷம் முன்னாலிருந்தே நான் தமிழிசையைப் பற்றி எழுதிக் கொண்டு வந்திருக்கிறேன்" என்று பதில் சொன்னேன்.

ராஜா ஸர் அவர்கள் முன்னைவிட அதிக சாவதானமாக, "அப்படியா? ரொம்ப சந்தோஷம். நானும் சில வருஷங்களுக்கு முன்பே தமிழிசையைப் பற்றிப் பேசியிருக்கிறேன். மியூஸிக் அகாடமி மகாநாட்டை ஒரு வருஷம் என்னைத் திறந்து வைக்கச் சொன்னார்கள். அந்தப் பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறேன்!" என்றார்கள்.

"ஓஹோ! இருக்கலாம். எனக்குத் தெரியாமல் போயிற்று" என்று மழுப்பினேன்.

பிறகு ராஜா ஸர் அவர்கள் "சிதம்பரத்தில் தமிழ் இசை மகாநாடு நடத்துகிறோம். அதற்கு வரவேண்டும்" என்றார்கள்.

ராஜா ஸர் அவர்கள் அழைத்த முறையில், "ஆகட்டும்" என்பதைத் தவிர வேறு பதில் சொல்வது அசாத்தியமாயிற்று.

• • •

இதற்குப் பிறகு பல தடவை தமிழிசை இயக்கம் சம்பந்தமாக ராஜா ஸர் அவர்களை நான் சந்தித்துப் பேசும்படி

சேர்ந்தது. அவர்களுடன் பழகப் பழக அவர்களுடைய சிறந்த குணவிசேஷங்களும் உயர்ந்த பண்பாடுகளும் அபூர்வமான ஆற்றல்களும் நன்கு புலனாகிக் கொண்டிருந்தன.

முதன்மையாகத் தெரிய வந்தது அவர்களுடைய ஒப்பற்ற அடக்கம். பொதுவாக உலகமெங்கும் பணக்காரர் என்றாலே அவர்கள் மற்றவர்களைப் பார்க்கும் விதம் வேறுதான். அதிலும் அவசரமாகப் பணம் சம்பாதித்தவர்களும் திடீரென்று பணக்காரர் ஆனவர்களும் "நான் பணக்காரன்", என்று நெற்றியில் எழுதி ஒட்டிக் கொண்டது போல் நடந்து கொள்வதை உலகத்தில் பார்த்திருக்கிறோமல்லவா?

ஆனால் ராஜா ஸர் அவர்கள் மற்றவர்களிடம் நடந்து கொள்ளும்போது சம அந்தஸ்தில் உள்ளவர்களைப் போலவே நடந்து கொள்ளுவார்கள். அவர்களைப் பார்க்க வந்தவர்களுக்கு எந்த விதமான தயக்கமும் ஏற்படுவதில்லை. அடையாறு மாளிகையில் சில சமயம் வெளி வாசற்படியில் வந்து நின்றும் சில சமயம் (உடம்பு அவ்வளவு சௌகரியமாயில்லாவிட்டால்) மேல் மாடிப் படியில் வந்து நின்றும் அழைத்துப் போவார்கள். "வாருங்கள்" "வாருங்கள்" என்ற அவர்களுடைய கம்பீரமான வரவேற்புச் சொற்களில் அன்பும் மரியாதையும் ததும்பி நிற்கும்.

"ரொம்ப சந்தோஷம்" என்று அவர்கள் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லும்போது, தம்முடைய வரவைக் குறித்து இவ்வளவு சந்தோஷப் படுகிறவர்களும் உலகத்தில் உண்டா என்று தோன்றும்.

விருந்தாளிகளை வரவேற்பது ஒருபுறம் இருக்கட்டும். வேலைக்காரர்களை அவர்கள் நடத்திய விதம் ஒரு பெரிய படிப்பினை. பல தடவை அவர்களைச் சந்திக்க நேர்ந்த சந்தர்ப்பங்களில் ஒரு முறையாவது வேலைக்காரர்களை அதட்டுவதையோ கோபித்துக் கொள்வதையோ நான் பார்த்ததில்லை. மோட்டார் டிரைவரிடமோ மற்ற வேலைக்காரர்களிடமோ அவர்கள் பேசும்போது வார்த்தைகளில் அன்பும் ஆதரவும் சொட்டிக் கொண்டிருக்கும். கண்டிப்பான உத்தரவைப் போடும்போதுகூட அவர்களுடைய வார்த்தைகளில் இனிமை குறைவதில்லை.

ஒரு சமயம் அவர்கள் மோட்டார் டிரைவரின் முதுகைத் தட்டிக் கொடுத்து, "சாப்பிட்டு விட்டாயா, அப்பா!" என்று அன்போடு கேட்ட காட்சி இன்றைக்கும் என் மனக் கண்முன் இருக்கிறது.

* * *

எந்தக் காரியத்தை நிறைவேற்றுவதில் ராஜா ஸர் அவர்கள் காட்டிய பிடிவாதமும் உறுதியும் எதிர்ப்புகளுக்கு மனங் கலங்காத தன்மையும் இணையற்றவை.

1942-ல் காங்கிரஸுடன் மாறுபட்டு ராஜாஜி ஆரம்பித்த கிளர்ச்சிக்கு அடுத்த படியாகத் தமிழ் நாட்டில் மூர்த்தண்யமான எதிர்ப்பைக் கிளப்பிய இயக்கம் தமிழிசை இயக்கமாகும்.

ராஜாஜியின் யோசனைக்கு நாட்டில் ஏற்பட்ட எதிர்ப்பு ராஜாஜிக்கு வியப்பை உண்டுபண்ணவில்லை. எதிர்ப்பு அவர்கள் எதிர்பார்த்ததே யாகும்.

ஆனால் தமிழிசை இயக்கத்துக்கு ஏற்பட்ட எதிர்ப்பு ராஜா ஸர் அவர்களுக்கு அர்த்தமாகவே யில்லை. ஆகையால் அந்த எதிர்ப்பு அவர்களைத் திணற அடித்து விட்டது. "தமிழிலே பாடலாம் என்பதற்கு ஒரு எதிர்ப்பா? இதற்கு ஒரு கிளர்ச்சியா?" என்று திகைத்துப் போனார்கள்.

"எதற்காக எதிர்க்கிறார்கள்? உங்களுக்கு ஏதாவது விளங்குகிறதா?" என்று நண்பர்களிடம் அடிக்கடி கேட்டார்கள்.

மிகவும் தூய நோக்கங்களுடன் ராஜா ஸர் அவர்கள் தமிழிசை இயக்கத்தில் ஈடுபட்டார்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகம் கிடையாது.

'சமஸ்கிருத துவேஷம்' காரணமாகத் தமிழிசை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது என்று சிலர் குற்றம் சாட்டியது ராஜா ஸர் அவர்களுடைய மனதைப் பெரிதும் புண்படுத்தியது.

அண்ணாமலைச் சர்வ கலாசாலையில் வெகு காலம் மகாகனம் சீனிவாச சாஸ்திரியார் அவர்கள் வைஸ் சான்ஸலர் பதவி வகித்து வந்தது பிரசித்தமான விஷயம்.

அண்ணாமலை சங்கீத கலாசாலையில் முதலில் மகா வித்வான் சபேசய்யர் அவர்களும் பிற்பாடு டைகர் வரதாச்சாரியார் அவர்களும் தலைமை ஆசிரியர் ஸ்தானத்தை வகித்து வந்தார்கள்.

ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்களிடம் ராஜா ஸர் எவ்வளவு சிநேகப்பான்மை கொண்டிருந்தார்கள் என்பது எனக்கு நேரில் தெரியும். ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்கள் காலஞ்சென்ற பிற்பாடுகூட அந்த சிநேகம்

பிடித்திருந்தது. ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்களின் செல்வக் குமாரியின் கலியாணத்தில் செட்டிநாட்டு ராஜாவின் 'சீர்' வரிசை பெருமை வாய்ந்ததாயிருந்தது.

இப்படியெல்லாமிருந்தும் தமிழிசை இயக்கத்துக்கு ஏதற்காகச் சிலர் சாதித் துவேஷத்தைக் கற்பிக்கிறார்கள் என்பது அவர்களுக்கு விளங்கவேயில்லை.

• • •

தமிழிசை இயக்கம் காரணமாக ஏற்பட்ட ஒரு சிறந்த விளைவு ராஜாஜி அவர்களுடன் ராஜா ஸர் நெருங்கிப் பழகவும் சிநேகம் கொள்ளவும் நேர்ந்ததாகும்.

எதிர்பாராத விதமாகத் தமிழிசை இயக்கத்துக்கு ஏற்பட்ட எதிர்ப்பு ராஜா ஸர் அவர்களின் மனதைப் பெரிதும் புண்படுத்தியது. அதற்கு மருந்தாக இருந்தது ராஜாஜி அவர்கள் அந்த இயக்கத்துக்கு அளித்த ஆதரவாகும். விருப்பு வெறுப்புகளுக்கு உள்ளாகாமல், ஒரு இயக்கத்தை யார் ஆரம்பித்தது யார் நடத்துவது என்றெல்லாம் யோசியாமல், நிர்ப்பட்சபாதமாக யோசித்து நல்ல இயக்கத்தை அது நல்ல இயக்கம் என்பதற்காகவே ஆதரிக்கக்கூடிய ஒரு மகான் இருக்கிறாரே என்று ராஜா ஸர் அவர்கள் பல முறை தம் மகிழ்ச்சியைப் புலப்படுத்தியிருக்கிறார்கள். இந்த மகிழ்ச்சி காரணமாகவே ராஜாஜியைச் சந்திக்கப் போவதிலும் அவர்களுடன் அளவளாவிப் பேசுவதிலும் ராஜா ஸர் அவர்களுக்குப் பெரிதும் ஆர்வம் உண்டாயிற்று. ராஜா ஸர் அவர்களிடம் இருந்த உயர்ந்த ஆற்றல்களையும் சிறந்த பண்பாடுகளையும் அறிந்து கொள்வதற்கு ராஜாஜிக்குச் சந்தர்ப்பம் உண்டாயிற்று. பரஸ்பரம் ஒருவரிடம் ஒருவருக்கு மதிப்பும் சிநேகமும் வளர்ந்தன.

ராஜாஜி இந்திய சுதந்திர சர்க்காரின் மந்திரியாகவும் மேற்கு வங்காள கவர்னராகவும் அமர்ந்த பிற்பாடுகூடச் செட்டி நாட்டு ராஜாவின் நட்பை அவர்கள் மறந்துவிடவில்லை.

ராஜா ஸர் அவர்கள் சிவபதம் அடைவதற்குச் சில நாளைக்கு முன்னால் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைத் தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்துவது என் கடமையாகும்.

• • •

தமிழ் இசைச் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியாரின் திருநாள் கொண்டாடப் படும் என்றும், அப்போது ஒரு பாடல் போட்டி நடத்திப் பரிசு வழங்கப்படும் என்றும் சென்னைப் பத்திரிகைகளில் ஒரு செய்தியை ராஜாஜி பார்த்தார்கள். கல்கத்தாவில் அவர்கள் கவர்னராக இருந்தபோது மேற்படி செய்தி வெளியாயிற்று.

உடனே ராஜாஜிக்கு ஒரு யோசனை தோன்றியது. அது ராஜாஜிக்கு மட்டுமே தோன்றக்கூடிய யோசனைதான். மேற்படி கோபாலகிருஷ்ண பாரதி தினத்தில் பாட்டுப் போட்டியில் ஜயிப்பவருக்குத் தாம் ஒரு தம்பூர் பரிசு அளிக்க விரும்புவதாகவும் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் ராஜா ஸர் அவர்களுக்கு ராஜாஜி கடிதம் எழுதினார்கள்.

இந்தக் கடிதம் ராஜா ஸர் அவர்களுக்கு அளவற்ற ஆனந்தத்தை உண்டாக்கியது. உடனே குமாரராஜா அவர்களை அழைத்துக் கடிதத்தைக் காட்டினார்கள். "இந்த வருஷம் ராஜாஜியின் பரிசு கொடுக்கப் படட்டும். ஆனால் இந்த வருஷத்துடன் விட்டுவிடக் கூடாது. வருஷா வருஷம் ராஜாஜியின் பெயரால் ஒரு பரிசு கொடுக்கப் பட வேண்டும். அதற்காக உடனே ரூ. 3001/- தமிழ் இசைச் சங்கத்துக்கு அனுப்பிவிட வேண்டும்" என்றார்கள். ராஜாஜியின் விருப்பத்தின்படி உடனே தம்பூர் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யும்படியும் சொன்னார்கள்.

அன்று சாயங்காலம் அதாவது ஜூன் மீ 11உ ஒரு கலியாண வைபவத்தில் குமார ராஜா அவர்களை ரஸிகமணி டி. கே. சி. அவர்களும் நானும் சந்திக்கும்படி நேரிட்டது. குமார ராஜா அவர்களின் குதூகலத்தைச் சொல்லி முடியாது. ராஜாஜி அவர்கள் கல்கத்தாவில் இருந்து கொண்டு தமிழிசை இயக்கத்தில் இவ்வளவு அபிமானம் காட்டுகிறார்களே என்று சொல்லிச் சொல்லி வியந்தார்கள். அதோடு நல்ல தம்பூர் வாங்கிக் கொடுக்கும் பொறுப்பையும் என் தலையில் கட்டினார்கள்.

• • •

ராஜாஜியின் கடிதத்தினால் ஆனந்தம் அடைந்த ராஜா ஸர் அவர்கள் பின்வருமாறு பதில் கடிதம் எழுதப் பணித்தார்கள் :

ஒப்பு உயர்விலாத பெருமை வாய்ந்த ஸ்ரீ ராஜாஜி அவர்களுக்கு,

க்ஷேமம், க்ஷேமம்.

தமிழிசைச் சங்கத்தில் தங்கள் அபிமானத்தையும் ஆதரவையும் பலமுறைகளில் காட்டியிருப்பது உலகத்தார் அறிந்த விஷயம்.

அதோடு கோபால கிருஷ்ண பாரதியார் அவர்கள் பெயரைக் குறிப்பிட்டுப் பரிசு அளிக்க வேண்டுமென்று தங்கள் அன்புமிகுவுள்ளதும் பெருமை தருவதுமான கடிதத்தில் எழுதியிருக்கும் எழுத்துக்களை நான் மட்டுமல்ல, தமிழறிந்த பலரும் எந்தக் காலத்திலும் சிறப்பாகக் கொண்டாடக்கூடிய தென்பதில் சந்தேகமில்லை. தாங்கள் மிகவும் அன்புடன் அனுப்பிய இந்தக் கடிதம் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் என்றும் பெருமை தரக்கூடிய தாகும். கோபாலகிருஷ்ண பாரதியார் அவர்கள் பாடல்களைப் பாடிக் கொண்டாடும் தினத்தில் தங்கள் பேரால் பரிசு கொடுப்பது மிகவும் பெருமையாக இருக்கும். நான் இன்று தமிழிசைச் சங்கத்திற்கு இதற்காக 3001-க்கு செக் அனுப்பியிருக்கிறேன். அதை மூலதனமாக வைத்து அதன் வரும்படியைக் கொண்டு பரிசு கொடுக்கும்படியாய்ச் சங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறேன். மேற்படி மூலதனத் தொகையிலிருந்து வருகிற வரும்படியைப் பரிசாய் வருஷந்தோறும் கொடுத்துக் கொண்டாடுவார்கள்.

தமிழிசைச் சங்கத்தில் தங்களுடைய அபிமானமும் ஆதரவும் எப்பொழுதும் இருந்துவர வேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

தாங்கள் இந்திய தேசத்திற்குக் கவர்னர் ஜெனரலாக இருக்கும் பொழுது டில்லியில் தங்கள் மாளிகையில் தங்களை வந்து கண்டு கொள்ள வேணுமென்ற ஆசை மிகவும் எனக்கு இருக்கிறது. அதிக நாளிருப்பதால் தினத்தைக் குறிப்பிட முடியவில்லை. வந்து கண்டு கொள்ளுகிறேன்.

தங்கள

....

மேற்படி கடிதத்தில் கையெழுத்து இடப்படவில்லை. கையெழுத்துப் போடுவதற்குள் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் 'ஏழிசையாய் இசைப் பயனாய்' உள்ள எல்லாம் வல்ல இறைவனுடைய திருவடி நிழலை அடைந்து விட்டார்கள்.

* * *

மேற்படி கையெழுத்து இடப்படாத கடிதம் ராஜா ஸர் அவர்கள் சொல்லி, குமாஸ்தா குறித்துக் கொண்டதாகும். ராஜா ஸர் அவர்கள் சாதாரணமாக எழுதும் கடிதங்களின் தமிழ் நடையை அதில் நன்கு காணலாம். குமாஸ்தா தமிழ் டைப் அடித்துக்கொண்டு வருவதற்குள் ராஜா ஸர் அவர்களின் உடல்நிலை கவலைக்கிடமாயிற்று. பிற்பாடு கையெழுத்து வாங்கிக் கொள்ளலாம் என்று கடிதத்தை வைத்திருந்தார்கள். அது இயலாமலே போயிற்று.

ராஜா ஸர் அவர்கள் காலமான சில நாளைக்குப் பிறகு மேற்படி கையெழுத்துப் போடப்படாத கடிதத்தைக் குமாரராஜா முத்தையா செட்டியார் அவர்கள் ராஜாஜிக்கு அனுப்பி வைத்தார்கள். அத்துடன் குமார ராஜா எழுதிய கடிதத்தில் தம் தந்தையார் விரும்பிய காரியத்தை நிறைவேற்ற உறுதிகொண்டிருப்பதாகவும் தெரியப்படுத்தினார்கள்.

அதற்குப் பதிலாக ராஜாஜி அவர்கள் எழுதிய பதில் பின்வருமாறு :—

கவர்ன்மெண்ட் ஹவுஸ், புது டில்லி
29—6—48

அன்பார்ந்த ஸ்ரீ முத்தையா செட்டியார்
அவர்களுக்கு,

தங்கள் ஜூன் 26வ கடிதத்தைப் படித்தபோது என் உள்ளம் உருகிவிட்டது. பெருந்துக்கம் உண்டாயிற்று : அதன் மத்தியில் தங்கள் தந்தையார் செய்த ஏற்பாட்டை நினைத்துச் சிறிது மகிழ்ச்சியும் ஏற்பட்டது. காலஞ்சென்று போனவர்களை நாம் திரும்பக் கொண்டுவர முடியாது. அன்புக் குரியவர்களைப் பிரிவதால் ஏற்படும் துயரமானது சத்தியப்பொருளை அறிவதற்கு நமக்கு உதவியாக வேண்டும். இந்த உலகத்தின் மாயப் பொய் வாழ்வின் தன்மையை நமக்கு உணர்த்த வேண்டும். தங்களுடைய தந்தை எழுதிய கடிதமானது அவருக்கே உரிய தனித்த பண்போடு இருக்கிறது. சமீப காலத்தில் எங்களுக்குள் ஏற்பட்ட உறுதியான சிநேகத்துக்கு இன்னொரு அத்தாட்சியாக விளங்குகிறது. என்னைப் பார்க்கும் விஷயமாக "அதிக நாள் இருப்பதால் தினத்தைக் குறிப்பிட முடியவில்லை" என்று எழுதியிருப்பதையும், எழுதி விட்டுக் கையெழுத்துக் கூடப் போடாமல் காலஞ்சென்றதையும் நினைக்கும்போது எனக்கு ஏற்படும் உணர்ச்சியை விவரிக்க வார்த்தைகள் இல்லை. ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியார் கீர்த்தனைப் பரிசைப் பற்றித் தங்கள் தந்தையாரின் விருப்பத்தை நிறைவேற்றப் போவதாக மனமுவந்து எழுதியிருக்கிறீர்கள். அதற்காக மிக்க நன்றி செலுத்துகிறேன். தங்களுக்கும் எனக்கும் நேர்ந்த இந்த துக்கமானது தென்னிந்தியாவில் தம்முடைய சங்கீத வித்வான்களுடைய முயற்சிகளை யெல்லாம் புனிதப்படுத்தட்டும்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்) ஸி. ராஜகோபாலாச்சாரி.

ராஜாஜியின் மேற்படி கடிதத்துக்குப் பிறகு நான் எழுதக் கூடிய விஷயமும் இல்லை ; வார்த்தைகளும் இல்லை. எவ்வளவு எழுதினாலும் தமிழகம் அடைந்த நஷ்டத்துக்கு ஈடாகப் போவது இல்லை.

திடீரென்று ஒருநாள் நீலகிரி மலை மறைந்து போய் விட்டதென்றால் நமக்கெல்லாம் எப்படியிருக்கும்? அந்த மாமலை இருந்த இடத்தை வேறு எந்தப் பொருளையாவது இட்டு நிரப்ப முடியுமா? ஒருநாளும் முடியாது. மலை இருந்த இடம் வெகு காலத்துக்கு வெறிச்சென்று தானிருக்கும்.

ராஜா ஸர் அவர்கள் இல்லாத தமிழ்நாடும் தமிழர் சமூகமும் இன்னும் வெகு காலத்துக்கு அவர்கள் இல்லாமற்போன குறையை உணரவேண்டியிருக்கும். —ஆசிரியர்.

No. 3.



முப்பதாம் அத்தியாயம்

இதுவா உன் கதி?

தாரிணியின் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தபோது செளந்தர ராகவனின் உள்ளத்தில் பழைய அன்பும் ஆர்வமும் ததும்பிக் கொண்டிருந்தன. பூகம்பத்தினால் விளைந்த விபரீத நிகழ்ச்சிகளைப் பற்றிப் படித்தபோது அவனுடைய மனம் இளகிற்று. கடிதத்தின் கடைசிப் பகுதி இளகிய மனத்தை மறுபடியும் கல்லாக மாற்றியது.

செளந்தர ராகவனுடைய மனதிற்குள் தன்னைப் போன்ற ஒரு புத்திசாலி இந்தியா தேசத்தில் இதுவரை பிறந்ததில்லை என்ற எண்ணம் குடிகொண்டிருந்தது. தாரிணி அவனிடம் கொண்டிருந்த காதல் அந்த எண்ணத்தைத் தூபம் போட்டு வளர்த்திருந்தது. இப்போது அவள் தனக்கு மனித வாழ்க்கை எடுத்ததின் பலனைப் பற்றிப் போதனை செய்ய ஆரம்பித்தது ஆத்திரத்தை உண்டாக்கியது. கடிதத்தின் அடியில் இருந்த குறிப்பைப் படித்ததும் அந்த ஆத்திரம் பன்மடங்காயிற்று. "அதிகப் பிரசங்கம் என்று தோன்றினால்" என்பது என்ன? அதிகப்பிரசங்கந்தான்! மன்னிக்க முடியாத அதிகப் பிரசங்கம்! சர்க்கார் உத்தியோகம், பெரிய சம்பளம், செளக்கியமான பங்களா வாழ்வு முதலியவை குறித்து இவன் என்ன நமக்கு உபதேசிப்பது? நல்ல வேளை! இப்படிப்பட்ட அதிகப் பிரசங்கியுடன் நமது வாழ்க்கையை என்றென்றைக்கும் பிணைத்துக் கொள்ளாமல் தப்பினோமே? 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்று பெரியவர்கள் தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள்? கலியாண விஷயத்தில், அம்மா சொன்னதைக் கேட்கத் தீர்மானித்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று? அப்பா அடிக்கடி சொல்வதும் ஒரு விதத்தில் உண்மைதான். பெண்கள் வீட்டுக்குள்ளே யிருந்து வாழ்க்கை நடத்துவதுதான் நியாயம். தேசத்தொண்டு என்றும் பொது ஊழியம் என்றும் சொல்லிக் கொண்டு ஸ்திரீகள் வெளியில் கிளம்புவது என்று ஏற்பட்டு விட்டால் அப்புறம் அது எங்கே கொண்டு விடும் என்று யார் சொல்ல முடியும்? தாரிணியின் விஷயத்தில் கொஞ்சம் ஏமாந்துதான் போய் விட்டோம். அவளுடைய முக வசீகரமும் வெளி மினுக்கும் நம்மை ஏமாற்றி விட்டன. பார்க்கப்போனால், சீதாவைக் காட்டிலும் தாரிணி அழகிலே அதிகம் என்று சொல்ல முடியுமா? ஒருநாளும் இல்லை. அல்லது சமர்த்திலே தான் சீதா குறைந்து போய் விடுவாளா? அதுவும் இல்லை! அன்றைக்கு அப்பா, அம்மாவிடம் எவ்வளவு சாதுர்யமாகப் பேசினாள்? அழகோடும் சமர்த்தோடும் சீதா அடக்கம் என்னும் அருங்குணத்தையும் அணிகலனாகப் பூண்டிருப்பாள்.

குடும்ப வாழ்க்கைக்குத் தகுந்தபடி நடந்து கொள்வாள். அப்பா அம்மாவிடம் பயபக்தியோடு இருந்து நல்ல பெயர் வாங்குவாள். பணம் பணம் என்று ஜபம் செய்து கொண்டிருந்த அப்பாவையே மனம் மாறும்படி செய்துவிட்டாளே? அவளுடைய பேச்சைக் கேட்டுவிட்டு, 'பணமும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். வேண்டிய பணம் நீ சம்பாதித்துக் கொள்வாய். இந்தமாதிரி சமர்த்துப் பெண் கிடைப்பது துர்லபம். உனக்குப் பிடித்திருந்தால் எனக்கு ஆட்சேபமில்லை' என்று சொல்லி விட்டாரே? கடவுளுடைய கருணை தன்னிடத்தில் பூரணமாய் இருக்கிறது! ஆகையினாலேதான் தாரிணியோடு தன் வாழ் நாள் முழுதையும் பிணைத்துக்கொண்டு திண்டாடாமல் இந்த மட்டும் தப்ப முடிந்தது. பெண் பார்க்கப் போன இடத்திலேதான் என்ன? கடவுளுடைய சித்தந்தானே லலிதாவைப் பார்க்கப் போன இடத்தில் சீதாவை முதலில் கொண்டு வந்து விட்டது? ஆனால் இந்த விஷயத்தில் கடவுளின் சித்தத்தைக்கூட இரண்டாவதாகத்தான் சொல்ல வேண்டும். அம்மாவுக்குத்தான் முதலில் நன்றி செலுத்த வேண்டும். அம்மா மட்டும் அவ்வளவு பிடிவாதமாயிருந்திராவிட்டால் தான் எப்பேர்ப்பட்ட இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டு வாழ்நாளெல்லாம் திண்டாட வேண்டி நேர்ந்திருக்கும்?

இப்படியெல்லாம் சிறிது நேரம் எண்ணமிட்டுக் கொண்டிருந்த ராகவனுடைய கவனம் உறை பிரிக்காமல் வைத்திருந்த இன்னொரு கடிதத்தின் மீது சென்றது. அதை உடனே எடுத்துப் பிரித்துப் பார்த்தான்.

அதில் அடங்கியிருந்த விஷயம் அவனைத் திடுக்கிட்டுத் திகைக்கும்படி செய்தது. அது முஸபர்பூர் பூகம்பத் தொண்டர்படை முகாமிலிருந்து வந்த கடிதம். அதில் எழுதியிருந்ததாவது:

முஸபர்பூர்,
1—2—34

அன்பார்ந்த ஐயா,

வருத்தம் தரும் ஒரு விஷயத்தைத் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. பம்பாயிலிருந்து வந்த ஒரு தேசசேவிகை—தாரிணி என்னும் பெயர் கொண்டவள்—இந்த முகாமில் தங்கிப் பூகம்பத்தினால் கஷ்டமடைந்த ஜனங்களுக்குத் தொண்டு செய்து வந்தாள். அவளுடைய உயர்ந்த குணங்களினால் இங்கே எல்லாருடைய பாராட்டுதலுக்கும் உரியவளாயிருந்தாள். நேற்று மத்தியானம் விடுதியில் சாப்பிட்டுவிட்டுப் போனவள் இரவு திரும்பி வரவில்லை. துரதிர்ஷ்டவசமாக அவளிடம் ஒரே ஒரு துர்வழக்கம் இருந்தது. பூகம்பத்தினால் இந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் பூமிப் பிளவுகளுக்குப் பக்கத்தில் போய் அடிக்கடி எட்டிப் பார்த்துக்கொண்டு நிற்பாள். நாங்கள் பல முறை எச்சரித்தும் அவள் கேட்கவில்லை. கடைசியாக நேற்று பிற்பகல் தாரிணியைப் பார்த்தவர்கள் அத்தகைய பிளவு ஒன்றுக்குப் பக்கத்தில் நின்று அவள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததாகச் சொல்கிறார்கள். எவ்வளவோ தேடிப் பார்த்தும் தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. "அன்று ஜனக குமாரி பூமிக்குள் போனதுபோல் நானும் போய்விட விரும்புகிறேன்" என்று தாரிணி அடிக்கடி சொல்லுவது வழக்கம். அவளுடைய விருப்பம் நிறைவேறிவிட்டதென்றே வருத்தத்துடன் முடிவு செய்ய வேண்டியதாயிருக்கிறது. தாரிணியின் உற்றார் உறவினரைப் பற்றி எங்களுக்கு யாதொரு தகவலும் இல்லை. அவளுடைய டைரியில் தங்கள் விலாசம் குறிக்கப்பட்டிருந்தபடியால் இதைத் தங்களுக்கு எழுதுகிறோம். தாரிணியின் பந்துக்களைத் தங்களுக்குத் தெரிந்திருந்தால் அவர்களுக்கு அறிவிக்கக் கோருகிறோம். ஒருவேளை தாரிணி எங்கேயாவது வழி தப்பிப் போயிருந்து திரும்பி வந்து விட்டால் தங்களுக்கு உடனே தெரியப்படுத்துகிறோம்.

இங்ஙனம்
சரளா தேவி.

இந்தக் கடிதத்தின் முதல் சில வரிகளைப் படிக்கும்போதே ராகவனுக்குத் தாரிணிமீது ஏற்பட்டிருந்த ஆத்திரமெல்லாம் மாறிவிட்டது. அவனுடைய இருதயத்தில் அன்பும் இரக்கமும் ததும்பின. கடிதத்தை முடிக்கும்

போது கண்களில் கண்ணீர் ததும்பியது. எழுந்து சென்று பூட்டியிருந்த அலமாரியைத் திறந்து அதற்குள்ளிருந்த தாரிணியின் படத்தை எடுத்தான். வெகுநேரம் அதை உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தான். தாரிணியின் பேச்சுக்களும் முகபாவங்களும் நடை உடை பாவனைகளும் ஒவ்வொன்றாகவும் சேர்ந்தாற் போலவும் அவன் மனக் கண் முன்னால் வந்து கொண்டிருந்தன. "அடடா! இதுவா உன் கதி?" என்று எண்ணிய போது ராகவனுடைய கண்ணில் ததும்பிய கண்ணீர் வழிந்து தாரிணியின் படத்தின் பேரில் முத்து முத்தாக உதிர்ந்தது. அதே சமயத்தில் அவனுடைய உள்ளத்தில் ஒரு அதிசயமான நிம்மதியும் உண்டாயிற்று!

அப்புறம் ஒரு வாரம், பத்து நாள் வரையில் மூஸபர்பூரிலிருந்து வேறு ஏதேனும் கடிதம், — நல்ல செய்தி கொண்ட கடிதம்,—ஒரு வேளை வரலாம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். கடிதம் ஒன்றும் வரவில்லை.

முப்பத்தோராம் அத்தியாயம்

மதகடிச் சண்டை

ராஜம்பேட்டைத் தபால் சாவடியின் சுவரில் மாட்டியிருந்த காலெண்டர் ஏப்ரல்மீ 1உ என்று காட்டியது.

ஸ்ரீ பங்காரு நாயுடு பி.பி.எம். தமது சிங்காதனத்தில் அமர்ந்து ஸ்டாம்புக் கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தார்.

தபால்கார பாலகிருஷ்ணன் தபால்களுக்கு முத்திரை குத்திக் கொண்டிருந்தான்.

"பாலகிருஷ்ணா! இது என்ன தொல்லை? தலையைக் காணோம், அப்பா!" என்றார் பங்காரு நாயுடு.

"அதுதான் இருக்கே, ஸார்!" என்றான் பாலகிருஷ்ணன்.

"இருக்கா? எங்கே இருக்கு?"

"கழுத்துக்கு மேலே தொட்டுப் பாருங்க, ஸார்!"

"இந்தத் தலையைச் சொல்லவில்லை, தம்பி! இது போனாலும் பரவாயில்லையே? தபால் தலையை யல்லவா காணவில்லை?"

"எத்தனை தலை, என்னென்ன தலை காண வில்லை, ஸார்!"

"இரண்டு முக்காலணாத் தலையைக் காணோம்!"

"இவ்வளவுதானே? மசால்வடைக் கணக்கில் எழுதிவிடுங்க, ஸார்!"

"உன் யோசனையைக் கேட்டால் உருப்பட்டாற் போலத் தான். இருக்கட்டும்: இன்னுமா நீ தபாலுக்கு முத்திரை போடுகிறாய்?"

"பட்டாமணியார் வீட்டுக் கலியாணம் வந்தாலும் வந்தது; முத்திரை அடிச்சு அடிச்சு என் கையெல்லாம் வலி கண்டுடுத்து, ஸார்!"

"ஒரு கலியாணத்துக்கு இரண்டு கலியாணமாக நடக்கப் போகிறதல்லவா? மொத்தம் ஆயிரம் கலியாணக் கடிதாசு அச்சடிச்சாங்களாம். அப்படியும் போதவில்லையாம்!"

"இரண்டு கலியாணமும் நடக்கும் என்று நினைக்கிறீர்களா, ஸார்!"

"பின்னே நடக்காமல்? எல்லாம் நிச்சயம் ஆகிக் கடுதாசி கூட அச்சிட்டு அனுப்பி விட்டார்களே!"

"கடுதாசி அச்சிட்டால் சரியாப் போச்சா? நான் ஒரு ஜோசியனைக் கேட்டேன். இரண்டு கலியாணத்தில் ஒன்று நடக்கிறது சந்தேகம் என்று சொன்னான்."

"நீ என்னத்துக்காக இந்த விஷயமாய் ஜோசியம் கேட்டாய்?"

"சும்மாத்தான் கேட்டு வச்சேன்!"

"இது தான் உனக்கு ஜோலி போயிருக்கிறது. அதனாலே தான் மூன்று நாள் கடிதங்களை டெலிவரி செய்யாமல் வைத்திருக்கிறாய். பட்டாமணியார் வீட்டுக் கடிதங்களை உடனே கொண்டு போய் அவரிடம் கொடுத்து விடு, அப்பா! ஏதாவது முக்கிய விஷயமாயிருக்கும்."

"பிரமாத முக்கிய விஷயம்! அது கிடக்கட்டும், ஸார்! இரண்டு நாள் முன்னே பின்னே கொண்டு போய்க் கொடுத்தால் தலையா போய்விடும்?"

"தலை போகிறதற்காகச் சொல்லவில்லை, தம்பி! பட்டாமணியார்



நல்ல மனுஷர்! நமக்குக்கூடக் கலியாணத்துக்குக் கடிதாசி வைத்திருக்கிறார். ஒரு வேளை கலியாணச் சாப்பாடு பலமாகக் கிடைக்கும். நீ கூட வரப்போகிறாய் அல்லவா?"

"நான் வரமாட்டேன். நம்மைத் தனியாக வைத்தல்லவா சாப்பாடு போடுவார்கள்? இந்தப் பார்ப்பாரச் சாதியே இப்படித்தான்."

"பிராமணத் துவேஷம் பேசாதே, தம்பி! சாஸ்திரத்திலே என்ன சொல்லியிருக்கிறதென்றால், ஆதி காலத்தில் கடவுள் பிராமணர்களை முகத்திலிருந்தும், க்ஷத்திரியர்களைத் தோளிலிருந்தும் ..."

"நிறுத்துங்கள், ஸார்! இந்தப் பழங்கதை யெல்லாம் யாருக்கு வேணும்? எல்லாம் பிராமணர்களே எழுதி வைச்ச கட்டுக் கதை தானே! இந்தக் காலத்திலே பிராமணனும் கிடையாது; சூத்திரனும் கிடையாது. எல்லாரும் மனிதர்கள்!"

"அப்படியானால், சாஸ்திரமெல்லாம் பொய்யா? சாஸ்திரம் பொய்யென்றால் கிரகணத்தைப் பார்! —என்று வசனம் சொல்கிறதே!"

"வெள்ளைக்காரன் கூடத்தான் கிரகணத்தைக் கண்டுபிடித்துச் சொல்கிறான். மனிதனுக்கு மனிதன் வித்தியாசப் படுத்தும் சாஸ்திரங்களைத் தீயிலேயே போட்டுக் கொளுத்த வேண்டும்!"

"நீ இந்த சுயமரியாதைக்காரர்களின் கூட்டங்களுக்குப் போகிறாயோ?"

"சுயமரியாதைக் கூட்டங்களுக்கும் போகிறேன்; காங்கிரஸ் கூட்டங்களுக்கும் போகிறேன்."

"அப்படி என்றால் நீ உருப்பட்டாற் போலத்தான். போனால் போகட்டும். பட்டாமணியார் வீட்டு லெட்டர்களை



உடனே கொண்டு போய்க் கொடுத்து விடு. அந்த பம்பாய் அம்மாவுக்கும் பெண்ணுக்கும் கூடக் கடிதங்கள் இருக்கின்றன."

"அந்த பம்பாய்ப் பெண் இருக்கிறதே! அது சுத்த அரட்டைக்கல்லி! நான் மூந்தா நாள் அவர்கள் வீட்டுக்குப் போயிருந்தேன். என்னைப் பார்த்து, டா, டீ, போட்டுப் பேசிற்று. 'இந்தா, அம்மா! டா, டீ எல்லாவற்றையும் பம்பாயிலே வைத்துக் கொள். இங்கே வேண்டாம்!' என்று சொல்லி விட்டேன்."

"கிட்டாவய்யர் குழந்தையின் குணம் வராதுதான். ஆனால், வந்த போது பம்பாய்ப் பெண்ணும் நல்ல குணமாய்த்தானிருந்தது. எட்டு நூறு ரூபாய் சம்பளக்காரன் கலியாணம் பண்ணிக்கிறேன் என்றதும் கொஞ்சம் கர்வம் வந்திருக்கலாம்!"

"எட்டு நூறு சம்பளக்காரனாயிருந்தால் என்ன? எட்டாயிரம் சம்பளக்காரனாயிருந்தால் என்ன? யாராயிருந்தாலும் எனக்கு ஒன்றுதான்! டியூடி என்றால் டியூடி! சிநேகம் என்றால் சிநேகம்! அப்படி அந்தப் பம்பாய்ப் பெண்ணுக்குக் கலியாணம் நடக்கிறது என்பதும் நிச்சயமில்லை; நின்று போனாலும் போய்விடும்."

"அப்படி உன் வாடாலே நீ எதற்காகச் சொல்கிறாய்?"

"பின்னே வாயால் சொல்லாமல் கையாலேயா சொல்லுவாங்க, ஸார்!"

இவ்விதம் சொல்லிக் கொண்டே பாலகிருஷ்ணன் தபால் பையை எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டான்.

பாலகிருஷ்ணன் வெளியே போய்ச் சிறிது நேரத்துக்கெல்லாம் சூரிய நாராயணன் தபால் சாவடிக்கு வந்தான். போஸ்டு மாஸ்டர் பங்காரு நாயுடுவைப் பார்த்து, "எங்க வீட்டுக்கு ஏதாவது கடிதம் இருக்கிறதா, ஸார்!" என்று கேட்டான்.

"ஓ! இருக்கிறதே! உனக்கு, அப்பாவுக்கு, பம்பாயிலிருந்து வந்திருக்கிற அம்மாவுக்கு, அந்த அம்மாவின் பெண்ணுக்கு — எல்லாருக்கும் இருக்கிறது. பாலகிருஷ்ணன் எடுத்துக்கொண்டு போயிருக்கிறான். எதிரே அவனைப் பார்க்கவில்லையா?"

"பார்க்கவில்லையே! எதிரே காணவில்லையே!" என்று சொல்லிக் கொண்டே சூரியா வெளியேறினான்.

அப்போது சூரியா வெகு உற்சாகமான மனோ நிலையில் இருந்தான். அவன் இஷ்டப்படியே எல்லா ஏற்பாடுகளும் ஆகியிருந்தன. அவனுடைய முயற்சியினால் லலிதாவுக்கும் பட்டாபிராமனுக்கும் கலியாணம் நிச்சயமாகி விட்டது. இதில் இருதரப்பாருக்கும் வெகு சந்தோஷம். சீதாவின் கலியாணத்தைத் தனியாக எங்கேயாவது ஒரு கோயிலில் நடத்தி விடலாமென்று பம்பாய் அத்தை சொன்னாள். மற்றவர்களும் அதற்குச் சம்மதிப்பார்கள் போலிருந்தது. சூரியாதான் அது கூடாது என்று வற்புறுத்தி இரண்டு கலியாணமும் ஒரே பந்தலில் நடத்த வேண்டுமென்று திட்டம் செய்தான்.

இதனாலெல்லாம் உற்சாகம் கொண்ட சூரியா கலியாண ஏற்பாடுகளில் மிகவும் சிரத்தை கொண்டு அப்பாவுக்கு ஒத்தாசையாகத் தானே பல காரியங்களைச் செய்து வந்தான். நல்ல வேளையாக எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையும் முடிந்து விட்டது. முகூர்த்தத் தேதிக்குப் பத்து நாள் முன்னதாகவே சூரியா கிராமத்துக்கு வருவது சாத்தியமாயிற்று.

மாப்பிள்ளை அழைப்புக்கு 'டிரஸ்' வாங்குவது சம்பந்தமாகச் சூரியா பட்டாபிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான். அதற்குப் பட்டாபியின் பதிலை எதிர்பார்த்து இன்று தபால் சாவடிக்கு வந்தவன் ஏமாற்ற மடைந்தான். திரும்பிப் போகும்போது சாலையின் இருபுறமும் பார்த்துக்கொண்டு போனான். பாலகிருஷ்ணன் எங்கேயாவது சாலை ஓரத்தில் மரத்தின் மறைவில் உட்கார்ந்து சுருட்டுக் குடித்துக் கொண்டிருக்கலாம் அல்லவா?

அவன் எதிர்பார்த்தது சரியாயிற்று. சாலைத் திருப்பம் ஒன்றில் வாய்க்கால் மதகடியில் பாலகிருஷ்ணன் உட்கார்ந்து ஒரு கடிதத்தைக் கவனமாகப் படித்துக் கொண்டிருந்தான்.

எவ்வளவு கவனமாக என்றால், சூரியா அவனுக்குப் பின்னால் வெகு அருகில் வந்து நின்றதுகூட அவனுக்குத் தெரியவில்லை.

சூரியாவுக்கு அப்போது ஒரு விசித்திரமான சந்தேகம் உதித்தது. ஆகையால் 'பாலகிருஷ்ணா!' என்று கூப்பிடப் போனவன் அடக்கிக்கொண்டு கீழே பாலகிருஷ்ணன் பக்கத்தில் கிடந்த கடிதத்தின் உறையை உற்றுப் பார்த்தான். அதில் பம்பாய் அத்தையின் விலாசம் எழுதியிருந்தது.

சூரியாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "அடே இடியட்! என்னடா செய்கிறாய்?" என்று கர்ஜித்தான். பாலகிருஷ்ணன் திடுக்கிட்டுத் திரும்பி "என்னடா என்னை 'இடியட்' என்கிறாய்? நான் ஒன்றும் இடியட் இல்லை. நீ இடியட்; உங்கள் அப்பா இடியட்; உங்கள் தாத்தா இடியட்!" என்றான்.

சூரியாவின் கோபம் எல்லை மீறி விட்டது. "என்னடா, குற்றமும் செய்துவிட்டுச் சக்கர வட்டமாகப் பேசுகிறாய்?" என்று கர்ஜித்துக் கொண்டு பாலகிருஷ்ணன் கழுத்தில் கையை வைத்தான். உடனே பாலகிருஷ்ணன் சூரியாவின் பேரில் ஒரு குத்து விட்டான். இருவரும் குஸ்திச் சண்டை செய்யத் தொடங்கினார்கள்.

மதகடியிலே சண்டை நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில் சாலையில் ஒரு பெட்டி வண்டி வந்து கொண்டிருந்தது. அதில் சீதா, லலிதா, ராஜம்மாள் மூவரும் இருந்தார்கள். அவர்களுடைய கண்ணும் கவனமும் சண்டை போட்டவர்களின் மீது ஏக காலத்தில் சென்றன.

"ஐயோ! இது என்ன? சூரியாவும் தபால்கார பாலகிருஷ்ணனும் சண்டை போடுகிறார்களே!" என்று லலிதா கூவினாள்.

"ஆமாண்டி! இது என்ன வெட்கக்கேடு?" என்றாள் சீதா.

ராஜம்மாள் மிக்க வருத்தத்துடன் "சூரியா! சூரியா! இது என்ன நடு ரோட்டில் நின்று சண்டை! நிறுத்து!" என்று கூவினாள்.

ராஜம்மாளின் குரல் கேட்டதும் இருவரும் சண்டையை நிறுத்தி வெட்கிப் போய் நின்றார்கள்.

"சூரியா! வா! வண்டியில் ஏறிக் கொள்ளு! வீட்டுக்குப் போகலாம்!" என்றாள் ராஜம்மாள்.

"அத்தை! இது விளையாட்டுச் சண்டை; வினைச் சண்டை இல்லை. நீங்கள் போங்கள். நான் இதோ பின்னோடு வருகிறேன்" என்றான்.

"நிச்சயந்தானா? — பாலகிருஷ்ணா! சூரியா சொல்கிறது உண்மையா?" என்று அத்தை கேட்டாள்.

"ஆமாம், அம்மா! நாங்கள் சும்மாத்தான் சண்டை போட்டோம்!" என்றான் பாலகிருஷ்ணன்.

வண்டி மேலே நகர்ந்தது.

சீதா லலிதாவைப் பார்த்து, "நீ இவ்வளவு சமர்த்தாயிருக்கிறாயே, லலிதா! உன் அண்ணா சூரியா மட்டும் ஏன் இத்தனை அசடாயிருக்கிறான்?" என்றாள்.

"அப்படிச் சொல்லாதே, சீதா! சூரியா ஒன்றும் அசடு இல்லை. ரொம்பச் சமர்த்து; மிக்க நல்ல பிள்ளை. சண்டை போட்டதற்கு ஏதாவது காரணம் இருக்கும்; அப்புறம் தனியாக விசாரித்தால் தெரியும்" என்றாள் ராஜம்மாள்.

வண்டிக்காரனும் சேர்ந்து, "ஆமாம், அம்மா! நம்ம சின்ன ஐயா ரொம்பச் சமர்த்து; இப்போது கொஞ்சநாளாய்த்தான் ஒரு மாதிரியாய் இருக்கிறார்!" என்றான்.

* * *

வண்டி கொஞ்ச தூரம் போன பிறகு சூரியா, "பாலகிருஷ்ணா! உன் மேல் நான் கை வைத்தது பிசகுதான்; அதற்காக வருத்தப்படுகிறேன். ஆனால் நீ செய்த காரியமும் பிசகுதானே? பிறருக்கு வந்த கடிதத்தை நீ பிரித்துப் பார்க்கலாமா? அதுவும் நீ போஸ்டுமாஸ்டராயிருந்து கொண்டு இவ்விதம் செய்யலாமா!" என்றான்.

"தப்புத்தான்; ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நல்ல எண்ணத்துடனேதான் செய்தேன். இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தால் உனக்கும் அது தெரியும்!" என்று சொல்லிப் பாலகிருஷ்ணன் கடிதத்தைச் சூரியா கையில் கொடுத்தான்.

சூரியா அந்தக் கடிதத்தில் முதல் நாலைந்து வரிகள் படித்தவுடனேயே அவனுடைய முகம் சிவந்தது.


"இந்த மாதிரி கடிதம் இது என்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்று பாலகிருஷ்ணனைப் பார்த்துச் சூரியா கேட்டான்.

"நேற்று ஒரு கார்டு வந்தது. அதைத் தற்செயலாகப் பார்த்தேன். கன்னா பின்னா என்று எழுதியிருந்தது. இந்தக் கவரைப் பார்த்ததும் ஒரு மாதிரி சந்தேகம் உதித்தது. பிரித்துப் பார்ப்பது நல்லது என்று எண்ணினேன். நான் சந்தேகப்பட்டபடியே இருக்கிறது. அதற்கென்ன? உனக்கு ஆட்சேபம் இல்லையானால் இதை ஒட்டி அந்த அம்மாளிடம் டெலிவரி செய்து விடுகிறேன். இனிமேல் வரும் கடிதங்களையும் அப்படியே கொடுத்து விடுகிறேன். ஆனால் என் மேலே கலபமாகக் கையை வைக்கலாம், என்னை மிரட்டி விடலாம் என்று மட்டும் நினைக்காதே. நான் நல்லவனுக்கு நல்லவன்; சாதுவுக்குச் சாது; ரவுடிக்கு ரவுடி; கில்லாடிக்குக் கில்லாடி! தெரியுமா?"

"நான் உன் மேல் கை வைத்தது தப்பு என்றுதான் முன்னமே சொன்னேனே! இப்போதும் சொல்கிறேன். அதை மறந்து விடு. எனக்கு நீ ஒரு உதவி செய்ய வேண்டும். இந்தக் கல்யாணம் நடந்து முடிகிற வரையில் எங்கள் வீட்டுக்கு வருகிற கடிதங்களையெல்லாம் என்னிடமே கொடு. நான் பார்த்து உசிதப்படி அவரவர்களிடம் சேர்ப்பித்து விடுகிறேன்!" என்றான் சூரியா.

"அது ரூலுக்கு விரோதம். கடிதங்களை அந்தந்த விலாசதாரிடந்தான் சேர்ப்பிக்க வேண்டும். இருந்தாலும் நீ கேட்கிறதற்காக அப்படியே உன்னிடம் கொடுக்கிறேன். ஆனால் ஒரு விஷயம் ஞாபகம் வைத்துக் கொள். நான் பெரிய ரவுடி; யாருக்கும் கொஞ்சம்கூட பயப்பட மாட்டேன்!" என்றான் பாலகிருஷ்ணன்.

ஒன்பதாவது சாம்ராஜ்யம்



1

நேயர்களுக்கு நமஸ்காரம். டில்லி நகருக்குப் போயிருந்தேன். ஒரு வாரம் இருந்து விட்டுத் திரும்பினேன். "டில்லி வெளியிலே கலந்து கொண்டாரவர் திரும்பியும் வருவாரோ?" என்று கேட்கலாம். திரும்பி வருவதற்கு அவ்வளவாக மனமில்லைதான்! ஆயினும் உங்களுடைய பிரதிநிதியாகப் போனேன் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டு டில்லி வெளியில் முழுதும் கலந்து விடாமல் திரும்பி வந்தேன்.

டில்லிமா நகரம் ஏற்கெனவே எட்டு சாம்ராஜ்யங்களின் தலை நகரமாயிருந்திருக்கிறது. இப்போது, அதாவது ஜூன் மீ 21உ ஒன்பதாவது இந்திய சாம்ராஜ்யம் அந்த மா நகரில் ஆரம்பமாயிற்று. அந்த வைபவத்தைக் கண்டு ஆனந்தித்தேன். ஆனந்தத்தை நேயர்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

* * *

கல்கத்தாவில் ராஜாஜி மேற்கு வங்காள கவர்னர் பதவி ஏற்றபோது கல்கத்தாவுக்குத் தற்செயலாகப் போய்ச் சேர்ந்திருந்தேன். இப்போது ராஜாஜி கவர்னர்-ஜெனரல் பதவி ஏற்கும் சமயத்தில் டில்லிக்குப் போகாமல் இருக்கலாமா? போகத்தான் வேண்டும் என்று திட்டம் போட்டாயிற்று. ஆனால் திட்டத்தை எப்படி நிறைவேற்றுவது? சாதாரணமாக டில்லிக்குப் போவதற்குக் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸில் ஏறுவது வழக்கம். ஆனால் இந்தக் காலத்தில் அந்த ரயிலை அவ்வளவாக நம்புவதற்கில்லை. 1948 ஜூனில் ஏறினால் 1949 ஆகஸ்டில் போய்ச் சேர்ந்தாலும் சேரும்; அல்லது போகும் வழியில் எங்கேயாவது காணாமற் போனாலும் போய் விடும்!

"டில்லிக்கு எப்படிப் போவது?" என்று எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் கருட வாகனம் வந்து நின்றது. "கருடா! சுகமா?" என்று கேட்டேன்.

"ஆகாசத்தில் இருக்கிற வரையில் சுகந்தான்; வருகிறீரா?"

"தற்சமயம் வைகுண்டத்துக்குப் போகும் உத்தேசம் இல்லை; ஒரு தொடர் கதை எழுதிக் கொண்டிருக்கிறேன்!..."

"நான் அந்தக் கருடன் இல்லை: டில்லிக்குப் போகும் கருடன்."

"ஓகோ! அப்படியா? வழியில் நைஜாம் ராஜ்யத்தில் இறங்குவாயா?"

[நைஜாம் ராஜ்யத்தில் இறங்குவது பற்றி எனக்குக் கொஞ்சம் பயம் என்பதை இங்கே சொல்லி வைக்கிறேன். நைஜாம் சர்க்காருக்கு இப்போதெல்லாம் காகிதப் பசி அசாத்தியமாயிருக்கிறது. பத்திரிகைகளைப் பறிமுதல் செய்வதைப் பற்றி அடிக்கடி செய்தி வந்து கொண்டிருக்கிறது. என்னுடைய பெயரும் பத்திரிகையின் பெயரும் ஒன்றாயிருப்பதில் ஏதாவது குழப்பம் ஏற்படலாமல்லவா? "நான் பத்திரிகையில்லை; மனுஷன்!" என்று சொல்லலாம். ஆனால் ஜனாப் ரஸ்வி பாதுஷா பகதூர் அவர்களின் திருச் செவியில் அது ஏறவேண்டுமே!]

கல்கி

"கைஜாம் ராஜ்யத்தில் இறங்க மாட்டேன். விசாகப்பட்டினத்தில் இறங்கி விட்டு நேரே நாகபுரிக்குப் போவேன்" என்றார் கருடபகவான்.

"ஓஹோ! நீ ரொம்ப புத்திசாலியான முன் யோசனையுள்ள கருடனாயிருக்கிறாயே? யாருடைய கருடன் நீ!" என்று கேட்டேன்.

"டாக்டர் அழகப்பச் செட்டியாருடைய ஜூப்பிட்டர் கருடன்!" என்று பதில் வந்ததும் எனக்கு அப்போதே ஆகாசத்தில் பறப்பது போன்ற உற்சாக உணர்ச்சி உண்டாகி விட்டது.

"பலே பேஷ்! நம்முடைய டாக்டர் அழகப்பச் செட்டியாரின் கருடனா நீ! அப்படியானால் இன்னும் பத்து—இருபது கூட வாங்கிக் கொண்டாலும் சரிதான்! டிக்கட்டைக் கொடு!" என்றேன்.

புறப்படும்போது கருடதரிசனம் ஆனால் எடுத்த காரியம் வெற்றி என்கிறார்கள்: கருட வாகனத்திலேயே போனால் காரியம் சித்தி யாகாமலா போய் விடும்?

• • •

ஆகாச மார்க்கப் பிரயாணம் சுகமாய்த்தா னிருந்தது. அவரவர்கள் ஆசனத்தில் உட்கார்ந்ததும் 'ஹோஸ்டஸ்' என்னும் வித்யாதர கன்னிகை வந்து அவரவர்களுடைய ஸீட்டுடன் சேர்த்துப் பெல்ட் போட்டுக் கட்டி விடுகிறாள். அடுத்தபடியாக என்ன ஆபத்து வரப் போகிறதோ என்று எண்ணிக் கொண்டிருக்கையில், கொஞ்சம் பஞ்சு கொண்டு வந்து காதிலே வைத்து அடைத்துக் கொள்ளச் சொல்கிறாள். காந்தி மகாத்மா கைக்கொண்டிருந்த மூன்று விரதங்களில் இரண்டு விரதங்களை ஆகாச விமானப் பிரயாணம் செய்பவர்கள் கண்டிப்பாக அனுஷ்டித்தே தீர வேண்டும்.

காந்திமகான் எழுதுவதற்கு உபயோகித்த மேஜை மீது சீன தேசத்துச் சிறு பொம்மைகள் மூன்று வைத்திருக்குமாம். அந்தப் பொம்மைகளில் ஒரு பொம்மை இரண்டு காதுகளையும் இரண்டு கைகளால் பொத்திக் கொண்டிருக்கும். இன்னொன்று இரண்டு கண்களையும் மூடிக் கொண்டிருக்கும். இன்னொன்று கைகளினால் வாயைப் பொத்திக் கொண்டிருக்கும். இந்த மூன்று பொம்மைகளும் தங்களுடைய சமிக்ஞைகளினால் போதிக்கும் விஷயங்கள்: (1) "தீய விஷயங்களைக் கேளாதே!" (2) "தீய விஷயங்களைப் பாராதே!" (3) "தீய விஷயங்களைப் பேசாதே!" என்பவையாகும்!


ஆகாச விமானப் பிரயாணம் செய்கிற ஒருவர் காதிலே பஞ்சை வைத்து அடைத்துக் கொள்வதால் தீய விஷயங்களைக் கேட்க முடியாது: மற்றவர்களுக்குக் காது கேளாதபடியால் தீய விஷயங்களைப் பேச முடியாது. கண்களையும் கட்டி மறைத்து விட்டால் மூன்றாவது போதனையையும் கைக் கொண்டதாகி விடும். அப்புறம் ஒரே நிர்மலானந்த சுகந்தான்! கண்ணைக் கட்டாவிட்டால் தாமாகவே கண்களை மூடிக் கொண்டு தூங்காமல் தூங்கிச் சுகம் பெறும் நிலையை அடையலாம்.

• • •

காலை ஏழரை மணிக்கு மீனம்பாக்கத்தில் புறப்பட்ட விமானம் மாலை நாலரை மணிக்குப் புதுடில்லி வில்லிங்டன் விமான நிலையம் போய் இறங்கியது. இறங்கிய போது அனல் காற்று அடித்துக் கொண்டிருந்தது. தீயில் இறங்குவது போலவே தோன்றியது. சரபங்க முனிவர் ஸ்ரீ ராமனைத் தரிசித்தவுடனே தீயில் இறங்கினாரே. டில்லியில் வசித்தவர்களுக்கு அது ஒன்றும் பிரமாத காரியம் இல்லை என்று எண்ணினேன்.

விமானத்திலிருந்து இறங்கிய எங்களிடமிருந்து போலீஸார் எங்கிருந்து வருகிறோம், தில்லியில் எங்கே தங்கப் போகிறோம் என்கிற விவரங்களை விசாரித்துக் குறித்துக் கொண்டார்கள். நான் தகவல் சொன்னதும் "சரி; போகலாம்" என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் என்னுடன் போட்டோ எடுப்பதற்காக வந்த அமெரிக்கர் எல்லிஸ் ஆர். டங்கனை அப்படிச் சும்மா விட்டுவிட வில்லை. பாஸ்போர்ட், அதாவது அநுமதிச் சீட்டு எங்கே என்று கேட்டார்கள். இதிலிருந்து அன்னிய நாட்டார் இப்போதெல்லாம் இந்தியாவில் பிரயாணம் செய்ய வேண்டுமானால் கையோடு அநுமதிச் சீட்டு எடுத்துப் போகவேண்டும் என்று அறிந்துகொண்டேன். ஸ்ரீ எல்லிஸ் ஆர். டங்கனுக்கு இது கோபத்தை உண்டாக்கியது: எனக்கோ ஒரே குதூகலமாயிருந்தது.





ஒரு வெள்ளைக்காரரைப் பார்த்து நம் இந்தியப் போலீஸார் இப்படியெல்லாம் விசாரித்து நிர்ப்பந்திக்கும் காலமும் வந்ததே என்று மகிழ்ச்சியடைந்தேன். ஸ்ரீ டங்கன் தம் பாஸ்போர்ட்டைச் சென்னையிலிருந்து தந்தி கொடுத்து வரவழைத்துக் காட்டுவதாக உறுதி கூறிய தன்பேரில் தில்லி மாநகரத்துக்குள் பிரவேசிக்க அநுமதிக்கப் பட்டார்.

* * *

ஜூன் மீ 18உ வெள்ளிக்கிழமை தில்லியை யடைந்தேன். தில்லி சேர்ந்ததும் முதல் காரியமாகக் காந்திமகாத்மாவின் புனித உடல் தகனமான ராஜகாட் என்னும் புண்ணிய ஸ்தலத்தைத் தரிசிக்கச் சென்றேன். அந்தப் புண்ணிய ஸ்தலத்தில் இப்போது செமண்டினால் ஒரு சிறு மேடை கட்டி யிருக்கிறார்கள். சுற்றிலும் குட்டையான கைப்பிடிச் சுவர் எழுப்பி யிருக்கிறார்கள்.

பிரதி வெள்ளிக்கிழமை மாலை அங்கு பிரார்த்தனை நடைபெறுகிறது. அன்று காந்திஜியின் ஆத்மார்த்த சீடரான ஸ்ரீ விநோபா பாவே பிரார்த்தனை நடத்தினார். சுமார் ஐந்நூறு பக்தர்கள் கூடியிருந்தார்கள். பிரார்த்தனையும் ராம நாம பஜனையும் ஆனபிறகு ஸ்ரீ விநோபா பாவே சிறு சொற்பொழிவு ஆற்றினார். காந்தி மகாத்மா முக்கியமாகக் கருதிய ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றி அவர் பேசுவது வழக்கமாம். அன்று நெல் மெஷின்களை ஒழிக்கும் அவசியத்தைப் பற்றியும் கைக்குத்தல் அரிசியின் முக்கியத்தைப் பற்றியும் பேசினார்.

பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது என் மனம் ஜனவரி 31உ இந்த இடம் எப்படி யிருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து கொண்டிருந்தது. சந்தனக் கட்டை அடுக்கிய சிதையில் மகாத்மாவின் புனித உடலைக் கிடத்தித் தீ வைத்தபோது சுற்றிலும் பத்து லட்சம் ஜனங்கள் நின்று கதறிய காட்சி மனக்கண் முன்னால் வந்தது. அதே சமயத்தில் ஓலமிடல் போன்ற ஓசை ஒன்று காதில் கேட்டது. ஒலி பெருக்கும் கருவியில் காற்றுப் புகும் சத்தம் அது என்று அறிந்தேன். அந்தப் புண்ணிய பூமியின் புழுதி எவ்வளவு புனிதமானது என்று அடுத்தபடி நான் எண்ணமிட்டுக் கொண்டிருந்த போது மேற்குத் திசை திடீரென்று இருண்டது. சற்று நேரத்துக்கெல்லாம் நாலாபுறமும் இருள் சூழ்ந்தது. பெரு மழை பெய்யப்போகிறது என்று எண்ணினேன். உண்மையில் மழை பெய்யவில்லை: மண்மாரி பொழிந்தது. கால் முதல் தலை வரையில் கண்கள், காதுகள், நாசித் துவாரங்கள் உள்பட அந்தப் புண்ணிய பூமியின் கரிய புழுதியினால் அபிஷேகம் ஆயிற்று. மண்மாரி பத்து நிமிஷத்தில் நின்றது. அதற்கு முன்னால் நெருப்பாக வீசிய காற்று இப்போது குளிர்ந்துவிற்று. ஜூன், ஜூலை மாதங்களில் இந்த மாதிரி புழுதிக்காற்று அடிக்கடி தில்லிப் பிரதேசத்தில் அடிக்குமாம். அதற்கு 'ஆந்தி' என்று பெயராம். ஆந்தி அடித்து நின்றவுடனே உஷ்ணம் சுமார் 20 டிக்ரி இறங்கிக் குளிர்ந்து போய் விடுமாம். ஆந்திக் காற்றில் புழுதி உயர மேகமண்டலம் வரையில் சென்று கீழே இறங்குவதால் அப்படிக் குளிர்ந்து விடுகிறது என்று சொல்கிறார்கள்.

* * *

ஜூன் மீ 20உ மாலை 4-30 மணிக்குப் புது கவர்னர் ஜெனரல் ராஜாஜி கல்கத்தாவிலிருந்து விமானத்தில் வந்து சேர வேண்டியது. தில்லிக்குப் பக்கத்தில் உள்ள வில்லிங்டன் விமானக் கூடத்தில் வந்து இறங்கினால் ஜனக் கூட்டத்தைச் சமாளிப்பது கஷ்டமாயிருக்கலாம் என்று கருதி, தில்லியிலிருந்து பதினைந்து மைல் தூரத்திலுள்ள 'பாலம்' என்னும் விமானக் கூடத்தில் ராஜாஜியின் விமானம் இறங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

புதிய கவர்னர் ஜெனரலை வரவேற்பதற்குச் சிறப்பான ஏற்பாடுகள் செய்-

யப்பட்டிருந்தன. கப்பல் படை, ஆகாசப் படை, சீக்கியப் படை, கூர்க்கர் படை— இவற்றைச் சேர்ந்த ஒவ்வொரு பகுதியினர் அங்கு வரிசை வரிசையாக அணிவகுத்து நின்றார்கள். 4-10-க்கே பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு, பாபு ராஜேந்திர பிரஸாத், சர்தார் பலதேவ் ஸிங் முதலிய மந்திரிமார்களும், மற்றும் பிரபல உத்தியோகஸ்தர்களும் விமானக் கூடத்துக்கு வந்து சேர்ந்து விட்டார்கள்.

சரியாக 4-15க்கு வருண பகவானும் குளிர்ந்த மழைத் துளிகளைப் பொழிந்து கொண்டு வந்து சேர்ந்தார்.

பெரு மழை பெய்திருந்தால் ஏற்பாடுகள் எல்லாம் கலைந்து போயிருக்கும். அப்படிக்கில்லாமல் சரியாக 10 நிமிஷம் மழை பெய்து உஷ்ணத்தைக் குறைத்து சுற்றுப் புறத்தைக் குளிரச் செய்த பிறகு மழை விட்டு விட்டது.

4-30-க்கு ராஜாஜியின் விமானம் வந்து இறங்கியதும் இராணுவ பாண்டு வாத்தியங்கள் முழங்கின.

சீக்கியப் படையிலிருந்து நாலு பேர் தனியாகக் கிளம்பிக் கைகளில் பெரிய தடிகளையும் கொடிகளையும் பிடித்துக் கொண்டு இராணுவ நடை போட்டுக் கொண்டு போனார்கள். அந்த நடை 'கதகளி'யைச் சேர்ந்ததா, 'கதக்'கைச் சேர்ந்ததா, 'மணிபுரி'யா, பரதநாட்டியமா என்று பத்திரிகை நிருபர்கள் சர்ச்சை செய்தார்கள்.

விமானத்திலிருந்து இறங்கிய ராஜாஜியைப் பிரதம மந்திரி நேரு வரவேற்று மற்ற மந்திரிகளுக்கும் உத்தியோகத் தலைவர்களுக்கும் அறிமுகப் படுத்தி வைத்தார். பெரிய பதவிகளின் கஷ்டங்களில் இது ஒன்று. தெரிந்த மனிதர்கள் திரும்பத் திரும்ப அறிமுகப்படுத்தப் படுவார்கள். ஒவ்வொரு தடவையும் அவர்களைப் புதிதாகத் தெரிந்து கொண்டு முகமன் சொல்ல வேண்டும்!

பின்னர், அணி வகுத்து நின்ற படை வீரர்களை ராஜாஜி பார்வையிடும் நிகழ்ச்சி நடந்தது. முன்னும் பின்னும் படைத் தலைவர்கள் இராணுவ நடை போட்டுச் செல்ல, ராஜாஜி அந்தத் தாளத்துக்கு இசைய அடி வைத்து நடந்து சென்றார். அதைப் பார்த்தவர்களுக்கு ராஜாஜி பிறந்தது முதல் கவர்னர் ஜெனரல் வேலை பார்த்தவர் போலவே தோன்றியது! அவ்வளவு சுபாவிகமாகவும் அதே சமயத்தில் கம்பீரமாகவும் அவர் படை வீரர்களைப் பார்வையிட்டுக் கொண்டு நடந்து சென்றார்.

* * *

பல முறை இதற்கு முன்னால் நான் டில்லிக்குப் போயிருக்கிறேன்; புதுடில்லி நகரையும் பார்த்திருக்கிறேன். ஆனால் வைஸ்ராய்—கவர்னர் ஜெனரல்கள் வசித்த சர்க்கார் மாளிகைப் பக்கம் இது வரை போனது கிடையாது.

ஜூன்மீ 20உ மாலைதான் முதன் முதலில் அந்த மாளிகை வாசலுக்குப் போனேன்; அதன் பிரம்மாண்டத்தைப் பார்த்துப் பிரமித்தேன்.

புது டில்லி நகரத்தை நிர்மாணிப்பதற்கு முதலில் 16 கோடி ரூபாய் திட்டம் போட்டார்கள் என்றும் அது 100 கோடி ரூபாயில் வந்து நின்றது என்றும் கேள்விப்பட்டேன்.

அந்த நூறு கோடி ரூபாய் நகரத்துக்கு நடுநாயகமாய் விளங்குகிறது கவர்னர்



ஜெனரல் மாளிகை. அதைக் கட்டுவதற்குச் செலவு கோடிக் கணக்கிலே தான் ஆகியிருக்கும். அதற்குத் தகுந்த கம்பீரத்துடனே மாளிகை விளங்குகிறது.

இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் சுரண்டிய பணத்தில் இந்த நூறு கோடி ரூபாயை நல்ல முறையில் உபயோகப் படுத்தினார்கள் என்று சொல்லவேண்டும். எத்தனையோ கோடி கொண்டு போனதோடு இந்த நூறு கோடியையும் அவர்கள் கொண்டு போயிருந்தால் போனதுதானே? அதற்குப்பதிலாக இந்தியாவின் தலைநகரிலே அவ்வளவு பணத்தையும் போட்டிருக்கிறார்களே! இப்போது அவ்வளவும் நம்முடைய தேசியப் பொதுச் சொத்தாக இருக்கிறதல்லவா?

எனினும் இத்தகைய பிரம்மாண்ட மாளிகையைக் கட்டியவர்கள், அதைக் கட்டுவதற்குத் திட்டம் போட்டபோது, அதில் ஒரு காலத்தில் முரட்டுக் கதர் வேஷ்டியும் ஜிப்பாவும் அணியும் ஒருவர் வசித்து ஆட்சி செலுத்துவார் என்று கனவிலும் கருதியிருக்க மாட்டார்கள்.

இந்த விஷயத்தைப் பற்றி நான் சிந்தனை செய்து, "குடிசையையும் அரண்மனையையும் ஒன்றாகக் கருதக் கூடிய இல்லறத் துறவி ஒருவர்தான் இந்த மாளிகையில் வசிப்பது நியாயம்" என்று எண்ண மிட்டுக்கொண்டிருக்கையில், ராஜாஜியின் கார் வந்து சேர்ந்தது.

புது தில்லி சர்க்கார் மாளிகை இயற்கையாக அமைந்த ஓர் உயரமான பாறை மீது கட்டப்பட்டிருக்கிறது. எனவே, கீழே இருந்து மாளிகையின் முகப்புத் தாழ்வாரத்துக்கு வர ஐம்பது, அறுபது படிகள் ஏறியாக வேண்டும்.

நாங்கள் எல்லாரும், — அதாவது பத்திரிகைக்காரர்கள், புகைப்பட நிபுணர்கள், முக்கிய பிரமுகர்கள் முதலியோர் முன்னாடியே ஏறித் தாழ்வாரத்தில் நின்றோம். படிக்கட்டுகளில் இரு வரிசையாகக் கண்ணைக் கவரும் வர்ண உடை தரித்துக் கையில் கொடி பிடித்த 'பாடிகார்ட்' வீரர்கள் நின்றார்கள்.

கார் கீழே வந்து நின்ற அதே சமயத்தில் மாளிகைக்குள்ளிருந்து மவுண்ட்பேட்டன் தம்பதிகளும் அவர்களுடைய புதல்வி லேடி பமீலா மவுண்ட்பாட்டனும் வந்து சேர்ந்தார்கள்.

காரிலிருந்து ராஜாஜியும் பிரதம மந்திரி நேருஜியும் இறங்கினார்கள்.

அந்தச் சமயத்தில் நேருஜியின் பெருந்தன்மைக்கும் ரஸிகத்தன்மைக்கும் ஓர் உதாரணத்தைப் பார்த்தோம்.

கீழே அணிவகுத்து நின்ற படைகளை ராஜாஜியுடன் நேருவும் பார்வையிட்டு அவருடன் படிக்கட்டில் ஏறி வந்திருக்கலாம். அதை யாரும் முறைத்தவறு என்று எண்ணியிருக்கமாட்டார்கள்.

ஆயினும் நேருஜி என்ன செய்தார் தெரியுமா? காரிலிருந்து இறங்கியதும் ராஜாஜியை முன்னால் போகவிட்டுப் பின்னால் ஒதுங்கி நின்று கொண்டார். பிறகு படிக்கட்டின் ஒரு மூலைக்குச் சென்று ஏறி மேலே வந்து மவுண்ட்பாட்டன் தம்பதிகளுடன் நின்று புது கவர்னர் ஜெனரலை வரவேற்பதற்குத் தயாரானார்.

• • •

படைகளைப் பார்வையிட்டு விட்டு ராஜாஜி மேலே ஏறி வந்ததும் மவுண்ட்பாட்டன் தம்பதிகள் நெடுநாளைய சிநேகிதரை வரவேற்பது போல் அவரை வரவேற்றார்கள். மவுண்ட் பாட்டன் முதலில் ஒரு ஸல்யூட் போட்டார்; அப்புறம் ஒரு கும்பிடு போட்டார்; அப்புறம் கையைப் பிடித்துக் குலுக்கினார். அப்புறம் ஆலிங்கனமே செய்து கொண்டார்.

இரட்டைக் கவர்னர் ஜெனரல்களை அங்கு வந்திருந்தவர்கள் எல்லாரும் சூழ்ந்து கொண்டார்கள்.

ஒரு நிமிஷம் கலகலப்பான பேச்சும் சிரிப்புமாயிருந்தது. பிறகு பழைய கவர்னர் ஜெனரல் புது கவர்னர் ஜெனரலை உள்ளே அழைத்துச் சென்றார்.

அப்போது கல்கத்தாவில் பெரிய அளவில் நடந்த சம்பவம் இங்கே சின்ன முறையில் நடந்தது. பத்திரிகைக்காரர்களும் பிரமுகர்களுமாகச் சுமார் ஐந்நூறு பேர் சட சட வென்று அந்த அரண்மனைக்குள்ளே நுழைந்து விட்டார்கள். கொஞ்ச தூரம் தொடர்ந்து போன பிறகு திடீரென்று மவுண்ட்பேட்டனையும், ராஜாஜியையும் காணவில்லை! பஞ்ச பாண்டவர்கள் இதே தில்லி நகரம் உள்ள இடத்தில் கட்டிய இந்திரப் பிரஸ்த அரண்மனை எனக்கு நினைவு வந்தது. சற்றுநேரம் அரண்மனைக்குள் அங்கு மிங்கும் சுற்றி அலைந்து விட்டு வெளியேறினோம்.

அன்றிரவெல்லாம் நான் சரியாகத் தூங்கவில்லை. மறுநாள் இராமருக்குப் பட்டாபிஷேகம் என்ற செய்தியை அறிந்திருந்த அயோத்தி மக்களின் நிலையில் நான் இருந்தேன். காட்டுக்குப் போய் வந்த பிறகு நடந்த இரண்டாவது இராம பட்டாபிஷேகத்தைக் குறிப்பிடுகிறேன். முதல் தடவை நாள் வைத்துத் தவறி விட்டதால் இரண்டாவது முறை குறிப்பிட்ட பட்டாபிஷேக தினத்தைப் பற்றி அயோத்தி மக்களின் ஆர்வம் அதிகமாகவே இருந்திருக்கும் அல்லவா?



மாந்தருக்குள் ஒரு தெய்வம் — கல்கி

38. சேம்பர்லின் பேட்டி

பம்பாயைச் சேர்ந்த ஸாந்தாக்ரூஸ் என்னும் பகுதியில் சுகாதார வசதியுள்ள ஒரு பங்களாவைக் காந்திஜி வாடகைக்கு அமர்த்தினார். நிலையாகப் பம்பாயில் தங்கி பாரிஸ்டர் தொழில் நடத்துவது என்று உத்தேசித்து வாழ்க்கை தொடங்கினார். பாரிஸ்டர் தொழிலில் நல்ல வருமானமும் வரத் தொடங்கியது.

இதற்கிடையில் ஸ்ரீ கோகலே காந்திஜியை மறந்து விடவில்லை. எப்படியாவது இந்தியாவின் பொது வாழ்க்கையில் காந்திஜியை ஈடுபடச் செய்துவிட வேண்டுமென்று கோகலே எண்ணம் கொண்டிருந்தார். இது காரணமாக வாரத்திற்கு இரண்டு மூன்று தடவை கோகலே காந்திஜியின் பாரிஸ்டர் ஆபீசுக்கு வருவது வழக்கமாயிற்று. மற்றும் சில அரசியல் நண்பர்களையும் சில சமயம் கோகலே அழைத்துக் கொண்டு வருவார். இந்தியாவில் அரசியல் தொண்டு செய்யும் முறைகளைப் பற்றித் திட்டங்கள் போட்டு விவாதிப்பார்கள்.


ஆனால் காந்திஜியைப் பற்றி இறைவனுடைய திட்டம் வேறுவிதமாக இருந்தது. தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் அவரை விடுகிற வழியாக இல்லை. "சேம்பர்லின் இங்கு வருகிறார். தயவு செய்து உடனே தாங்கள் வந்து சேரவேண்டும்" என்று தந்தி அடித்தார்கள்.

சேம்பர்லின் பிரிட்டிஷ் அரசாங்கத்தில் அப்போது குடியேற்றநாட்டு மந்திரியாயிருந்தார். அவர் தென்னாப்பிரிக்கா வரும் சமயம் இந்தியர்களின் குறைகளை எடுத்துச் சொல்லி நிவர்த்திக்கும்படி கேட்பது அவசியம் அல்லவா? அதற்குக் காந்திஜி இல்லாவிட்டால் யார் வழி காட்டுவார்கள்?

தென்னாப்பிரிக்கா இந்தியர்களுடைய அன்பையும் நம்பிக்கையையும் காந்திஜி புறக்கணிக்க முடியவில்லை. ஆதலின் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றத் தீர்மானித்தார். சீக்கிரம் திரும்பி வந்து விடலாம் என்ற எண்ணத்துடன் பம்பாய் வீட்டைக் காலி செய்யாமல் அங்கேயே குடும்பத்தை இருக்கச் செய்து விட்டுப் புறப்பட்டார். புறப்படும்போது தமக்குத் தெரிந்த இளைஞர்கள் சிலரையும் அழைத்துச் சென்றார். அந்த இளைஞர்களில் ஸ்ரீ மகன்லால் காந்தி ஒருவர். பின்னால் காந்திஜியின் சத்தியப் போராட்டங்களில் அவருக்குப் பெரிதும் உதவியாயிருந்தவர்களில் ஸ்ரீ மகன்லாலும் ஒருவர்.

இவ்விதம் 1903-ம் வருஷத்தில் மூன்றாவது தடவையாகக் காந்திஜி தென்னாப்பிரிக்கா சேர்ந்தார். (இந்த முறை அவர் அங்கேயே நீடித்து இருக்க வேண்டியதாயிற்று. இதன் காரணத்தைப் பின்னால் பார்ப்போம்.) காந்திஜி டர்பன் நகரை அடைந்தது மிகவும் சரியான தருணமாயிருந்தது. டர்பன் இந்தியர்கள் சேம்பர்லினைப் பேட்டி காண்பதற்கு அனுமதி கேட்டுப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். தேதியும் குறிப்பிட்டாகி விட்டது. காந்திஜி போனதும் சேம்பர்லினிடம் சமர்ப்பிப்பதற்கு ஒரு விண்ணப்பம் தயார் செய்தார். இந்தியப் பிரதிநிதிக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துச் சேம்பர்லினைப் பேட்டி காண்பதற்குச் சென்றார்.

ஆனால் பிரதிநிதிக் கூட்டம் அடைந்தது ஏமாற்றந்தான். சேம்பர்லின் தென்னாப்பிரிக்காவுக்கு ஒரு முக்கிய நோக்கத்துடன் வந்திருந்தார். போயர் யுத்தத்தின்போது அங்கே டச்சுக்காரர்களுக்கும் இங்கிலீஷ்



காரர்களுக்கும் மனஸ்தாபம் முற்றியிருந்தது. அதைப் போக்கி இரு சாராரையும் சமரசப் படுத்துவதற்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் பக்தி கொள்ளும்படி செய்வதற்காகவும் சேம்பர்லின் வந்திருந்தார்.

போயர் யுத்தம் முடிந்தவுடனே தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரர்களுக்குப் பூரண குடியேற்ற நாட்டுச் சுதந்திரம் பிரிட்டிஷ் சர்க்கார் அளித்து விட்டார்கள். இதைக் குறிப்பிட்டு மிஸ்டர் சேம்பர்லின் இந்தியப் பிரதிநிதி கோஷ்டிக்குப் பதில் சொன்னார். "சுயாட்சி பெற்ற குடியேற்ற நாடுகளின் மீது பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு அதிகாரம் எதுவும் கிடையாது. நீங்கள் குறிப்பிட்டிருக்கும் குறைகள் உண்மையென்றே தோன்றுகின்றன. அவற்றை நிவர்த்திக்க முயன்று பார்க்கிறேன். ஆனால் நான் அதிகமாக ஒன்றும் செய்வதற்கில்லை. இங்குள்ள ஐரோப்பியர்களின் மத்தியில் நீங்கள் வசிப்பதற்கு விரும்பினால் அவர்களுடைய சிநேகத்தைப் பெற முயற்சிக்க வேண்டும்" என்று சேம்பர்லின் கூறினார்.

இதைக் கேட்டதும் இந்தியப் பிரதிநிதிகளின் உற்சாகமெல்லாம் பறந்து விட்டது. காந்திஜியும் ஏமாற்ற மடைந்தார். தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் உரிமைக்காகத் தீவிரமாகப் போராட வேண்டுமென்றும், இல்லாவிடில் 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்பதுபோல் தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரர் வைத்ததே சட்டமாகிவிடும் என்றும், இந்தியர் பாடு அதோகதியாகி விடும் என்றும் காந்திஜிக்குத் தோன்றியது. இதைத் தம் சகாக்களிடமும் தெரிவித்தார்.

மிஸ்டர் சேம்பர்லின் நேட்டாலிலிருந்து டிரான்ஸ்வாலுக்குப் போக எண்ணியிருந்தார். இதை அறிந்த காந்திஜி தாமும் முன்னதாகவே டிரான்ஸ்வாலுக்குப் போக விரும்பினார். டிரான்ஸ்வால் இந்தியர்களும் தங்கள் சார்பாக விண்ணப்பம் எழுதிச் சேம்பர்லினிடம் கொடுப்பதற்குக் காந்திஜியை எதிர்பார்த்தார்கள். ஆனால் நேட்டாலிலிருந்து காந்திஜி டிரான்ஸ்வாலுக்குப் போகச் சட்டத் தடைகள் குறுக்கிட்டன.

போயர் யுத்தம் காரணமாக டிரான்ஸ்வால் மாகாணம் வனாந்தரம் போல் ஆகியிருந்தது. அங்கே போதிய உணவுப் பொருள்களும் துணிமணிகளும் கிடைப்பது அரிதாகியிருந்தது. இது காரணமாக டிரான்ஸ்வாலுக்குள் வருவோர் ஒவ்வொருவரும் அனுமதிச் சீட்டுப் பெற வேண்டும் என்று ஏற்படுத்தியிருந்தார்கள். முன்னம் டிரான்ஸ்வாலில் வசித்தவர்களுக்கும் இந்த விதியை ஏற்படுத்தினார்கள். அனுமதிச் சீட்டு ஐரோப்பியர்களுக்கு எளிதில் கிடைத்தது. இந்தியர்களுக்கு இலேசில் கிடைப்பதாயில்லை.

இதற்கிடையில் 'ஆசியாக்காரர் இலாக்கா' என்று ஒரு புது இலாக்கா ஏற்பட்டிருந்தது. போயர் யுத்தத்தின்போது இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் இராணுவத்தைச் சேர்ந்த வெள்ளைக்காரர் பலர் தென்னாப்பிரிக்காவுக்கு வந்திருந்தார்கள். அவர்களில் அநேகர் தென்னாப்பிரிக்காவிலேயே தங்கிவிட விரும்பினார்கள். இவர்களுக்கு ஏதாவது உத்தியோகம் கொடுக்க வேண்டும் அல்லவா? அதற்காக ஒரு புது இலாக்கா சிருஷ்டி செய்யப்பட்டது. இதற்கு 'ஆசியாக்காரர் இலாக்கா' என்று பெயர். காந்திஜி இந்தியாவிலிருந்து இந்தத் தடவை தென்னாப்பிரிக்கா திரும்புவதற்குள் ஆசியாக்காரர் இலாக்காவின் ஆதிக்யம் பரவி வேரூன்றி விட்டது. ஆசியாக்காரர் யாராவது டிரான்ஸ்வாலுக்குள் பிரவேசிக்க விரும்பினால் மேற்படி இலாக்காவின் மூலமாகவே விண்ணப்பம் செய்ய வேண்டும் என்று ஏற்பட்டிருந்தது.

இந்தியர்கள் விண்ணப்பம் செய்தால் இலேசில் அனுமதிச் சீட்டு கிடைப்பதில்லை. பதில் வருவதற்கு மாதக் கணக்கில் தாமதம் ஆகிறது. அனுமதிச் சீட்டு வாங்கித் தருவதற்குத் தரகர்கள் ஏற்பட்டார்கள். தரகர்களும் உத்தியோகஸ்தர்களுமாகச் சேர்ந்து ஏழை இந்தியர்களைக் கொள்ளை

யடித்தார்கள். சில சமயம் 100 பவுன் வரையில் அனுமதிச் சீட்டுக்காகச் செலவு செய்ய வேண்டியிருந்தது.

இதையெல்லாம் காந்திஜி அறிந்தபோது மேற்படி இலாக்கா மூலம் அனுமதிச் சீட்டுப் பெறும் எண்ணத்தைக் கைவிட்டார். டர்பன் போலீஸ் தலைவர் மிஸ்டர் அலெக்ஸாண்டர் காந்திஜியின் பழைய நண்பர் அல்லவா? அவரிடம் சென்றார். "நான் ஏற்கெனவே டிரான்ஸ்வாலில் வசித்தவன் என்பது தங்களுக்குத் தெரியுமே? அங்கே நான் போகவேண்டும். எனக்கு அனுமதிச் சீட்டு வாங்கித் தர வேண்டும்" என்று கேட்டார். அவர் உடனே காந்திஜியுடன் புறப்பட்டு வந்து தமது செல்வாக்கை உபயோகித்து அனுமதிச் சீட்டு வாங்கிக் கொடுத்தார். ரயிலுக்கு ஒரு மணி நேரம் தான் பாக்கியிருந்தது. சாமான்களைக் கட்டித் தயாராய் வைத்திருந்தபடியால் காந்திஜி அவசரமாகச் சென்று ரயில் ஏறினார். பிரிட்டோரியாபோய்ச் சேர்ந்தார்.

ஆசியாக்காரர் இலாக்காவின் கிளைக் காரியாலயம் பிரிட்டோரியாவிலும் இருந்தது. காந்திஜி எப்படி அனுமதிச் சீட்டுப் பெற்று டிரான்ஸ்வாலுக்குள் வந்தார் என்பது அந்த இலாக்கா அதிகாரிகளுக்கு வியப்பை அளித்தது. ஒரு வேளை அனுமதியில்லாமலே வந்திருப்பாரோ, அப்படியானால் கைது செய்து விடலாம் என்று எண்ணினார்கள். டர்பனுக்குத் தந்தி கொடுத்துக் கேட்டார்கள். அனுமதிச் சீட்டுப் பெற்றே வந்திருக்கிறார் என்று அறிந்ததும் ஏமாற்றமடைந்தார்கள். ஆனால் அத்துடன் சும்மா விடுவார்களா? காந்திஜி எதற்காக வந்தாரோ, அந்த நோக்கம் நிறைவேறாமல் செய்து விடுவதென்று கங்கணம் கட்டிக் கொண்டார்கள்.

பிரிட்டோரியாவில் சேம்பர்லினைப் பேட்டி காண இந்தியர் அனுமதி கேட்டிருந்தார்கள் அல்லவா? பிரதிநிதிக் கூட்டத்தில் யார் யார் இருப்பார்கள் என்று முன்னதாகவே ஜாபிதா கொடுக்க வேண்டுமென்று மேற்படி இலாக்கா அதிகாரிகள் கேட்டார்கள். அவ்விதமே காந்திஜியின் பெயரும் சேர்த்துக் கொடுக்கப்பட்டது. உடனே மேற்படி இலாக்கா தலைமை அதிகாரி தம்மை வந்து சந்திக்கும்படி இந்தியத் தலைவர்களுக்கு எழுதினார். தயாப் சேத் ஹாஜீ கானும், காந்திஜியும் இன்னும் சிலரும் போனார்கள். ஆசிய இலாக்காவின் தலைமை அதிகாரி இலங்கையிலிருந்து வந்திருந்த ஐரோப்பியர். அவர் வெகு கடுமையாக, "இந்த காந்தி யார்? இவரை எதற்காகப் பிரதிநிதிக் கூட்டத்தில் சேர்த்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"இவர் எங்களுக்கு யோசனை சொல்லி உதவும் நண்பர். நாங்கள் அழைத்துத்தான் வந்திருக்கிறார்" என்றார் தயாப் சேத்.

"நாங்கள் எதற்காக இங்கே இருக்கிறோம்? உங்களைப் பாதுகாப்பதற்காகத்தானே இருக்கிறோம்? இவ்விடத்து நிலைமை இந்தியாவிலிருந்து வந்த காந்திக்கு என்ன தெரியும்? இவரைப் பிரதிநிதிக் கூட்டத்தில் சேர்க்க முடியாது!" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டு, காந்திஜியைப் பார்த்து, "நீர் வைத்திருக்கும் அனுமதிச் சீட்டு உமக்குத் தவறாகக் கொடுக்கப்பட்டது. இங்கே குடியேறிய இந்தியராக உம்மைக் கருத முடியாது. பிரதிநிதிக் கூட்டத்திலும் உம்மைச் சேர்க்க முடியாது. நீர் போகலாம்" என்று கூறினார்.

மேற்கொண்டு பதில் சொல்வதற்கே மேற்படி அதிகாரி அனுமதிக்கவில்லை. எல்லாரும் மிக்க எரிச்சலுடன் திரும்பினார்கள்.

மேற்படி அவமதிப்பினால் காந்திஜியின் மனம் துடிதுடித்தது. ஆயினும் அவர் நிதானத்தை இழந்துவிடவில்லை. இந்த நிலைமையில் என்ன செய்வது என்று அமைதியுடன் யோசித்தார்.

காந்திஜியை அனுமதிக்காவிட்டால் பிரதிநிதிக் கூட்டமே போக வேண்டியதில்லையென்று மற்றவர்கள் சொன்னார்கள். இதைக் காந்திஜி விரும்பவில்லை. "எழுத வேண்டிய விண்ணப்பத்தை நான் எழுதித் தயாரித்து விடுகிறேன். நீங்கள் கொண்டு போய்ச் சேம்பர்லினிடம் கொடுத்துவிட்டு

வாருங்கள்! மற்ற விஷயங்கள் பிறகு பார்த்துக் கொள்வோம்" என்றார்.

காந்திஜி வற்புறுத்தியதன் பேரில் இந்திய பாரிஸ்டர் ஜார்ஜ் காட்பிரே என்பவரின் தலைமையில் பிரதிநிதிக் கூட்டம் சென்றது. சேம்பர்லினைப் பார்த்துவிட்டு வந்தது. பயன் ஒன்றும் இல்லை.

"நீங்கள் சொன்னதின் பேரில்தானே நாங்கள் போயர் யுத்தத்தின்போது இவர்களுக்கு உதவி செய்தோம்? அதன் பயனைப் பார்த்தீர்களா?" என்று நண்பர்கள் இடித்துக் காட்டினார்கள்.

"அப்போது நான் அவ்விதம் யோசனை கூறியதற்காக வருந்தவில்லை. போயர் யுத்தத்தின்போது நாம் உதவி செய்தது சரி. அச்சமயம் நம்முடைய கடமை அது. இப்போது நம்முடைய கடமை என்னவோ அதை யோசித்துச் செய்ய வேண்டும்" என்றார் காந்திஜி.

நம்முடைய கடமை என்னவென்பதைப் பற்றிக் காந்திஜி அந்த க்ஷணமே முடிவுக்கு வந்தார். இந்தியாவுக்குத் திரும்புவது பற்றி யோசிப்பதில் பயனில்லை. முன்னே நேட்டாலில் தங்கி இந்தியர்களுக்காகப் போராடியதுபோல் இப்போது டிரான்ஸ்வாலில் தங்கிப் போராடுவது தம் கடமை என்று தீர்மானித்தார். முக்கியமாக, ஆசிய இலாக்கா என்னும் புதிய அபாயத்தை எதிர்த்துப் போராட வேண்டும். இல்லாவிட்டால் நாளடைவில் தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள் எல்லாரையுமே கொள்ளையடித்து அந்த நாட்டை விட்டும் துரத்திவிடுவார்கள்.

காந்திஜி தம் முடிவைத் தெரிவித்ததும் அங்கிருந்த இந்திய நண்பர்கள் மிக்க ஆனந்தம் அடைந்தார்கள். ஒரு விதத்தில் ஆசிய இலாக்கா அதிகாரி செய்த அநீதி நல்லதாய்ப் போயிற்று என்றும் எண்ணினார்கள். அதன் காரணமாகத்தானே காந்திஜி டிரான்ஸ்வாலில் தங்குவதென்று தீர்மானித்துள்ளார்?

காந்திஜி ஜோகானிஸ்பர்க்கில் இருந்த ஹைகோர்ட்டில் பாரிஸ்டர் தொழில் தொடங்குவது என்று நிச்சயமாயிற்று. நல்ல வேளையாக ஜோகானிஸ்பர்க் வக்கீல் சங்கத்தார் காந்திஜியின் மனுவை ஆக்ஷேபிக்கவில்லை. மிஸ்டர் ரிச் என்னும் பிரபல வியாபாரியின் உதவியினால் ஜோகானிஸ்பர்க்கில் வக்கீல்கள் வசித்த பகுதியில் ஒரு நல்ல வீடு கிடைத்தது. காந்திஜி அதில் தங்கி பாரிஸ்டர் தொழில் ஆரம்பித்தார்.



ரொம்ப சரி!

குற்றவாளி :—கள்ளக் கையெழுத்துப் போட்டதாக என்மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. முதலில் எனக்கு என் பெயரையே எழுதத் தெரியாதே!

நீதிபதி :—உன் பெயரை எழுதியதற்காக உன்மீது குற்றம் சாட்டவில்லை!

★

சரிதான்!

ஒரு வித்தைக்காரன் பல ஜால வித்தைகள் காட்டிக் கொண்டிருந்தான். தன் குல்லாயிலிருந்து பல கோழி முட்டைகள் வரவழைத்துக் காண்பித்தான்.

வித்தைக்காரன் (கூட்டத்தில் ஒரு சிறுவனைக் கூப்பிட்டு) :— நான் கோழியில்லாமலே முட்டைகளை வரவழைத்தேன். உன்னால் அதுமாதிரி செய்ய முடியுமா?

சிறுவன் :— எங்க அப்பாவால் முடியும்!

வித்தைக்காரன் :— அது எப்படி? அவரும் ஒரு வித்தைக்காரரா?

சிறுவன் :— இல்லே, இல்லே; எங்க வீட்டுல் வாத்துகள் இருக்கின்றன!

★

நல்ல கேள்வி!

ஆறு வயதுக் கிட்டுவுக்கு அவன் அம்மா திராட்சைப் பழம் வாங்கிக் கொடுத்தாள். அதைத் தின்னும்போது தோலை ஞாபகமாய்த் துப்பிவிடும்படி சொல்லி யிருந்தாள்.

அன்றிரவு அம்மா கிட்டுவுக்குச் சிங்கத்தின் கதை சொல்லிக் கொண்டிருந்தாள். "சிங்கம் பெரிய மனிதன் ஒருவனைத் தின்றது" என்று சொன்னவுடன் கிட்டு, "அம்மா, அது எல்லா மனுஷாளையும் தின்னுமோ?" என்று கேட்டான்.

அம்மா :— ஆகா! எல்லாரையும்தான் தின்னும்.

கிட்டு:—தின்ன அப்புறம் தோலைத் துப்பி விடுமோ, இல்லேயோ!

கண்டு பிடித்தது!

ராமு :— இன்றைக்குத் தோட்டத்தில் குழி வெட்டிக் கொண்டிருந்தேன். அங்கே முதலில் மூன்று வெள்ளி ரூபாய்கள் அகப்பட்டன. அதை எடுத்துச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு மறுபடி வெட்டினேன். இன்னும் மூன்று ரூபாய்கள் குழியில் கிடந்தன. அப்பறம் நான் என்ன கண்டு பிடித்தேன் என்று நினைக்கிறாய்......?

கிட்டு :—சட்டைப் பையில் ஒரு ஓட்டை இருப்பதைக் கண்டு பிடித்தாயாக்கும்!

★

யோசனை!

பையன்:— குதிரைப் பந்தயத்துக்கு அப்பா போய்விட்டாரா, அம்மா?

அம்மா:—அவர் குதிரைப் பந்தயத்துக்குப் போனது உனக்கு எப்படிடா தெரிந்தது? நீதான் தூங்கிக் கொண்டிருந்தாயே!

பையன்:—அலமாரியில் நான் வைத்திருந்த முக்கால் ரூபாயைக் காணோம்!

★

அநுபவம்!

பிரமசாரி (ஏக்கத்துடன்) :—பிரம்மசாரிக்குத் தன் கஷ்டங்களைப் பகிர்ந்து கொள்ள வாழ்க்கையில் யாரும் கிடையாது! ஹூம்!

கிருகஸ்தர் :—நீர் விஷயம் தெரியாமல் வருத்தப்படுகிறீர். பிரம்மச்சாரிக்குக் கஷ்டங்கள் ஏது?

★

என்ன சொன்னேன்?

குப்பு :—எப்பொழுதும் எனக்கு மூன்று விஷயங்களில் ஞாபக மறதி ஏற்படுகிறது.

முதலாவது, முகங்களை மறந்து விடுகிறேன். இரண்டாவது, குரல்களை மறந்து விடுகிறேன். அப்புறம் மூன்றாவது.........மூன்றாவது...



கப்பு :—மூன்றாவது என்ன?

குப்பு:—கொஞ்சம் இருங்கள்; முதல் இரண்டும் என்னவென்று சொன்னேன்...?

பிரஜா உரிமை பறிபோகிறது!

ராஜனி

இலங்கை, 27—6—48.

இலங்கைப் பிரதமர் ஸ்ரீ சேனநாயகா டில்லிக்குச் சென்று இந்தியப் பிரதமர் நேருவைச் சந்தித்து இலங்கை - இந்தியப் பிரச்னைகளைப் பற்றிச் சம்பாஷித்து விட்டுத் திரும்பியதும், "முக்கிய விஷயங்களிலெல்லாம் சமரச உடன்பாடு ஏற்பட்டு விட்டது. இனிச் சில்லறை விஷயங்கள்தான் பாக்கி!" என்று ஓர் அறிக்கை வெளியிட்டார். டில்லியில் இந்திய அரசாங்கமும் இதே போலத்தான் சுருக்கமாக ஓரிரண்டு வரிகளில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. "மூன்று மாதங்களுக்குள் இலங்கை இந்தியர் பிரச்னை தீர்ந்துபோன பழைய சங்கதியாகி விடும்" என்று ஸ்ரீ சேனநாயகா பொதுக் கூட்டங்களிலும் சொல்ல ஆரம்பிக்கவே, பெரும்பாலோர் அதை நம்பினார்கள். ஆனால் அவரது ராஜ தந்திரப் பிரயோகத்தில் பல வருஷப் பரிச்சயமுள்ள இலங்கை இந்தியத் தலைவர்கள் மட்டும் டில்லிப் பேச்சின் முடிவுகளில் அதிக நம்பிக்கை வைக்க மறுத்தனர். இப்பொழுது அவர்கள் புத்திசாலிகளாகி விட்டார்கள். டில்லிப் பேச்சுகள் கிட்டத்தட்ட மறுபடியும் 'புஸ்' வாணமாகி விட்டன.

நகல் மசோதா

ஸ்ரீ சேனநாயகா குறிப்பிட்ட "தீர்க்கப்பட வேண்டிய சில்லறைப் பிரச்னைகள்" என்பவை, கல்யாணத்தில் தாலி கட்டும் பிரச்னையைப் போன்றவைதான். ஸ்ரீ சேனநாயகாவும் அவரது சக மந்திரிகளும் இரகசியமாகக் கூடி இருட்டோடு இருட்டாக ஒரு மசோதாவைத் தயாரித்து, "டில்லிப் பேச்சுகளின் அடிப்படையில் தயாரித்திருக்கிறோம்" என்று சொல்லி நேருஜிக்கு அனுப்பினார்கள். "பேசி முடிவு செய்தது ஒன்று; நகல் மசோதாவிலிருப்பது மற்றொன்று" என்று சொல்லி அதை நிராகரித்து விட்டார் பண்டித நேரு. இந்திய அரசாங்கத்தைச் சிறிது பயமுறுத்திப் பார்க்கலாமென்று நினைத்தது சேனநாயகா சர்க்கார். நகல் மசோதாவை மந்திரி சபை ஆமோதித்து விட்டதென்றும் பார்லிமெண்டில் இம் மாதமே அது சமர்ப்பிக்கப்பட்டு விடுமென்றும் அதிகார பூர்வமான ஒரு செய்தியை இலை மறைவு காய் மறைவாக வெளியிட்டது இலங்கை அரசாங்கம். பனங்காட்டு நரியா சலசலப்புக்கு அஞ்சும்? நேருவிடமிருந்து இவ்வாரம் மற்றொரு கண்டிப்பான கடிதம் வந்ததாம். நகல் மசோதாவை இலங்கை அரசாங்கம் ஒருதலைப் பட்சமாகச் சட்டமாக்கினால் அதன் விளைவுகளையும் இலங்கை அரசாங்கம் அனுபவித்தே தீரவேண்டுமென்று நேருஜி கடுமையாக எச்சரித்திருப்பதாயும், அதன் பயனாக நகல் மசோதாவை உடனடியாகச் சட்டமாக்குவதை ஸ்ரீ சேனநாயகா கைவிட்டு விட்டாரென்றும் அறியப்படுகிறது. சட்டமியற்றுமுன் மறுபடியும் இந்திய அரசாங்கத்துடன் ராஜிப் பேச்சுகள் நடத்த ஸ்ரீ சேனநாயகா சம்மதித்திருக்கிறாராம்.

அதன் ஷரத்துக்கள்

சூரிய வெளிச்சத்தைக் காணாமல் இருட்டில் தயாராகி இருட்டிலேயே அழிந்து போன நகல் மசோதாவின் முக்கிய ஷரத்துக்கள் பின்வருமாறு:-



ஸ்ரீ சேனநாயகா

இலங்கையிலுள்ள இந்தியர்களில் இலங்கைப் பிரஜா உரிமையைக் கோருபவர்கள், மணமானவர்களாயிருந்தால் (1) 1938-ம் வருடம் முதல் 1945-ம் வருடம் வரை இலங்கையில் தொடர்ந்து வசித்தவர்களாயிருக்க வேண்டும். இந்த ஏழு வருட காலத்திற்கிடையில் மொத்தம் பன்னிரண்டு மாதங்களுக்கு மேல் இலங்கைக்கு

வெளியே சென்றிருக்கக் கூடாது. இவர்களது குடும்பங்களும் உடைமைகளும் இலங்கையிலேயே இருக்க வேண்டும். கல்யாணமாகாமல் பிரம்மசாரிகளாயிருந்தால் 1935-க்கும் 1945-க்குமிடையில் பத்து வருட காலம் இலங்கையில் வசித்திருக்க வேண்டும். இந்தப் பத்து வருடங்களில் மொத்தம் பன்னிரண்டு மாதங்களுக்கு மேல் இலங்கைக்கு வெளியே சென்றிருக்கக் கூடாது.

(2) இந்த யோக்கியதாம்சம் உள்ளவர்கள் பிரஜா உரிமையைக் கோரி மனுச் செய்யலாம். அந்த மனுக்களைக் காரணமே சொல்லாமல் ஆட்சேபிக்கும் உரிமை எவருக்கும் உண்டு. ஆட்சேபிக்கப்பட்ட மனுதாரர்கள் ஆட்சேபங்களை எதிர்த்துக் கோர்ட்டில் வழக்காடித் தாங்கள் இலங்கையர் என்பதை நிரூபணம் செய்ய வேண்டும்.

(3) சட்டப்படி சகல யோக்கியதாம்சங்களுமுடைய இந்தியர் எவரையும் இலங்கையராக்கிக் கொள்ள மறுக்கும் விசேஷாதிகாரம் மந்திரிக்கு உண்டு.

அடியைப் பிடிடா, பாரத பட்டா!

இந்த மசோதாவில் எல்லா ஷரத்துகளுக்குமே பண்டித நேரு ஆட்சேபணை எழுப்பியிருப்பதாக அறியப்படுகிறது. இலங்கை சுதந்திரம் அடைந்த 1948-ம் வருடத்துக்கு முந்திய ஏழு வருட காலமே பிரஜா உரிமைக்கு யோக்கியதாம்சமாகக் கொள்ள வேண்டும்; கல்யாணமானவர்கள், பிரம்மசாரிகள் ஆகிய இரு சாராருக்கும் ஒரே மாதிரியான யோக்கியதாம்சங்கள் கோரப்பட வேண்டும்; இவைகளை ருசுப்படுத்துவதில் அதிகக் கஷ்டங்களை உண்டு பண்ணக் கூடாது. இதுதான் இந்திய அரசாங்கத்தின் கட்சி. இந்தத் தகராறுகளினால் டில்லிப் பேச்சுகளெல்லாம் அடியோடு முறிந்து போய்விட்டன. இனி "அடியைப் பிடிடா, பாரத பட்டா!" என்ற மாதிரி ராஜிப் பேச்சுகள் திரும்பவும் நடைபெற்றாக வேண்டுமென்று தெரிகிறது.

இக்கட்டான நிலைமை

இதற்கிடையில் மிகுந்த கவலையை உண்டுபண்ணக் கூடிய ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. இலங்கை பார்லிமெண்டு இந்திய அங்கத்தினர்களான ஸ்ரீ எஸ். எம். சுப்பையாவும் ஸ்ரீ கே. குமாரவேலுவும் செலாவணிக் கட்டுப்பாடு அதிகாரியைப் பேட்டி கண்டார்களாம். அப்போது கட்டுப்பாடு அதிகாரி சொன்னாராம்: "இலங்கையர்கள் ஒரு ரூபாய்கூட இலங்கையை விட்டு வெளியில் அனுப்ப அனுமதிக்கப்பட மாட்டார்கள். 'இலங்கையர் இல்லை, இந்தியராகவே இருக்க விரும்புகிறோம்' என்று எழுத்து மூலம் பிரமாணப் பத்திரம் எழுதிக் கொடுப்பவர்கள் மட்டுமே இந்தியாவுக்கு மணியார்டர்கள் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். இவ்விதம் பிரமாணப் பத்திரம் கொடுக்கப் புதிய மனுக்கள் அச்சிடப்படுகின்றன" என்று. பெரும்பாலான இந்தியர்களின் குடும்பங்கள் அல்லது உறவினர்கள் இந்தியாவில் இருப்பதால் இந்தியாவுக்குப் பணம் அனுப்பியே தீர வேண்டியிருக்கும். இந்த இக்கட்டான நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு, "நாங்கள் இலங்கையர்களாயிருக்க விரும்பவில்லை; இந்தியர்களாயிருக்க விரும்புகிறோம்" என்று இந்தியரிடம் எழுதி வாங்கி விட்டால், பிறகு நேரு சர்க்கார் என்ன நிபந்தனைகளைச் சொன்னாலும் அதற்கிணங்கி உடன்படிக்கை செய்து கொள்ளலாமென்று ஸ்ரீ சேனநாயக சர்க்கார் நினைக்கிறது போலும்!



"கொஞ்சம் பொறு அப்பா, இந்தக் கார்ப்பரேஷன் குழாய் ஜலத்தில் ஒரு மீன் கூடவா கிடைக்காமல் போகப் போகிறது!"

சகோதரி திலகம்

கோணல்

‘நெக்லேஸ் இல்லா’க் கழுத்தும் ஒரு கழுத்தா! இந்தக் கழுத்து இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன?’ என்று அவள் எத்தனையோ ஆயிரம் தடவை என்னிடம் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறாள்.

உண்மைதான்; எனக்கும் இது பெரிய குறையாகத்தான் பட்டது. உண்மையில் நெக்லேஸ் இல்லாமல் அவள் கழுத்து இருப்பதைவிட இல்லாமலிருப்பதே தரமென்று தான் எனக்கும் பட்டது. ஆனால் கழுத்தை என்ன செய்ய முடியும்?

உண்மையைச் சொல்லப்போனால் அவளுடைய கழுத்திற்காகத்தான் அவளை நான் கல்யாணம் செய்து கொண்டேன். அவ்வளவு அழகான கழுத்து. அதற்கு உவமை சொல்லுவதே மிகவும் கடினம். என்னைத் தவிர வேறு யாராவது உவமை சொல்ல நினைத்தால் ‘ஒட்டைச் சிவிங்கிபோல— கொக்கு மாதிரி’ என்று ஏதாவது பிதற்றலான உவமைகளைத்தான் சொல்ல முடியும். பொதுவாகச் சொல்லிவிடுகிறேன். மிகவும் மெல்லிய கழுத்து; நூல் போன்ற கழுத்து. ஒவ்வொரு சமயம் ‘குஞ்சு’ என்று கூப்பிடுவேன். உடம்பெல்லாம் சமையலறைக்குள்ளிருக்கும் — அந்தக் கழுத்து மாத்திரம் தலையைக் கொத்திக் கொண்டு வருவது போல் வாசற்படிக்கு வெளியே வரும். அப்படிப்பட்ட நீண்ட மெல்லிய கழுத்து இருப்பது எவ்வளவு சாதகமென்று எனக்கும் அவளுக்கும்தான் தெரியும். இப்படிப்பட்ட ஒரு அழகான கழுத்திற்கு நெக்லேஸ் இல்லா விட்டால் ...?

அன்று தபால்காரன் என்னிடம் ‘விசேஷ மித்திரன்’ பத்திரிகையைக் கொடுத்து விட்டுப் போனான். அதைப் பிரித்து மெதுவாக ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிக் கொண்டு வந்தேன். பார்த்துக் கொண்டே வரும் பொழுது எனக்குச் ‘சுரீ’ரென்றது. அந்தப் பத்திரிகையில் ஸ்திரீகள் பகுதியில் ஒன்பது வருஷமாகத் தொடர்ந்து எழுதிவரும் சகோதரி திலகம் அந்த இதழில் ஜம்பர், புடவையும் கரையும், கண்ணாடி வளையல், நெல்லிக்காய் துகையல், கொள்ளுச் சாதம் — இப்படிப்பட்ட சாதாரண விஷயங்களை எழுதி வந்த சகோதரி, இப்பொழுது நெக்லேஸ்-அட்டிகை என்ற பெரிய விஷயங்களையெல்லாம் பற்றி எழுதத் துணிந்து விட்டதுதான் எனக்குப் பயமாயிருந்தது. சகோதரி திலகம் எழுதும் கட்டுரையில் என் மனைவிக்கு அபாரப் பிரேமை. சகோதரி திலகம் வெல்லத்தையும் உப்பையும் சேனைமாவோடு கலந்து ஒரு புது தினுசான அல்வா கிளறலாம் என்று எழுதி விட்டால் போதும்; அன்று மத்தியானம் டிபன் வேளை எனக்குப் பெரிய சோதனையாகத்தானிருக்கும். ‘வலது கையில் ஒன்றுமில்லாமல் சூனியமாகவும் இடது கையில் ஒரே கலரில் மூன்று டசன் கண்ணாடி வளையல்களை அடுக்கிக் கொண்டால் அது ஒரு புது பாஷனாகத்தானிருக்கிறது’ என்று எழுதியிருந்தால், அன்று சாயந்திரத்திற்குள் வலது கை சூனியமாகவும் இடது கையில் மூன்று டசன் வளையல்களுமிருந்தால்தான் குஞ்சுவின் மனது நிம்மதியாயிருக்கும். தினம் தினம் ஒன்றிரண்டாக உடைந்து கை சூனியமாவதற்கும் அடுத்த மாத ‘விசேஷ மித்திரன்’ சஞ்சிகையில் சகோதரி திலகம் இரண்டு கையிலும் ஒன்றுமில்லாமல் கை சூனியமாக இருப்பதுதான் இந்தக் காலத்துப் பாஷன் என்று எழுதுவதற்கும் சரியாக இருக்கும்.



இவைகளெல்லாம் சாதாரண விஷயம், சமாளிப்பதில் எனக்கொன்றும் அதிக சிரமம் ஏற்படவில்லை. ஆனால் இந்தத் தடவை நெக்லேஸைப் பற்றி எழுதியிருந்தது எனக்குப் பூகம்ப அதிர்ச்சியாகத்தானிருந்தது. ‘விசேஷ மித்திரன்’ பத்திரிகையை அவள் கண்ணில் காட்டாமல் எங்கேயா

வது ஒளித்து வைக்க நினைத்தேன். மனது 'படக், படக்' கென்று அடித்துக் கொண்டது. அவனிடம் அசடு வழியாமல் அதை மறைத்து வைக்க வேண்டுமென்று மனதில் ஓர் ஆசையும் எழுந்தது. சகோதரி திலகம் நெக்லேஸைப் பற்றி என்னதான் எழுதியிருக்கிறாள் பார்க்கலாமே யென்று' அவசர அவசரமாகப் பக்கங்களைப் புரட்டி 'மட மட' வென்று படித்தேன். படிக்கப் படிக்க மனதில் சமாதானமும் நிம்மதியும் ஏற்பட்டது. கொஞ்சம் நிதானமாகவே படித்தேன்.



நான் எதிர்பார்க்கவேயில்லை, சகோதரி திலகத்திற்கு ஆண் பிள்ளைகளிடம் இவ்வளவு கருணை ஏற்பட்டிருக்குமென்று. இவ்வளவு நாளாக என் கிரஹத்தில் நடந்து வந்த நெக்லேஸையும் கழுத்தையும் பற்றிய தகராறைத் தீர்த்து வைக்க அந்த கட்டுரை எனக்கு மிகவும் சாதகமானதாயிருந்தது.

''நேற்று நான் லேடீஸ் கிளப்பிற்குப் போயிருந்தபோது ஸ்ரீமதி கிரிஜா ராமகிருஷ்ணன் தன் கடைசி நாட்டுப் பெண்ணையும் தன்னோடு அழைத்துக் கொண்டு வந்திருந்தாள். அப்பொழுது ஸ்ரீமதி ரங்காசாரியும் மிஸ்ஸஸ் கேசரியும்கூட இருந்தார்கள். கிரிஜா ராமகிருஷ்ணனின் நாட்டுப் பெண் அழகாகவும் இந்தக் காலத்துப் பாஷனாகவும்தான் அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். ஆனால் அந்தப் பெண் கழுத்தில் நெக்லேஸ் போட்டுக் கொண்டிருந்ததுதான் எனக்குப் பிடிக்கவில்லை. அப்பொழுதுதான் எனக்கொரு புது விஷயம் தெரிந்தது. நீண்ட மெல்லிய கழுத்துள்ளவர்கள் நெக்லேஸை மறந்து விடுவது நல்லதென்றே நினைக்கிறேன். இல்லாவிட்டால் கழுத்தில் கருக்குப் போட்ட மாதிரி அது அழகைக் கெடுத்து விடும். பருமனும் குட்டைக் கழுத்துமுள்ளவர்கள் அணிந்து கொண்டால் எடுப்பாக இருக்கும்......!''

இது போதாதா எனக்கு? சகோதரி திலகம் நன்றாக இருக்கட்டும். இன்னும் ஏழு வருஷங்களுக்கு அந்தப் பத்திரிகையில் ஸ்திரீகள் பகுதியில் அந்தச் சகோதரியே ஏதாவது எழுதிக் கொண்டிருக்கட்டும் என்று ஈசனிடம் மன்றாடிவிட்டு, 'குஞ்சு' என்று சத்தம் போட்டு அவனைக் கூப்பிட்டேன்.

வழக்கம் போல் அவன் சமையலறையிலிருந்து கழுத்தை மாத்திரம் வெளியே நீட்டி 'ஏன்?' என்று கேட்டான்.

''இங்கே வா, சீக்கிரம் விசேஷ மித்திரனில் சகோதரி திலகம் ஒரு அபூர்வமான கட்டுரை எழுதியிருக்கிறாள்! வந்து பார்!'' என்றேன் பத்திரிகையைப் பிரித்து வைத்துக் கொண்டே.

''அவள் எழுதுகிறது தான் நன்றாயில்லே, அதனாலே பொம்மனாட்டிகளெல்லாம் கெட்டுப் போய் விடறான்னு தினம் ஒரு பாராயணம் வைவாளே, இப்போ என்ன அதிலே அபூருபம் கண்டாளாம்?'' என்றான் உடலைத் துளிக் கூட வெளியே காட்டாமல்.

''நெக்லேஸைப் பற்றி எழுதியிருக்கிறாள்......''


''நெக்லேஸைப் பத்தியா? இதோ வந்துட்டேன்......'' என்று சொல்லிக்கொண்டே எழுந்து அவசர அவசரமாக வந்தான்.

நான் பதறாமல் பிரித்த பக்கத்தோடு அவனிடம் பத்திரிகையைக் கொடுத்தேன். அவன் வந்த அவசரத்தில் மூச்சு வாங்கப் படிக்க ஆரம்பித்தான். படித்துக் கொண்டு வர வர, கொடி நுனியில் மலர்ந்த அழகிய தாமரை மலர் போலிருந்த அவன் வதனம், துடுப்பில் செருகி அடுப்பில் வைத்த கத்திரிக்காயைப் போல் மாறிக் கொண்டு வந்தது. பத்திரிகையைப் படித்துவிட்டு ஆத்திரத்தோடு மேஜை மீது எறிந்து விட்டுக் கண்ணீர் நிறைந்த கண்களுடன் என்னைப் பார்த்தான். 'ஏன் சொல்ல மாட்டேள்? உங்களுக்குச் சாதகமா எழுதியிருக்காளோல்லியோ, அபூர்வமா எழுதறாள்—உடனே நோபல் பரிசு கொடுக்கணும்னு கூடச் சொல்லுவேள்!......நானும் இரண்டு வாரமாகத்தான் பார்த்துக் கொண்டு வருகிறேன். வர வர அவள் எழுதுகிறது எனக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லே...'' என்றான் முகத்தை அஷ்ட கோணலாக வைத்துக் கொண்டு.

''கொஞ்சம் அனுபவ பூர்வமாக எழுத ஆரம்பிச்சாலே சில பேருக்குப் பிடிக்காது......'' என்று நான் ஆரம்பித்தேன்.

''ஆமாம், இப்போ அவள் அனுபவ பூர்வமா எழுத ஆரம்பிச்சுட்டா; உங்களுக்குச் சாதகமாய்ப் போயிடுத்து. இந்த

திருடனைப் பிடிக்க....!



கதை எழுதுபவர் (டெலிபோனில்):— ஹல்லோ! போலீஸ் ஸ்டேஷனு? உடனே ஒரு துப்பறியும் இன்ஸ்பெக்டரை இங்கே அனுப்புங்கள். நான் எழுதிக் கொண்டு இருக்கும் கதையில் திருடன் தப்பி ஓடிவிட்டான்; அவனை எப்படிக் கண்டு பிடிப்பது என்று எனக்குத் தெரியவில்லை..........

வீண் கதையெல்லாம் ஏன்? உனக்கு நெக்லேஸ் வாங்கிக் கொடுக்க எனக்கு இஷ்டமில்லேன்னு சொல்லிடுங்கோ! நானும் ஆயுசு பூராவும் இப்படியே கழுத்து மூளியா......"

"கழுத்து மூளியாய்ப் போவானேன்? அதுதான் திருமாங்கல்யம் சங்கிலி—காசிக் காய் மணி எல்லாமிருக்கிறதே! வேணுமின்னு இன்னும் பாசமணி பவழ மணி ஏதாவது வாங்கிப் போட்டுக்கிறது!"

"போதும்! இப்படி ஏதாவது அச்சான்யம் மாதிரி பேசத்தான் தெரியும்......"

"இப்போ எனக்கொன்றும் நெக்லேஸ் வாங்கிக் கொடுப்பது பற்றி ஆக்ஷேபணையில்லே. இருந்தாலும் உன் கழுத்து இருக்கு பாரு, ரொம்ப ரொம்ப மெல்லிசு! உண்மையாக நெக்லேஸ் போட்டா கருக்குப் போட்டது மாதிரிதானிருக்கும் அதுக்கு!"

"அதுக்கென்ன ......?"

"கழுத்தைக் குட்டையாகவும் தோளோடு அழுந்தியது மாதிரியும் செய்துக்கணும்."

"எப்படிச் செய்துக்கிறது? சயச் சொம்பா என்ன, அடிச்சாலாவது அழுந்திப் போகுக்கிறதுக்கு?"

"ம்...எரிச்சலும் ஆத்திரமும் இருந்தால் மூளைதான் குழம்பும். எதற்கும் வழி தோணுது. போய் நல்ல குளிர்ந்த நீர்த்தமா ஒரு டம்ளர் குடிச்சுட்டு வா! கொஞ்சம் உனக்குப் படபடப்புத் தணிந்தாப்போலே இருக்கும். நானும் ஒரு வழி சொல்லுவேன்."

"எனக்கு ஒரு படபடப்பும் இல்லே; நீங்கதான் ஒரு வழி சொல்லுங்கோ! நான் கேட்கிறேன்—எப்படியாவது எனக்கு நெக்லேஸ் வந்தால் சரிதான்."

"இதோ பார்! உனக்குக் கழுத்துக் குட்டையாகவும் பருமனாகவும் ஆகணும்னு உடம்பு பெருக்கணும், இல்லையா? உடம்பு பெருக்கணும்னு நல்ல புஷ்டியான ஆகாரம், டானிக் இதெல்லாம் சாப்பிடணும். நீ உன் உடம்பைப் பற்றியே கவலையில்லாமலிருக்கே! முதலில் அதைக் கவனி; தானே நெக்லேஸ் வந்து சேரும்" என்றேன் நான்.


அவளுக்கு இது நல்ல யோசனையாகப் பட்டது. கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு "சரி" என்றாள் மன நிம்மதியோடு.

என்ன ஆகாரம் சாப்பிட்டாலும் எந்த டானிக்கைச் சாப்பிட்டாலும் அவள் உடம்பு பெருக்காது. நானும் நெக்லேஸ் வாங்கிக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமிருக்காது என்றுதான் முதலில் நினைத்தேன். அவளும் தினம் மூன்று வேளை இரண்டு ஸ்பூன் டானிக்கைச் சாப்பிட்டு விட்டுக் கண்ணாடி எதிரில் போய் நின்று உடம்பை யெல்லாம் ஒரு தடவை பார்த்து விட்டுக் கழுத்தையும் ஒரு தடவை தடவிக் கொள்ளுகிறாள். அவள் அசாத்ய நம்பிக்கை யோடுதானிருக்கிறாள். நாளாக நாளாக எனக்குக் கூடத் தோன்றுகிறது—அவள் பருமனாகிக் கொண்டு வருவது போலவும், அவளுடைய கழுத்தும் பருத்துக் குட்டையாகிக் கொண்டு வருவது போலவும்.

என் மனதில் ஒரு புறம் 'நெக்லேஸ் வாங்க வேண்டுமே' என்ற பயமிருந்தாலும் இன்னொருபுறம் வேறொரு நம்பிக்கையுமிருக்கிறது. அவள் நன்றாய்ப் பருமனாகி அவளுடைய கழுத்தும் குட்டையானவுடன் 'விசேஷ மித்திரன்' பத்திரிகையில் சகோதரி இலகம் 'பருமனான கழுத்துள்ளவர்கள் நெக்லேஸ் போட்டுக் கொண்டால் எடுப்பாக இல்லை. கழுத்தோடு கழுத்தாக இருக்கிற இடம் தெரியாமல் புதைந்து மறைந்து விடுகிறது' என்று கட்டாயம் எழுதுவாள் என்ற நம்பிக்கைதான் அது!



"நான் விரும்புவது
வாடர்மன்
-தான்"
நான் வாடர்மன் பேனுவை விரும்பி வாங்குவதற்குக் காரணம், அதன் சிறந்த வேலைப்பாடு, நம்பிக்கையான உழைப்பு, நான் எழுதுவதற்கு உகந்தபடி வளைந்து கொடுக்கக்கூடியதோ, உறுதியாகவோ உள்ளதைப் பொறுக்கியெடுக்கக்கூடிய கையாலேயே சாணையிட்ட பதார 14 காரட் நிப்புக்கள், இவை தான். சுலபமாக மை நிரப்பக்கூடிய லீவர் எவ்வளவோ தொல்லைகளைப் போக்குகிறது. ஒரே தடவை அமுக்கி எடுத்தால்போதும் பேனு நிரம்பிவிடும். இதுதான் முக்கியமானது. ஒரு தொந்தரவும் இல்லை. பணத்துக்குத் தகுந்த உண்மையான மதிப்பு. வியாபாரியான எனக்கல்லவா தெரியும் இதன் மதிப்பு.
Waterman's
வாடர்மன்
பேனுக்கள், பென்ஸில்கள், மைகள்
வர்ண ஜாலங்கள் தான் இக்காலத்திய நாகரீகம். பெயர்பெற்ற "டாப் பீல்" பாட்டில்களிலுள்ள வாடர்மன் வர்ண மைகளைக் காண்பிக்கும்படி கேளுங்கள். ஒன்பது அழகான வர்ணங்களில் உள்ளன.
வியாபார விவரங்களுக்கு எழுதுங்கள்:—ஜாதம் ஏபர்க்ரோம்பி & கம்பெனி, லிமிடெட், போர்ப்ஸ் பில்டிங், ஹோம் தெரு, பம்பாய்.
CX 104.




இலங்கை
4—6—48

கொள்ளையடிப்பது யார்?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

இலங்கையின் வருமானத்துக்கு உயிர்நாடி, தென் இந்திய ஏழைத் தொழிலாளி மக்களே.



கொடிய விலங்குகள் வாழ்ந்த காடுகளை அழித்து, நாகரிக மக்கள் வாழும் நாடாக்கி, பொன்னெனப் போற்றப்படும் தேயிலையையும், ரப்பரையும் உற்பத்தியாக்கிய பெருமை அவர்களையல்லவா சார்ந்தது? ஆனால் இந்த நன்றியை நூற்றுக்குப் பத்துப் பேரேனும் நினைக்கிறார்களா?

இலங்கையின் செல்வத்தை எல்லாம் நாங்கள் அபகரித்துச் செல்வதாகவும், இங்குள்ள சிங்களவரின் வேலைக் கஷ்டத்திற்கு நாங்கள்தான் காரணமென்றும், எங்களை வெளியேறும்படியும் வற்புறுத்துகிறார்கள். ஏன்? அவர்கள் வேலை செய்வதை நாங்கள் தடுக்கிறோமா? அநுராதபுரி முதலிய இடங்களிலுள்ள காடுகளை அழித்து ஏன் அவர்கள் பயிரிடக்கூடாது? அல்லது, எங்களோடு சேர்ந்து வேலை செய்யலாம் அல்லவா? எங்களோடு வேலை செய்யும் சிலர், மழை சிறிது தூறிவிட்டாலும், வேலையை விட்டு வீட்டுக்கு ஓடுகிறார்கள். ஆனால் நாங்களோ பெய்யாத மழை பெருமழை பெய்தாலும், காயாத வெயில் கடுமையாய்க் காய்ந்தாலும், காலை ஆறு மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை எங்கள் கடமையைச் சரிவர நிறைவேற்றுகிறோம். எங்களுக்கு ஒரு நாளைக்குச் சம்பளம் ஒன்றரை ரூபாய்க்கும் குறைவாகவே கிடைக்கிறது.

நாங்கள் பாடுபட, சும்மா யிருக்கும் வெள்ளையர்கள் கோடிக் கணக்கில் லாபம் அடித்து இங்கிலாந்துக்குக் கொண்டு போகிறார்கள். இதை எல்லாம் கேட்பார் இல்லை. இவைகளுக்கு ஒரு கணக்கும் இல்லை. ஆனால் ஏழை இந்தியர்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பணத்துக்குக் கணக்குக்கு மேல் கணக்கு. ஐம்பது ரூபாய்க்கு மேல் 'பர்மிட்' இல்லாமல் இந்தியாவுக்குப் பணம் அனுப்பக் கூடாதாம்.

சா. ப. நமசிவாயம்.

திருவான்மியூர்,
6—6—48

குடியானவன் கதி என்ன?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

தாங்கள் 13-ம் தேதி பிரதியில் "அலைந்தது மிச்சம்" என்ற தலைப்பின் கீழ்ப் பிரசுரித்திருக்கும் கடிதத்தைப் பார்த்தேன். விவசாய இலாக்காவைப் பற்றி ஸ்ரீ வி. குருசாமி அவர்கள் கூறுவது முற்றிலும் உண்மையே. ஏறக்குறைய உலக விஷயங்கள் தெரிந்த அவருக்கே அந்த கதி என்றால் ஒன்றுமே அறியாத ஏழைக் குடியானவனின் கதி என்ன என்பதைப் பொது மக்கள் எளிதில் ஊகித்துக் கொள்ளலாம். பம்பு செட்டுகள், முக்கியமாகப் பெட்ரோல், க்ரூட் ஆயில் பம்பு செட்டுகள் நிறைய இருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர். அப்படியிருந்தும் கிராம வாசிகளுக்கு அவை கிடைக்கவில்லை.

ஞா. பிரேமானந்தா.

ச—ம்
25—5—48

தீராதோ துயரம்?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

நான் ஒரு ரயில்வே தொழிலாளி. அதிலும் ஸ்டேஷன் மாஸ்டர். ஸ்டேஷன் என்றால் எப்படிப்பட்ட ஸ்டேஷன் என்கிறீர்கள்? ஏகாந்தபுரம் ஸ்டேஷன்தான். ஸ்டேஷனுக்குக் கண்ணும் (கை காட்டியும்) காதும் (டெலிபோனும்) கிடையாது. பார்த்தால் அரிச்சந்திர மயானகட்டம் போலிருக்கும். சுற்றிலும் இரண்டு மைல்களுக்கு ஊரே கிடையாது. இலையோ, காய் கறியோ, கடுகோ, தீப்பெட்டியோ வாங்க வேணுமென்றால், இந்த செக்ஷனில் ஓடுகிற ஆறு வண்டியில், நிற்காத இரண்டு வண்டி தவிர, பாக்கி நான்கு வண்டிகளில் ஏதிலாவது ஒன்றில் போய் அடுத்த ஸ்டேஷன்களிலிருந்து வாங்கி வந்தாக வேண்டும்!

என்ன துரதிர்ஷ்டம் செய்தனவோ என் குழந்தைகள். நான் அநுபவிக்கும் தனிமை வாழ்க்கையை அவைகளும் அநுபவிக்கின்றன. நல்லது கெட்டது கிடையாது. அண்டை அயலார் கிடையாது. ஒரு சினிமா, நாடகம், கதை, நாட்டியம், பாட்டுக் கச்சேரி, திருநாள், விளையாட்டு இவைகளை இம்மியும் அநுபவிக்க முடியாது. இரவு வேளைகளில் வீட்டை யாராவது வந்து கொள்ளையடித்தாலும் கேள்வி கேட்பார் கிடையாது.



எனக்கு முந்நூற்றிருபத்தைந்து நாளும் வேலை. தினசரி இருபத்துநான்கு மணி நேரம் வேலை. எட்டு மணி நேர வேலை, வாராந்திர ஓய்வு என்பதெல்லாம் எங்களுக்குக் கிடையாது. லீவு கேட்டாலும் உடனே கிடைப்பதில்லை. கிடைத்தாலும் காலா காலத்தில் பதில் ஆள் வருவதில்லை. வந்தாலும் எல்லாச் சாமான்களையும் அநாதியாகப் போட்டு விட்டுப் போக மனம் வருவதுமில்லை.

எங்கள் துயரம் நிறைந்த வாழ்க்கையை அதிகார வர்க்கம் கண் திறந்து பார்த்து எங்களுடைய குறைகளைப் பின் கண்ட வண்ணம் தீர்க்குமா?

1. எங்கள் கிரேடு 60—150. அதைப் போலவே கமர்ஷியல் கிளார்க்குகளின்

சம்பள கிரேடும் அமைக்கப்பட்டிருக்கின்றது. சம்பளமும் கிரேடும் இரண்டிற்கும் ஒரே மாதிரி அமைத்திருப்பதின் காரணம், எல்லா வேலைகளின் தரமும் பொறுப்பும் ஒரே மாதிரி என்பதினாலேதான். ஆகவே, நாங்கள் விரும்பினும் எங்களையும் கமர்ஷியல் கிளார்க்குகளாக மாற்றுவதில் ஆக்ஷேபம் இருக்கக்கூடாது.

2. அதேமாதிரி கமர்ஷியல் கிளார்க்குகள் விரும்பினும் அவர்களையும் எங்களைப் போல் C. N. C. ஆக மாற்றத் தயங்கக் கூடாது.

ஸி. யென். ஸி.

நாமக்கல்
22—6—48

இது அநியாயம்!

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

பாலர்களைச் சரியான பாதையில் நடத்தி அவர்களின் அறிவை வளர்ப்பவர்கள் ஆசிரியர்கள். பாலர்கள் செவ்வையான பாதையில் முன்னேற வேண்டுமானால் ஒவ்வொரு பள்ளிக்கும் போதுமான ஆசிரியர்கள் தேவை.



ஆனால் இன்றையப் பள்ளிக்கூடங்களின் நிலைமை என்ன? போதுமான ஆசிரியர்கள் உள்ள பள்ளிக்கூடங்கள் மிகச் சிலவே. ஆறு ஆசிரியர்கள் வேண்டுமிடத்திலே மூன்று ஆசிரியர்களைக் கொண்டு வேலை வாங்கினால் எவ்வளவு ஒழுங்காகவும் திறமையுடனும் வேலைகள் நடைபெறும்? இதிலே முதல் தரமான குற்றவாளி அரசாங்கமே.

மேலும், ஆசிரியர்களை ஏழு, எட்டு மாதங்கள் வேலை செய்தபின்பு கோடைகால விடுமுறையின்போது வேலையினின்று தள்ளிவிடுவது, பின்பு விடுமுறை நாட்கள் முடிந்தபின் திரும்பவும் வேலையை ஒப்புக்கொள்ளச் செய்வது போன்ற அநியாயம் அநேக பள்ளிகளில் நடந்து வருகிறது. இந்த அநியாயத்தில் அரசாங்கத்தின் பங்கு அதிகம். ஒரு மாதம் அல்லது ஆறு வாரச் சம்பளத்திற்காக உடலையும் உயிரையும் ஒருங்கே அர்ப்பணம் செய்து வேலை செய்தவரை நீக்கிவிடுதல் கொடுஞ் செயலாகும்.

ஞானம்மாள், டி. பெருமாள்.

மதுரை
12—6—48

கண்ணால் காண முடியாதா?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

பாலர் வகுப்புப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் உள்ள ஒரு படத்தை முன்பெல்லாம் படித்த ஞாபகம் வருகிறது. 'மாட்சிமை தங்கிய' ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தியின் படத்தைத் தலைப்பில் போட்டிருப்பார்கள். கீழே "இவர் நமது அரசர். இவர் இங்கிலாந்தில் இருக்கிறார். அங்கிருந்து இவர் இந்தியாவையும் நம்மையும் ஆள்கிறார்......." என்பதாக எழுதியிருக்கும்.

கிட்டத்தட்ட இந்தப் பாடம் போக்கின் சாயலில்தான் இருக்கிறது இப்போதுள்ள ஸிமிண்ட் வினியோகமும், ஸிமிண்ட் கிடைப்பதில் உள்ள கஷ்டமும். ஸிமிண்டைக் கண்ணால் காண்பதே கஷ்டமாகி விட்டது. நமது குழந்தைகளுக்குச் ஸிமிண்டைப் பற்றிச் சொல்ல நேர்ந்தால், "தம்பி, இதோ பார்! இந்தக் கட்டிடம் ஸிமிண்டினால் கட்டப்பட்டது. இதைத் தொட்டால் வழ வழ என்றிருக்கும்......" என்று சொல்லவேண்டிய நிலைமையே ஏற்பட்டு விடுமோ என்னவோ?

உற்பத்தியாளர்கள் "ஸிமிண்ட் எங்களிடம் ஏராளமாக இருக்கிறது. ஆனால் அனுப்புவதற்குப் போதிய ரயில் வசதி இல்லை" என்கிறார்கள். அவர்களும் தங்களால் முடிந்தவரை ஸிமிண்டை வினியோகஸ்தர்களுக்கு அனுப்பித்தான் வருகிறார்கள். ஆனால் வினியோகஸ்தர்களிடமிருந்துதான் சாதாரண மக்களுக்கு ஒரு மூட்டை கூடக் கிடைக்க மாட்டேன் என்கிறது. ஆனால் டன் கணக்கில் சிலருக்குக் கிடைக்கிறது!

எம். பி. துரைஸ்வாமி.

பட்டுக்கோட்டை
30—6—48

கைமேல் பலன்

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

'கல்கி' இதழ்களில் 'பெற்றோன்' தொடர்ந்து எழுதிவந்த "எத்தனை நாள் இக்கொடுமை?" என்ற கட்டுரையில் எஸ். எஸ். எல். ஸி. ஆங்கில, தமிழ் பாடப் புத்தகங்களைச் சர்க்காரே அச்சிடுவதாகவும் அப்புத்தகம் விற்பவர்களுக்குச் சர்க்கார் கமிஷன் எதுவும் கொடுப்பது கிடையாதெனவும் எழுதியிருந்தது. மேலும் அப்புத்தகங்களுக்கு சர்க்கார் வைத்துள்ள விலையாகிய ரூ. 1—4—0 மிகவும் அதிக விலையெனவும் எழுதப்பட்டிருந்தது.

ஆனால், உண்மையைத் தங்கள் பத்திரிகை வெளியிட்ட கோபத்தினால்தானோ என்னவோ, சர்க்கார் இந்த வருஷம் புத்தகத்தின் விலையை ரூ. 1—8—0 என மாற்றியமைத்து விட்டது!

இதற்குக் காரணம் என்னவென்பதைச் சர்க்கார் விளக்குவார்களா? என்னைப் போன்ற ஏழை மாணவர்களுடைய பணத்தைக் கொள்ளை யடிப்பதுதான் அவர்களுடைய நோக்கம் என்றால், அதைத் தெளிவாகச் சொல்லி விட்டுமே!

இ. ரா. பாலசுப்ரமண்யம்.

மதுரை
29—6—48

ஒரே வழி!

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

பெரிய நகரங்களிலெல்லாம் டிராபிக் இடைஞ்சலைத் தவிர்க்க சில இடங்களில் one way (ஒரே வழி) என்று போர்டு போட்டு வைத்திருக்கிறார்கள். இதனால் எல்லோருக்கும் நன்மைதான்; இடைஞ்சல்களையும் தவிர்க்கலாம். இதை நடைமுறையில் கொண்டு வருவதற்கு முக்கியமாகப் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் பாடுபட வேண்டியிருக்க, அவர்களே ஒரே வழி என்ற பக்கங்களில் சட்டத்திற்கு விரோதமாகச் செல்கிறார்கள். அதுவும் அவர்கள் யூனிபாரத்தோடு (uniform) செல்லுகிறார்கள். அதை யொட்டியே மற்றவர்களும் போனால் அப்படிக் கடந்து செல்லும் போலீஸ்காரராலேயே அவர்கள் சார்ஜ் செய்யப்படுகிறார்கள். முக்கியமாக டவுனில் உள்ளவர்கள்



தான் கூடுமானவரையில் one way யை அனுசரித்துச் செல்கிறார்கள். வெளியூர்களிலிருந்து வருபவர்கள் இதை எப்படித்

தெரிந்து கொள்ள முடியும்? பிளாட்பார ஆரம்பத்திலே 'ஒரே வழி' என்று தமிழிலே போர்டு இருந்தால் அதைப் பார்த்த பின் பாவது போகாமல் தவிர்க்கலாம். அப்படியு மில்லை; பிளாட்பார ஓரத்தில் ஏதாவது ஒரு இடத்தில், 'one way' என்று இங்கிலீஷில் எழுதி வைத்திருக்கிறார்கள். எல்லோருக்கும் இங்கிலீஷ் தெரிந்திருக்கும் என்பது என்ன நிச்சயம்? அவசரக்காரர்கள் ஏதாவது அவசர நிமித்தம் 'போலீஸ்காரரே இவ்வழி செல்கிறாரே, நானும் செல்லலாம்' என்று நினைத்து அப்பக்கம் போனாரே யானால் அவர் போகும் அவசர காரியத்தை விட்டுவிட்டுப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவதும், சாட்சிக்கு ஆள் தேடுவதுமாக இருக்க வேண்டியதுதான்.

இதேபோல்தான் இரவில் சைக்கிள்களில் விளக்கு வைக்கும் முறையும் நடந்து வருகிறது. பெரிய உத்தியோகஸ்தர்களிலிருந்து சிறிய உத்தியோகஸ்தர்கள் வரை விளக்கே வைப்பதில்லை. இவர்கள் விளக்கு இல்லாமல் செல்வதை ஒட்டி, மற்றவர்கள் சென்றால் 'சார்ஜ்' செய்யப்படுகிறார்கள். இதில் என்ன நீதி இருக்கிறது?

ஆ. குருசாமி.

என்ன செய்வார்?

தென்னூர்
21—6—48

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

லஞ்சப் பழக்கம் ஒழிய வேண்டுமென்று எல்லோரும் கூக்குரலிடுகிறார்கள். ஆனால் லஞ்சம் வாங்கத் தூண்டும் ஒரு கொடிய வழக்கம் நம் அதிகாரிகளிடையே இருப்பதைப் பெரும்பாலோர் அறியவில்லை. அது தான் மேல் அதிகாரிகள் 'காம்ப்' வந்தால் கீழ் அதிகாரிகள் சப்ளை செய்வது. இதுவே பெரும்பாலான கீழ்த்தர உத்தியோகஸ்தர்களை லஞ்சம் வாங்கத் தூண்டுகிறது. இதற்கு ஓர் உதாரணம் கொடுக்கிறேன்.

ஒரு P. W. D. சூப்பிரெண்டெண்ட் இஞ்சினீருக்கு ரூ. 1500 லிருந்து ரூ. 2500 வரை சம்பளம். அவர்கள் 'காம்ப்' போனால் சாதாரணப் படி தினசரி 15 ரூபாய். நீண்ட தூரம் போக நேர்ந்தால் கார் அலவன்ஸ் என்று தினம் 25 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரை வாங்கலாம். இவர்கள் அநேகமாகத் தங்கள் கார்களைத் தூசி படாமல் வீட்டில் வைத்துவிட்டு, வரவேண்டிய இடத்துக்கு ரயிலில் வந்து வேறு யாருடைய காரிலாவது வேலையை முடித்துக்கொண்டு போய்விடுவார்கள்.

மேற்படி அதிகாரி 'காம்ப்' வந்தால் குடும்ப சமேதராக, பியூன், சமையற்காரன், வேலைக்காரர்கள் முதலிய பரிவாரங்களுடன் வருவார். அவர் தங்கும் இடத்தில் வேண்டிய சௌகரியங்களைக் கவனிப்பது அவ்விடத்திய ஓவர்ஸீயரின் கடமை. அவர் ஒரு வேளை தங்குவதற்கு அவருடைய பரிவாரத்துக்கு அரிசி, பருப்பு முதல் காய்கறிகள், பழ வகைகள், நெய், பால், தயிர்—இன்னும் சைவரல்லாதவராக இருந்தால் மாமிசம், முட்டை வகைகள் எல்லாம் தயாராக வேண்டும். இது தவிர ஓவர்ஸீயரிடம் காமதேனுவோ கற்பக விருட்சமோ இருக்கிறதென்ற நினைப்பில் ஊரிலே கிடைப்பதற்கரிய காப்பிக்கொட்டை, சர்க்கரை, அரிசி முதலிய சாமான்கள் வேண்டுமென்ற கட்டளை பிறக்கும். மேற்படி அதிகாரியின் ஒரு வேளை விஜயத்தால் ஓவர்ஸீயருக்கு ஐம்பது ரூபாய்க்கு மேல் செலவாகும். இவ்வாறு ஒவ்வொரு அதிகாரியின் விஜயத்தின் போதும் ஐம்பது ரூபாய் செலவு செய்து அவரைத் திருப்தி செய்ய வேண்டுமென்றால் நூற்றைம்பது ரூபாய் மாதச் சம்பளம் வாங்கும் ஏழை ஓவர்ஸீயர் என்ன செய்வார்? அவர் தன்னிடம் வருபவரிடம் லஞ்சம் வாங்கவும் இரக்கமற்று நடந்து கொள்ளவும் வேலையில் பொறுப்பற்று அதிகாரியின் தயவைச் சம்பாதிப்பதில் கவன முள்ளவராகவும் ஆகிறார். ஆயிரக் கணக்கில் சம்பளம் வாங்கும் அதிகாரிகள் தங்களுக்கு வேண்டிய சாமான்களைத் தாங்களே வாங்கிக் கொள்ளக் கூடாதா?

எம். பி. ஜானகி.

கும்பகோணம்
28-6-48

கல்வி மந்திரி கவனிப்பாரா?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

சமீபத்தில் சென்னை கல்வி மந்திரி கனம் அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் "இன்னும் ஐந்து வருஷங்களில் நம் சர்க்கார் நடவடிக்கைகள் தமிழிலேயே நடக்கும்" என்று பேசியுள்ளார். இது மகிழ்ச்சிக்குரிய செய்திதான். அப்படி சர்க்கார் நடவடிக்கை தமிழிலேயே நடப்பதற்குத் தமிழ் டைப் கருவிகள் அதிகம் வேண்டும். எல்லா நடவடிக்கைகளையும் கையால் எழுதுவது என்பது முடியாத காரியம். ஆனால் நம் மாகாணத்தில் தமிழ் டைப் அடிக்கத் தெரிந்தவர்கள் ஒரு சிலர்தான் உள்ளனர். காரணம் ஒரு சில இடத்தைத் தவிர மற்ற இடங்களில் தமிழ் டைப் கற்றுக் கொடுக்காததே. அந்த ஒரு சில இடங்களிலும் பலரில் சிலருக்குத்தான் இடமிருக்கிறது. காரணம் தமிழ் டைப் கருவிகள் அதிக விலை; தவிரவும் மார்க்கெட்டில் தமிழ் டைப் கருவிகள் கிடைப்பதில்லை. இப்போது நம் மாகாணத்தில் ஆங்கிலத்தில் டைப் அடிப்பவர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனர். இவர்களுக்கு இன்னும் ஐந்து வருஷங்களுக்குப் பிறகு இந்த ஆங்கில டைப் என்ன பயனைத் தரும்? ஆகையால் சென்னை சர்க்கார் தமிழ் டைப் கருவிகளை ஏராளமாக நம் மாகாணத்திற்குத் தருவிக்க முயற்சி செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். தவிர அதிகமாகத் தமிழ் டைப் சொல்லிக் கொடுக்கக் கூடிய இடங்களை ஏற்படுத்த வேண்டும். இப்பொழுது முதற்கொண்டே முயற்சித்தால்தான் சர்க்காருக்குச் சௌகரியமென்று நம்புகிறேன். கனம் கல்வி மந்திரி இதைக் கவனிப்பாரா?

கிருஷ்ணமூர்த்தி.

* இந்த இதழில் வெளியாகி யிருக்கும் வட்ட மேஜைக் கடிதங்களில் இலங்கை ச. ப. நமச்சிவாயம் எழுதியிருக்கும் கடிதத்துக்கு ரூ. 25 பரிசளிக்கப்பட்டது.



சைக்கிள் விபத்து

ரா. வேங்கடரத்தினம்

மழை 'சோ' வென்று கொட்டிக் கொண்டிருந்தது. சுற்றிலும் கும்மிருட்டு கவிந்திருந்தது. வானில் சந்திரன் இருக்குமிடமே தெரியவில்லை. 'மினுக் மினுக்' என்று தூரத்தில் சில விண்மீன்கள் தம் கண்களைத் திறந்தும் மூடிக் கொண்டும் விளையாடிக் கொண்டிருந்தன. இடையிடையே மின்னல் பளிச்சென்று தோன்றி, ஆகாய வெளியில் தங்க ரேகையைப் பதித்துவிட்டு, ஒரு கணத்தினுள் அதை யெடுத்துச் சுருட்டிக்கொண்டு மறைந்தது.

• • •

மாலையில் 'கிளப்'புக்கு டென்னிஸ் ஆடக் கிளம்பியபோது மழைக்கு எவ்வித அறிகுறியும் தென்படவில்லை. வானம் நன்கு வெளுத்துப் பால் போன்றிருந்தது. ஆட்டம் பாதி நடந்துகொண்டிருக்கையில், திடீரென்று வெளிச்சம் மங்கியது. விண் கருத்தது. ஒரு நொடிப் பொழுதில் மழை பலத்து விட்டது. வரவர மழை பலமாகிக் கொண்டிருந்ததே யொழிய, அது நிற்கும் என்று தோன்றவில்லை. 'ராக்கெட்'டை உடனே உறையினுள் போட்டுக்கொண்டு, சைக்கிளில் வீட்டுக்கு விரைந்தேன். சைக்கிளின் முன்னிருந்த விளக்கு 'டைனமோ'வினால் இயங்குவது. வண்டியின் வேகம் கூடக் கூட, அதுவும் அதிக ஒளி தரும். ஆனால், அப்போது வண்டியைச் செலுத்துவதே எனக்குக் கடினமாய் இருந்தது. மழை நீரைக் கிழித்துக் கொண்டு, சைக்கிள் எப்படி வேகமாய்ச் செல்லும்?

சைக்கிள் சேற்றை வாரி என்னுடைய உடையின்மீது வீசியதே தவிர, துரிதமாக நகரவில்லை. எனக்கு ஆத்திரந்தான் பொங்கி வந்தது. உடல் சொட்டச் சொட்ட நனைந்திருந்தது. ஆடைகளோ சேற்றினால் பாழடைந்திருந்தன. வயிற்றில் பசி கிண்டுகிறது. அவளோ வீட்டிலே இல்லை. பழைய ஓடுகளில் எங்கெங்கே இடைவெளி இருந்து மழை ஜலம் உள்ளே ஒழுகுகிறதோ? போதாக் குறைக்குச் சாதமும் ஆறிப் போயிருக்கும். இந்நிலையில் எவ்வளவுதான் அழுத்தினாலும், சைக்கிள் நகராவிடில், ஆத்திரம் வராதிருக்குமா?

வேறு வழியின்றி, சைக்கிளிலிருந்து இறங்கி ஒரு மரத்தடியில் போய் நின்றேன்.

• • •

திடீரென மழை குறையும் சத்தம் கேட்டது. மழை அநேகமாக ஓய்ந்துவிட்ட தெனலாம். வெறும் தூற்றல்தான் 'சொய்'யென்று கேட்டுக் கொண்டிருந்தது. சுமார் ஒரு பர்லாங் தூரத்துக்கு அப்பால் யாரோ என்னைப்போல் மழைக்காக ஒதுங்கிக் கொண்டிருந்தவர்கள் இருவர், திரும்பவும் நடந்து போவது என் கண்ணுக்குத் தெரிந்தது. நானும் உடனே கிளம்பிவிட்டேன். வண்டியும் விசையோடு விரைந்தோடியது.

எனக்கு உற்சாகம் கிளம்பி விட்டது. ஒரு கையில் 'ராக்கெட்'டைப் பிடித்துக் கொண்டு லாகவமாக அதைச் சுழற்றிக் கொண்டும், மற்றொரு கையினால் சைக்கிளைச் சமாளித்துக் கொண்டும், ஓட்டினேன் விரைவாக. இதுதான் என்னுடைய வழக்கமான 'ஸ்டைல்' —'போஸ்' எல்லாம்!



மழை நின்றும் சாலை விளக்குகள் அணைந்தே இருந்தன. இன்னும் அவை எரிய ஆரம்பிக்கவில்லை. வந்த மழையும் நின்று விட்டதே என்று தவளைகள் ஓலமிட்டுக் கொண்டிருந்தன. எதோ ஒரு திக்கிலிருந்து இடியும் முழங்கிக் கொண்டிருந்தது. மழை ஜலம் 'சோ' வென இரைந்த வண்ணம், கொஞ்சம் கொஞ்சமாய் வடிந்து கொண்டிருந்தது.

இயற்கையின் இத்தகைய இரைச்சலுக்கிடையே, நான் வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தேன். ஆம், ஒற்றைக் கைச் சவாரிதான். எனக்கு முன்னே இருபது கஜ தூரத்தில் இரு உருவங்கள் சென்று கொண்டிருந்ததைக் கண்டேன். என் சைக்கிள் நானறியாமலேயே வெகு வேகமாகப் பறந்து கொண்டிருந்தது.

* * *

அவ்விருவரும் நான் கிளம்புவதற்கு முன் புறப்பட்டவர்கள்தான். இயற்கை எனக்கு எதிரியாக இருந்தது. நான் மணியை அடிக்கத்தான் செய்தேன். ஆனால் அச்சிறு சத்தம் அவர்களுக்கு எப்படிக் கேட்டிருக்கும்? — அதுவும் அந்தப் பேரிரைச்சல்களினூடே? அதற்குள் என் சைக்கிள் அவர்களை அணுகி விட்டது. அதற்கு நான் என்ன செய்வது? நான் இன்னொரு கையையும் கொணர்ந்து சமாளிப்பதற்குள் சைக்கிள் அப் பாலகன் மீது மோதி அவனைக் கீழே தள்ளியது. அடிபட்ட பையனுக்கு ஆறு வயதிருக்கும். அவன் பின்புறமாகத் தள்ளப் பட்டதால், தலையில் பலத்த அடி. காயத்திலிருந்து—இல்லை, பிளந்து போன மண்டையிலிருந்து—உதிரம் பீறிட்டடித்தது. எங்கும் ஒரே ரத்த வெள்ளம்.

கூட வந்தது அச்சிறுவனின் அக்காள் தான். அவளுக்கு வயது ஒன்பது இருக்கலாம். முகம் தெளிவாக, எதிர்த்துக் கொள்ளும் ஆற்றல் உள்ளவள் என்று கூறுவது போல் இருந்தது. ஆனால் பிச்சைக்காரப் பெண்; அதற்குத் தகுந்த சொற்கள்.

"ஏஞ்சாமி என் தம்பியைக் கொலை பண்ணிப்புட்டே? சைக்கிளை ஆண்மே லேத்தி மண்டையை உடைச்சுப் புட்டேயே, சாமி! ராப்பிச்சைக்குப் போயிருக்கும் எங்க ஆத்தா வந்தா, என்னு சொல்லுவேன்? முளிக்கிறயே, சாமி!" என்று கத்திவிட்டு, அவள் 'ஓ' வென்று அழத் தொடங்கினாள்.

நான் குற்றவாளியென்பதை என் மனம் ஒரு புறம் அறிந்திருக்க, அவளிடமிருந்து தப்புவதற்காக "ஏம்புள்ளே சும்மாக் கத்தறே? அங்கேயிருந்து மணியடித்துக் கொண்டு வருகிறேன். நான் கொலை பண்ணி விட்டதாகவா நீ பேசறே, ஏம்புள்ள?" என்று பிச்சைக்காரப் பெண்ணுக்குச் சரியாகக் கத்தி விட்டு ஏறினேன் சைக்கிளில். இந்தப் பாழும் முனிசிபாலிடி விளக்கு அதுவரை வராதிருந்து அப்போதுதான் வந்து தொலைய வேண்டுமா? விளக்கு வெளிச்சத்தில் அச்சிறுமி என்னைப் பார்த்த பார்வையில் நான் பயந்து போனேன்.

* * *

என் மனைவி அப்போது பிறந்தகத்துக்குப் போயிருந்தாள். வீட்டில் நான் மட்டுந்தான் இருந்தேன். சாயந்திரமே அவள் சமைத்து வைத்துவிட்டுச் சென்றிருந்த சோற்றை இலையில் எடுத்துப் போட்டுக் கொண்டு, மத்தியானச் சாம்பாரையும் போட்டுக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தேன். ஒரு பருக்கைச் சோறு கூட ருசிக்கவில்லை. உண்ணாமல், வெகு நேரம் சோற்றை வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தேன். உடைந்த மண்டையிலிருந்து பெருகிய உதிரம் என் கண்முன் வந்து நின்றது. அடுத்ததாக அச்சிறுமியின் கனல் கக்கும் பார்வை தோன்றி மறைந்தது.

அப்போது வாசலில் "ராப்பிச்சை, சாமி" என்று கூவும் குரல் கேட்டது. சோற்றை வீணாக்கவேண்டாம்; பிச்சைக்காரிக்காவது போடலாம் என்று எண்ணி நான் இராப்பிச்சைக்காரியை யழைத்து, வெண்கலப்பானையில் இருந்த அன்னம் அவ்வளவையும் அவள் கொண்டு வந்திருந்த சட்டியில் கொட்டினேன்.

"சாம்பாரை எங்கே ஊற்றுவது?" என்றேன்.

"சோத்தில் அப்படியே ஊத்துங்க, எசமான்" என்றாள். உடனே உள்ளே

சென்று ஒரு பழைய அலுமினியக் கிண்ணத்தைக் கொணர்ந்து, அவளிடம் கொடுத்து, அதில் சாம்பாரையும் ஊற்றினேன். அவளுடைய கண்ணில் நன்றி பிரகாசித்தது. உடலோ குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தது. அவளை இருக்கச் சொல்லி விட்டு, கூடத்திற்குச் சென்று, அங்கே கொடியில் ஒரு ஓரத்தில் போட்டிருந்த பழைய பட்டுப் புடவையை சற்று ஓரத்தில் கிழித்து எடுத்துக் கொண்டு வந்து, பிச்சைக்காரியிடம் தந்தேன்.

"மகராசனா இருப்பீங்க சாமீ!" என்று அவள் வாழ்த்தி விட்டுச் சென்றாள்.

* * *

தூங்கி எழுந்தேன். முந்திய இரவின் நிகழ்ச்சிகள் உள்ளத்தில் அப்படியே இருந்தன. நான் செய்த கொலை என் மனதைச் சுட்டுக் கொண்டிருந்தது. எனினும் அந்த இராப்பிச்சைக்காரிக்கு உணவும் உடையும் தந்தது எனக்குச் சற்று ஆறுதலாக இருந்தது. இவளைப் போன்ற இராப்பிச்சைக்காரி யொருத்தியின் மகனைத் தானே நான் கொன்று விட்டேன்?

ஒரு புறம் பிச்சைக்காரி 'மகராசனாக' இருக்கும்படி தந்த வாழ்த்து; இன்னொரு புறம் சிறுமி 'கொலைகாரா' என்று அழைத்தது. பகல் கழிந்து இரவாயிற்று.

"சாமி!"

வாசலிலிருந்து அழைப்பு வந்தது. முந்திய இரவு வந்த அந்த பிச்சைக்காரி!

"மகராசா, நான் இந்த ஊரை விட்டுப் போகிறேன்" என்றாள் அவள்.

"ஏன்?" என்று அவளைக் கேட்டேன்.

"சாமி, நீங்க எனக்குச் சோறும் சேலையும் தந்தீங்க. சந்தோஷமா வீட்டுக்குப் போகிற போது, எந்தச் சண்டாளனோ என் மகன் மேலே சைக்கிள் வண்டியை ஏத்திக் கொலை பண்ணிப் புட்டான். வழியிலே என் மகன் அழுது கொண்டு கிண்ணது" என்று சொல்லி விட்டு, விம்மியழத் தொடங்கினாள். நான் வாய் திறவாமல் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"இந்தப் பட்டணத்திலே இருந்தாலே, கொலையும் குத்தும் தான், சாமி. எல்லாரும் உங்க மாதிரி இருக்காங்களா? சண்டாளனும் கொலைபாதகனும் தான் இருக்காங்க."

திரும்பவும் அவள் என்னை மனமாற வாழ்த்தி விட்டு, அழுது கொண்டே சென்றாள். அவள் செல்லும் திக்கையே நோக்கிக் கொண்டிருந்தேன்.

ஐயோ, அவளுக்கு என்மேல் எவ்வளவு விசுவாசம், அன்பு!

* * *

ஏழெட்டு ஆண்டுகள் மறைந்தன.

பக்கத்து ஊரில் அவ்வருஷமும் வழக்கம்போல் மாரியம்மன் கோயில் திருவிழா அதி விமரிசையாக நடைபெற்றது. அதற்கு நானும் போயிருந்தேன்.

கூட்டமாவது கூட்டம்! எள்ளுப்போட்டால் எள் விழாது என்பார்களே, அவ்வளவு கூட்டம் திரண்டிருந்தது. அம்மன் வீற்றிருந்த இடத்திற்குப் பக்கத்திலே செல்ல முடியவில்லை. எப்படியோ தள்ளியடித்துக் கொண்டுபோய், தேவியின் தரிசனத்தைப் பெற்றேன். பிறகு கும்பலைத் தாண்டிக் கொண்டு வெளியே வந்தேன்.

பட்டாளத்தினர் அணிவகுப்பு மரியாதை செய்வதுபோல, இரண்டு பக்கமும் பிச்சைக்காரர்கள் வரிசையாக உட்கார்ந்து போவோர் வருவோரிடம் காசு சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள். அந்த வரிசை யொன்றிலிருந்து ஒரு குரல் "மகராசா, சவுக்கியமா?" என்று விசாரிப்பதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். அங்கு அந்த இராப்பிச்சைக்காரி ஒரு துணியைப் பரப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

"இந்த எசமான்தான் அப்போ எனக்குச் சோறு, சேலை எல்லாம் தந்தார்" என்று யாரிடமோ அவள் என்னை அறிமுகப் படுத்துவதைக் கேட்டேன்.

பக்கத்தில் இருந்தவளைக் கவனித்தேன். ஐயோ, அங்கிருந்தது அச்சிறுமி தான்—இப்போது நன்றாக வளர்ந்திருந்தாள். என்னைக் கண்டதும் அவளுடைய கண்கள் பீதியடைந்தன.

"இவர்தான் ஆத்தா—" என்று அவள் தன் தாயினிடம் ஏதோ சொல்லத் தொடங்கினாள். என் தலை சுற்றியது.

டிக்கட்டுக்குப் பணம்!

காந்திஜி ஆகாகான் மாளிகையிலிருந்து விடுதலையாவதற்கு முதல் நாள் சிறை அதிகாரி அவரிடம் சென்று, "தங்களை விடுதலை செய்யும்படி உத்தரவு வந்திருக்கிறது. தாங்கள் இப்போது போகலாம்" என்றார்.

ஆனால் காந்திஜி அங்கே இரண்டு நாட்கள் தங்கவேண்டிய அவசியம் இருந்தது. இதை அவர் சிறையதிகாரியிடம் தெரிவித்தார். "அதற்கென்ன? தங்கள் இஷ்டம்போலவே செய்யுங்கள்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் அதிகாரி.

காந்திஜி சட்டென்று அந்த அதிகாரியைக் கூப்பிட்டு, "ஐயா, நான் வார்தாவுக்குப் போக ரயில் சார்ஜ் கொடுக்க வேண்டும். மறந்துவிடாதீர்கள்!" என்றார்.


1½ அணாவில்
உங்கள்
வலியிலிருந்தும்
ஜலதோஷத்திலிருந்தும்
சுகம்பெறலாம்
'ஆஸ்ப்ரோவும்'
இயற்கையும்
உங்களைக்
கைவிடமாட்டா
3 வில்லைகள் 1½ அணா
30 வில்லைகள் 15 அணா
உங்களுக்கு இதைப் படிக்க முடிகிறதல்லவா-படிக்க முடியாதவர்களுக்கு 'ஆஸ்ப்ரோ' வைப்பற்றி எடுத்துச் சொல்லி உதவிபுரியுங்கள்.
அனுபானம்:-
1-3 வில்லைகள்
ASPRO
நிர்பயம் - நிச்சயம் - நற்பலன்

கம்பர் தரும் காட்சி — டி. கே. சி.

216. நான் அல்லவா அரக்கி !

சீதையின் துன்ப வெறியானது வீர லக்ஷ்மியான தேவதையைப் பாவனை செய்யச் செய்தது. அந்த தேவதையை நோக்கி அலறச் செய்தது. இனி :

சிறிது நேரங்கழித்து 'இத்தனை கஷ்டத்துக்கு உள்ளாகியும், உணர்வு கெட்டு ஒழியவில்லையே ; உயிரும் இருக்கத்தானே செய்கிறது' என்ற எண்ணம் வருகிறது. அந்த உணர்வையும் உயிரையும் பார்த்துப் பேசுகிறாள் — துன்ப வெறியில்த்தான்.

சந்தம்

தான , தன
தன்னன தன்னன
தன்

பேணும் உணர் —
வே ! உயி ரே ! பெரு
நாள்

நாண் இன் றுழல்
வீர் ; தனி நாயக—
னைக்

காணும் துணை —
யும்கழி வீர்அவிர் ;
நான்

பூணும் பழி—
யோடுபொ ருந்துவ
தோ !

[பேணும் உணர்வே உயிரே: உணர்வே, உயிரே ! நீங்கள் உங்களை நன்றாய்ப் பேணிக் கொண்டிருக்கிறீர்கள்; நீங்கள், பெரு நாள் நாண் இன்று உழல்வீர்: நீங்கள் அழிந்தே போக வேண்டும். ஆனாலும் லஜ்ஜை கெட்டு வேண்டாத துன்பத்துக்கு உள்ளாகிக்கொண்டிருக்கிறீர்கள்; தனி நாயகனைக் காணும் துணையும் கழிவீர் அவிர்: ராமபிரானைக் காணுகிற வரை அழிந்து போக மாட்டீர்கள் தான்; நான் பூணும் பழியோடு பொருந்துவதோ: எனக்குத்தான் பழி கிடக்கிறது;—உங்களுக்கும் அது வேண்டுமா !

குறிப்பு:—உயிரோடு இருப்பதாலேயே தனக்குப் பழி என்ற எண்ணம் சீதையை ரொம்பவும் வாட்டுகிறது. அந்த நிலையில் ஒரு மயக்கம் உண்டாய் உணர்வையும் உயிரையும் பார்த்துப் புலம்ப நேர்ந்தது.]

மேலும் அந்த உணர்வோடும் உயிரோடும் பேசுகிறாள்.

"ரொம்ப அழகு, ராமன் வருவான் வருவான் என்று எண்ணிக் கொண்டு தானே விடாப்பிடியாய் இருக்கிறீர்கள். நீண்ட காலம் முடிதரித்து வாழ்ந்த தசரதன் இறந்த விஷயம் உங்களுக்குத் தெரியும். உலகமெல்லாம் துயருக்கு உள்ளாகும்படிச் செய்ததும் உங்களுக்குத் தெரியும்."

முடியா முடி
மன்னன்மு டிந்திட
வும்,

படியே ழும்நெ —
டுந்துயர் பாவிட
வும்,

மடியா நெறி
வந்துவ னம்புகு
தும்

கொடியார் வரும்
என்றுகு லாவுவ
தோ !

[முடியா முடி மன்னன்: என்றென்றுமே முடிதரித்து வாழ்வான் என்று எண்ணும்படி திடகாத்திரமாய் இருந்த தசரதன்: முடிந்திடவும்: இடீர் என்று உயிர் துறக்கவும்; படி எழும் நெடுந்துயர் பாவிடவும்: உலகம் ஏழையும் பெருந் துயர் வந்து மூடும்படியாகவும்; மடியா நெறி வந்து வனம் புகுதும்: நீண்டு கொண்டே போகும் வழி யெல்லாம் நடந்து வனத்தில் வந்து தங்கும்; கொடியார் வரும் என்று: அந்த இரக்கமற்ற ராமன் வருவான் என்று: குலாவுவதோ: உத்ஸாகமாய் இருவரும் (உயிரும் உணர்வும்) சேர்ந்து குலாவிக் கொண்டிருக்கிறதோ? அழகு ! அழகு !]

இவ்விதமாகப் புலம்புகிறாள். உயிர் போய் விடுமோ என்று எண்ணும் படி பெருமூச்சு எறிந்து நைகிறாள். அப்படி நையும்போது, மின்னல் போன்ற இடை எப்படி யெல்லாமோ துவளுகிறது. துன்பச் சாயலை அசைந்து காட்டும் ஒரு ஆபரணம் போலவே இருக்கிறது இடை. கழுத்தில் பொன்னாரம் ஒன்று கிடந்தால்

அது எப்படி துன்பச் சாயலே அசைந்து அசைந்து காட்டுமோ அதுபோல் இடையும் அசைந்து அசைந்து காட்டியது என்பது குறிப்பு.

என்(று)என்(று) உயிர்
விம்மி,யி ருந்தழி
வான்,

மின்துன் னும்ம—
ருங்குல்வி லங்கிழை
யான்;—

"ஒன்றென் உயிர்
உண்டெனின் உண்டிடர்;
யான்

போல்லும் பொழு
தேபுகழ் பூணும்," என
று.

[ஒன்று, என் உயிர் உண்டு எனின் உண்டு இடர்: ஒரு காரியம் உறுதி: உயிர் இருந்தால் துன்பமும் உண்டுதான்; யான் போன்றும் பொழுதே: நான் உயிர் விடும்போது தான்; புகழ் பூணும் என: புகழ் என்னை வந்து சேரும் என்று—இருந்தழிவான்.]

துன்பவெறியானது சீதையை வேறு உலகத்திற்குக் கொண்டு போய் பேசச் செய்ததைப் பார்த்தோம். தன் உணர்வைப் பார்த்தும் உயிரைப் பார்த்தும் ஏதோ மக்கள் இனத்தைச் சேர்ந்தவைகள் அவைகள் என்ற முறையில் புலம்பினாள். அந்த வெறி கொஞ்சம் தணிந்த முறையில் உலக இயலுக்கு வருகிறாள். வந்ததும் எப்படியெல்லாமோ அச்சம் பிறக்கிறது.

உயிர் உடலைவிட்டுப் போக வில்லை. விரும்பின மாத்திரத்தில் உயிர் பிரிந்து போகக்கூடிய காரியம் அல்ல. இருக்கத்தான் செய்கிறது. அதிலிருந்து எண்ணம் எப்படி உதிக்கிறது பாருங்கள்!

"பொறுமையாக அன்னபானாதிகளை உட்கொண்டு தானே இருக்கிறேன். அப்படி உயிரையும் காப்பாற்றித் தானே யிருக்கிறேன். அப்படிக் காப்பாற்றுவதற்குக் காரணமும் இருக்கத்தான் செய்கிறது."

சந்தம்

தானன தானன
தான தன்னன

பொறையிருந்(து) ஆற்றிஎன்
உயிரும் போற்றினேன்,

அறையிருங் கழலவற்
காணும் ஆசையால்;

நிறையிரும் பல்பகல்
நிருதர் நீள்நகர்

சிறையிருந் தேனை,அப்
புனிதன் நீண்டுமோ!

[பொறை யிருந்து ஆற்றி: எவ்வளவோ பொறுமையாக, கஷ்டத்தோடுந்தானே வாழ்ந்து: என் உயிரும் போற்றினேன்: என் உயிரைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறேன்.—எதற்காக? அறையிருங் கழலவற் காணும் ஆசையால்: சப்திக்கின்ற கழலை யுடைய ராமனைக் காண வேண்டும் என்ற ஆசையினாலேதான்; ஆனால் ஒரு காரியம். நிறையிரும் பல்பகல்: நீண்ட நீண்ட அநுபது நாழிகை கொண்ட பல நாட்களும்; நிருதர் நீள் நகர் சிறை யிருந்தேனை: அரக்கர்களுடைய இந்தப் பெரிய நகரில் சிறை வைக்கப்பட்டுள்ள என்னை; அப்புனிதன் நீண்டுமோ: அந்தத் தூய்மையான ராமன் தொடவும் செய்வானா!]

"பிறர் என்னை இச்சித்தார் என்பதை உணர்ந் திருக்கிறேன். உணர்ந்தும் உயிரோடு இருக்கிறேன். அதோடா நின்றது காரியம்? அவர்கள் அடாத வார்த்தைகள் என்ன வெல்லாமோ சொன்னார்கள். அவ்வளவு வார்த்தைகளும் என் காதில் இன்னும் ஒலித்துக் கொண்டுதானே இருக்கின்றன."

உன்னினர் பிறர்என
உணர்ந்தும் உய்ந்(து),அவர்

சொன்னன சொன்னன
செவியில்த் தூங்கவும்,

மன்னுயிர் காத்(து)இருங்
காலம் வைகினேன்;—

என்னின்வே(று) அரக்கியர்
யாண்டை யார்கொலோ!

[உன்னினர் பிறர் என உணர்ந்தும் உய்ந்து: பிறர் என்னை இச்சிக்கிறார்கள் என உணர்ந்தும் உயிரோடு உள்ளவளாய்; அவர் சொன்னன சொன்னன செவியில்த் தூங்கவும்: அந்தக் கொடியவர்கள் சொல்லிச் சொல்லித் தொலைந்த வார்த்தைகள் இன்னும் செவியில் ஒலித்துக் கொண்டிருக்கவும் (தூங்கவும்: செவியில்க் குழைபோல் தொங்கிக்கொண்டிருக்கவும்); மன்னுயிர் காத்து இருங்காலம் வைகினேன்: அந்த அருமையான (பாழாய்ப்போன) உயிரைக் காத்து நீண்ட காலம் வாழ்கிறேன்: என்னின் வேறு அரக்கியர் யாண்டை யார்கொலோ: என்னைப்போல அரக்கியர் வேறு எங்கே யார் இருக்கிறார்கள்!]

இறுதி இல்லாத துன்பம் அல்லவா! அது பல பல படலங்களில் வெளி வருகிறதைப் பார்க்கலாம்.



புன்னாகவராளி

"அதுக்குள்ளே மாட்டைப் பத்திக் கொண்டு ராமன் வாரானே!" என்று ஆச்சரியத்துடன் சொன்னாள் சாலாட்சி அம்மாள். இடுப்பில் நீர்க் குடத்துடன் அவள் அப்போதுதான் வாய்க்காலிலிருந்து உள்ளே வந்தாள்.

"அதெப்படி இப்பவே வருவான்? மணி ஏழுகூட இருக்காதே! வேறே எதோ மந்தையைப் பார்த்துவிட்டுச் சொல்லுகிறாய் போலிருக்கு" என்று பண்ணையார் பலவேசம் பிள்ளை கூறினார்.

"சரியாய்ப் போச்சு; அப்போ நான் பொய்யா சொல்லுகிறேன்?" என்று சொல்லிக் கொண்டே அவள் குடத்தை இறக்கி வைத்தாள். குடத்து நீர் அலம்பி அவளுடைய புடவை நனைந்திருந்தது.

"நம்ம வீட்டு மாடுகளை எனக்குத் தெரியாதா! ராமனுடைய சாயவேட்டி தான் ஒரு மைலுக்கு ஒளி அடிக்கிறதே!" என்றாள் அவள் மீண்டும்.

"இதென்னடி கூத்தாயிருக்கு!" என்று சொல்லிக் கொண்டே சாய்வு நாற்காலியிலிருந்து பண்ணையார் எழுந்திருந்தார். நாற்காலியில் விரித்திருந்த துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு அவர் புழைக் கடைப் பக்கம் சென்றார்.

ப. ஸ்ரீனிவாசன்.

வீடு திரும்பும் ஆர்வத்துடன் மாடுகள் வேகமாக வந்துகொண்டிருந்தன. தங்களது பூதாகாரமான உடம்பைத் தூக்கிக்கொண்டு எருமைகள் கூடத் தாவித்தாவி ஓடிவந்தன.

களைத்த நடையுடன் ராமன் பின்னால் வந்தான். ஒளி வீசும் அவனது கருமேனி களைப்பினால் மங்கிப் போயிருந்தது. ஒடுங்கிய வயிறு வாடிக் குழைந்து போய்விட்டது. வலது கையில் ஒரு சிறு கழியை அவன் பிடித்திருந்தான். இடது முழங்கையில் சோற்றுச் சட்டி தொங்கியது. தலையில், காலையில் தேய்த்துச் சென்ற ஆமணக்கெண்ணெய் அவனது நெற்றியிலும், காதோரமும், கழுத்துப் பிடரியிலும் வழிந்திருந்தது. வழக்கம் போல் இடுப்பில் மூங்கில் புல்லாங் குழலைச் செருகியிருந்தான். தலையில் ஏதோ ஒரு துணியைச் சுற்றிக் கட்டியிருந்தான்.

"ஏது ராமா, இவ்வளவு சீக்கிரம்?" என்று பண்ணையார் கேட்டார்.

"குளத்திலே மாடுகளை மேய விட்டிருந்தேன். காலையிலே பாய ஆரம்பிச்ச புதுத் தண்ணீர் மத்தியானத்துக்குள் குளம் பூராவையும் ரொப்பிடுச்சு. இன்னம் கொஞ்ச நேரம் மாடுகளை அங்கே விட்டிருந்தால் நீந்தித் தான் வரணும். அதுதான்



மனைவி:— அவர் ஏன் அப்படிக் குதிக்கிறார்?

கணவன்:—டாக்டர் கொடுத்த 'மிக்ச'ரைக் குலுக்காமல் சாப்பிட்டு விட்டாராம். அதற்காகக் குதிக்கிறார்.

நான் இப்போது பத்திக்கொண்டு வந்து விட்டேன்" என்றான் ராமன்.

"குளம் நிறைந்து விட்டதா! இனிமேல் மாடுகளை அங்கே மேயவிட முடியாதென்று சொல்லு. வயல்களை உழுவதற்கு வேறே சட்டம் கட்டணும். இந்த நேரம் பார்த்துப் பண்ணைக்காரனும் மாமியார் வீட்டுக்குப் போய்த் தொலைஞ்சான், பார்! நீ காலை விடியு முன்னே எழுந்து போய் பள்ளன்களைச் சத்தம் காட்டிவிட்டு வா. இனிமேல் காலை மாடுகளுக்குச் சோலி சரியா யிருக்கும். அதுகளை மேய்க்கக் கொண்டு போகாதே—சரி, போய் மாடுகளைத் தொழுவிலே கட்டு" என்று பண்ணையார் சொன்னார்.

* * *

கோடை காலம் முழுவதும் ஆவலுடன் எதிர் பார்த்திருந்த சாரல் காற்றும், சாரல் வெள்ளமும் வந்து விட்டதால், அவர் வீடு திரும்ப மனமின்றி, வாய்க்கால் கரையிலேயே துண்டை மடித்துப் போட்டு உட்கார்ந்து விட்டார்.

அவர் வீட்டுக்கு ஏழெட்டு வீடுகள் தள்ளி, காலி மனையின் மத்தியில் தொழுவம் இருந்தது. தொழுவத்தை அடுத்த தோட்டத்தில் வைக்கோல் போர் அடைந்திருந்தது.

பண்ணையாருடன் ராமன் பேசிக்கொண்டிருந்த போதே மாடுகள் பாய்ந்து சென்று, தொழுக் கதவைக் கொம்பினால் தாக்க ஆரம்பித்தன. தொழுவத்துக்குள் இருந்த கன்றுகளும், வெளியே இருந்த பசு, எருமைகளும் "அம்மா, அம்மா" என்று கத்தி ஆர்ப்பரித்தன. காளைகள் மாத்திரம் அலட்சியமாக ஒதுங்கி நின்றன.

கதவை ராமன் திறந்ததும் மாடுகள் உள்ளே பாய்ந்தன. நாலு ஜோடி காளைகளை ஒரு புறமும், மூன்று எருமைகளை ஒரு புறமும், ஐந்து பசுக்களை இன்னொரு பக்கத்திலும் அவன் கட்டினான். சற்று தூரத்தில் கட்டப்பட்டிருந்த கன்றுகள் தும்பை அறுத்துக் கொண்டு தாய்ப் பசுக்களிடம் ஓடிவர முயன்றன.

பருத்தி விதை அரைக்கும் உரல்மேல் தூக்குச் சட்டியையும் புல்லாங்குழலையும் வைத்துவிட்டு, கதவைச் சாத்திக்கொண்டு ராமன் வாய்க்கால் பக்கம் சென்றான். மேல் துண்டை அரையில் கட்டிக்கொண்டு, சாய வேட்டியைக் கரையில் வைத்துவிட்டுப் புது வெள்ளத்தில் குதித்தான்.

அவன் நீச்சலடித்துக் குளித்துக் கரையேறியதும், வயிற்றுக்குள் பசி உசும்பி நின்று ஆர்ப்பாட்டம் செய்தது. நேராகப் பண்ணையாரின் வீட்டுக்கு அவன் சென்று, சாலாட்சி அம்மாளைச் சோறு போடச் சொல்லி வயிறு நிறையச் சாப்பிட்டான்.

பிறகு தொழுவத்துக்குத் திரும்பி மாடுகளுக்குத் தீவனம் வைத்தான். கொழுகொழுவென்று கரைத்திருந்த பிண்ணாக்கை ஒரு மூச்சு இழுத்துவிட்டு, கதை கேட்கத் தயார் என்ற பாவனையில் மாடுகள் எல்லாம் சாவகாசமாகப் படுத்து அசை போடலாயின.

இரவுக்கு வேண்டிய வைக்கோலையும் ராமன் பிடுங்கிக் கொண்டுவந்து வைத்தான். மாடு கறக்க இன்னும் சிறிது நேரம் இருந்ததால், 'அப்பாடி' என்று உட்கார்ந்து புல்லாங்குழலை மெதுவாகக் கையில் எடுத்தான். மேய்ச்சல் வெளியில் பொழுது போக்குக்காக அவன் குழலூதுவது வழக்கம். தொழுவத்தில் அன்றுதான் முதன் முதலாக வாசிக்க ஆரம்பித்தான்.

குறிப்பிட்ட பாட்டு எதுவும் இன்றி, பல ராகங்களையும் சிறிது நேரம் இலேசாக ஆலாபனம் செய்தான். பிறகு தெம்மாங்கு, தில்லானாக்கள், பழைய சினிமாப் பாட்டுகள் ஆகியவற்றைக் குழலில் அள்ளிவீசலானான்.

உரல் மேல் உட்கார்ந்து, நேரம் போனது கூடத் தெரியாமல் அவன் மெய் மறந்து இசையைப் பொழிந்து கொண்டிருந்தான். வாசல் வழியே பாய்ந்து புகுந்த சாரல் காற்று அவனைச் சுற்றிச் சுற்றி ஓடி வந்து கூத்தாடிக் கொண்டிருந்தது.

இருட்ட ஆரம்பித்ததும் பண்ணையார் வாய்க்கால் கரையிலிருந்து வீட்டுக்குப் புறப்பட்டார்.

"மாடு கறந்தாச்சா?" என்று மனைவியைக் கேட்டார்.

"இல்லையே! ராமன் இன்னம் வரவில்லையே!" என்றாள் சாலாட்சி அம்மாள்.

"ஏது, இன்று எல்லாம் தலை கீழாய் இருக்கு! ஏலே, சண்முகம், நீ போய் தொழுவிலே ராமன் இருக்கானா, பாரு!" என்று பண்ணையார் சொன்னார்.

அவரது ஆறுவது புதல்வனும், அவரைப் போல் உருண்டை வடிவத்தினனுமான சண்முகம், தெருவில் ஓடினான். சிறிது தூரம் போய் விட்டு அவன் திரும்ப வந்து, "அப்பா, தொழுவிலே புல்லாங்குழல் சத்தம் கேக்குது. ராமன் இருப்பான்" என்றான். தொழு வரை சென்று பார்க்க இருள் காரணமாக அவனுக்கு பயம்.

"சரி, விளக்கைக் கையில் எடுத்துக் கொள்" என்று தகப்பனார் சொன்னார். வெளிச்சம் காட்டிக் கொண்டு சண்முகம் முன் செல்ல, பண்ணையார் இரண்டு பெரிய பித்தளைச் செம்புகளை ஏந்திக் கொண்டு புறவாசல் வழியாகத் தொழுவத்தை நோக்கி நடந்தார்.

தொழு வாசலை அணுகியதும், "அப்பா ஆ ஆ!" என்று வீரிட்டுக் கொண்டு சண்முகம் பின் வாங்கினான்.

"என்னடா இது! மடப் பயலுக்குப் பிறந்த பயலே!" என்று பண்ணையார் கண்டித்தார்.

தொழு வாசலை நோக்கிப் பையன் கையைக் கையை நீட்டினான். செம்புகளைக் கீழே வைத்துவிட்டு, விளக்கை உயர்த்திப் பிடித்து அந்தத் திசையை நோக்கி பண்ணையார் உற்றுக் கவனித்தார். "ஆஹா, அப்பாடியோ!" என்று வாய் குழற மரமாய் நின்றுவிட்டார்.

தொழு வாசற்படியில் ஒரு முரட்டு நாகப் பாம்பு படமெடுத்து ஆடிக்கொண்டிருந்தது.

பண்ணையார் சுய நினைவுக்கு வரப் பல நிமிஷங்கள் பிடித்தன. "ஏலே, நீ நம்ம வீட்டு வழியா தெருவிலே போய், யாராவது நாலு பேரைக் கூட்டிக்கொண்டு ஓடிவா. போ, பயப்படாமல் ஓடு" என்று தணிந்த குரலில் கூறினார்.

உடனே சண்முகம் சிட்டாய்ப் பறந்தான்.

* * *

நடுக்குகின்ற கையில் விளக்கைப் பிடித்துக்கொண்டு பண்ணையார் நின்றார். கிட்ட நெருங்க அவருக்கு பயம். தூரத்தில் நின்றபடி "ராமா!" என்று கூப்பிடுவோமா என்றால், பாம்பு கலவரமடைந்து தொழுவுக்குள் பாய்ந்து ராமனையும் மாடுகளையும் கொத்திவிடக் கூடாதே என்ற கவலை. ஒருவேளை பாம்பு தம்மீது பாயவந்தாலும், ஓடுவதற்குச் சித்தமாக ஒருகாலை எடுத்து வைத்து, மறுகாலை நிலையில் ஊன்றிக் கொண்டு நின்றார்.

அந்த நாகமோ அவர் வந்திருப்பதையே உணராமல் ஒய்யாரமாக ஆடிக் கொண்டிருந்தது.

குனிந்த தலை நிமிராமல், மூடிய கண்களைத் திறவாமல் ராமன் தேனைப் பொழிந்து கொண்டிருந்தான். மாடுகள் எல்லாம் மாயமாய் மறைந்து விட்டனவோ என்று எண்ணும்படி தொழுவத்தில் நிசப்தம் நிலவியது.

ஸ்தாயியை இறக்குவது தெரியாமல் தணித்துக் கொண்டே வந்து ஒரு பாட்டை ராமன் முடித்தான்.



பாம்பு சட்டென்று ஆட்டத்தை நிறுத்தி, நாலு திசைகளையும் படத்தினால் பளிச்சுப் பளிச்சென்று வெட்டியது.

குழல் துவாரத்தில் கசிந்திருந்த இதழ் நீரைச் சாய வேட்டியில் துடைத்துவிட்டு, மறுபடியும் உதட்டு விளிம்பில் குழலைப் பொருத்தி புன்னாகவராளியில் ராமன் ஊத ஆரம்பித்தான்.

அவ்வளவுதான்! பாம்புக்குக் குஷி பிறந்து விட்டது. எவ்வி எவ்விப் படத்தை உயர்த்தி அது ஆட்டம் போட்டது. பாட்டின் வேகமும் ஸ்தாயியும் உயர உயர, நாகத்தின் ஆட்டமும் அதிகரித்தது. வால் நுனி மாத்திரம் தரையில் தொட்டிருக்க, இரண்டு பாக உடலையும் நிலை உயரத்துக்கு நிமிர்த்தி நின்று அது கூத்தாடியது.

"அப்பா, அட பாவிப் பயலே! என்ன ஜம்டா!" என்று பண்ணையார் வியந்தார். அடுத்த விநாடியே, "ஏ, மாரியாத்தா! நீதான் எங்க ராமனைக் காப்பாத்தணும். உனக்கு இந்த வருஷம் சிறப்பாகக் கொடை கொடுக்கிறேன்" என்று பிரார்த்தித்தார்.

அதற்குள் ஊரையே திரட்டிக் கொண்டு சண்முகம் வந்து விட்டான். தடிகள், கடப்பாறைகள், மண் வெட்டிகள் சகிதம் திடகாத்திரர்களான கிராமவாசிகள் ஓடோடியும் வந்தனர். கிழவர்கள் கூட விளக்கு சகிதம் வேகமாய் வந்து சேர்ந்தனர்.

சத்தம் போடக் கூடாது என்பதற்கு அடையாளமாக ஒரு கையை உயர்த்தி "உஸ், உஸ்!" என்றார் பண்ணையார்.

எல்லோரும் அடிமேல் அடி எடுத்து வைத்து வந்து பண்ணையாரைச் சுற்றி நின்றனர். எதிரே நாகப்பாம்பு ஆடுவதைப் பார்த்தார்கள். தங்களையே ஆடவைக்கும் ராமனின் இசையையும் கேட்டார்கள்.

"சரி, ஒரே அடியில் பாம்பைக் கொன்னு போட வேண்டியது தான்!" என்று இலேசான குரலில் ஒரு வாலிபன் உறுதியாகக் கூறினான்.

"சேச்சே, நாகத்தைக் கொல்லக் கூடாது. பாபம், அது வாழும் பாம்பு!" என்றார் ஒரு கிழவர்.

"மனிசன் உசிருக்கே ஆபத்தாயிருக்கிறப்போ பாவமாவது, புண்ணியமாவது" என்று இன்னொருவர் பதிலளித்தார்.

"உங்க தடிக்கம்பு எல்லாம் இங்கே பிரயோஜனப்படாது. நாம் கிட்ட நெருங்கினால் பாம்பு ராமன் மேலே தான் பாயும்" என்று பண்ணையார் சொன்னார்.

இதற்குள் இடையர் தெருவுக்குத் தகவல் எட்டி, ராமனின் பெற்றோர்களும் சுற்றத்தாரும் விரைந்து வந்தனர். முன்பு நின்றவர்களுடன் சேர்ந்து நின்றதைத் தவிர அவர்களால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை. ஒரு வழியும் தெரியாமல் எல்லோரும் திகைத்து நின்றனர். அவர்களுக்கு மூளை குழம்பி விட்டது. ஆனால் ராமனின் தாய் மனம் பொறுக்காமல், "ஏ, ராமா பாம்புடா!" என்று தொண்டை கிழியக் கத்தினாள். அவள் வாயை ஒருவன் பொத்தினான்.

அப்போது கூப்பாடு ராமனை எட்டி விட்டது. "பாம்பு" என்ற சொல்லைக் கேட்டு அவன் தலை நிமிர்ந்து பார்த்தான். ஸ்தம்பித்துப் போய் இசையை நிறுத்தினான். நாகமும் ஸ்தம்பித்தது.

மறுகணமே அவன் புன்னாக வராளியைத் தொடர்ந்து வாசிக்கலானான். முன்னை விட அற்புதமான இனிமையுடன் இசை வெள்ளம் பெருகிப் பாய்ந்தது. நாகமும் கும்மாளம் போட்டுத் தலை கிறங்கி ஆடியது.

சில விநாடிகள் கழிந்ததும் அவன் இடது கைவிரல்களைக் குழல் துவாரங்களில் பரிமாற விட்டு விட்டு, வலது கையை ஆட்டிக் கூட்டத்தைப் பின்னால் செல்லும்படி சைகை காட்டினான். எல்லோரும் அப்படியே பின்னுக்கு வாங்கினார்கள்.

இடக்கரத்தின் உதவியுடன் குழலை ஊதிக்கொண்டே, பக்கத்திலிருந்த ஒரு செங்கல்லை எடுத்து அதை முழு பலத்துடன் பாம்பின்மேல் வீசினான். நாகத்தைத் தூரத் தூக்கி எறிந்துவிட்டு, செங்கல் தொலைவில் போய் விழுந்தது. செங்கலைத் தொடர்ந்து ராமனும் வெளியே வந்து விழுந்தான். விழுந்ததில் உடம்பெல்லாம் அடிபட்டதையும் பொருட்படுத்தாமல் அவன் கூட்டத்தை நோக்கிப் பறந்தான். அவனை எல்லோரும் கட்டிக் கட்டித் தழுவிக் கொண்டனர்.

அடிபட்ட பாம்பு இரண்டு மூன்று முறை சுருண்டு சுருண்டு எழுந்திருந்து மறுபடியும் வாசற்படிக்குச் சென்று ஜிவ்வென்று முறம் அகலம் படத்தை விரித்தது. "சீத், சீத்!" என்று சீறிக் கொண்டு அது சுற்று முற்றும் பார்த்தது. வெகோரமாகச் சென்று வைக்கோல் தோட்டத்தில் புகுந்து மறைந்து விட்டது.

விளக்குகளுடன் எல்லோரும் வந்து தேடிப் பார்த்தனர் — பாம்பு அகப்படாது

என்ற தைரியத்துடன். அது அவர்கள் நினைத்ததுபோல அகப்படவுமில்லை.

* * *

பல நாட்கள் கழிந்தன. அரச மரத்தடியில் நாகப் பிரதிஷ்டைக்குப் பண்ணையார் ஏற்பாடு செய்தார். தாம் சேர்த்து கொண்டபடி மாரியாத்தாளுக்குக் கொடை கொடுக்க ஆயத்தம் செய்தார்.

கொடை அன்று இரவில் அம்மன் சப்பரம் புறப்பட்டது. முன்னால் பேய்க் கொட்டை முழக்கிக் கொண்டு மேளக்காரர் சென்றனர்.

பண்ணையார் வீட்டுக்கு நாலைந்து வீடுகள் தள்ளியிருந்த சாமி கொண்டாடியின் வீட்டு முன்னால் மேளக்காரர் தமது முழுத் திறமையையும் காட்டி வாசித்தனர். பம்பைகளும், தவுல்களும் அலறின. கிராமவாசிகள் அனைவரும் மேளக்காரரை சுற்றி நின்றனர்.

“பாம்பு! பாம்பு!” என்று திடீரெனக் கூச்சல் எழுந்தது.

கூட்டத்தினர் சிதறி ஓடினர். மேளக்காரரும் ஓட ஆரம்பித்தனர்.

மேலெல்லாம் சக்கன் பிய்த்துப் பிடுங்க ஒரு வற்றல் பாம்பு தனது ஒடுங்கிய படத்தை விரித்த வண்ணம், கடுமையாகச் சீறிக் கொண்டு வேகமாக ஓடி வந்தது. அத்தனை பேரையும் விட்டு விட்டு அது குறிப்பாக ராமனை நோக்கி ஓடி வந்தது. அவனுக்குவெகு சமீபத்தில் வந்து விட்டது. அவன் திகைத்துப் போய் அப்படியே நின்றான். நாகம் ‘பட்’டென்று அவனுடைய காலைக் கொத்தி விட்டு அப்புறம் திரும்பியது.

மறு நிமிஷம் அதன் படத்தின்மீது ஒரு கல் விழுந்தது. பாம்பும் அப்படியே சுருண்டு மயங்கிக் கீழே விழுந்தது.

ஆ, இவ்வளவுதானா?

வெகு காலத்துக்கு முன்பு பாரசீகத்தை ஆண்டுவந்த ஒரு அரசனுக்குச் சரித்திரம் படிக்கவேண்டும் என்று ஆசை உண்டாயிற்று. அவன் உடனே பல அறிஞர்களையும் ஞானிகளையும் அழைத்தான். “மனித ஜாதியின் சரித்திரத்தை எழுதிக் கொடுங்கள்” என்று கட்டளையிட்டான்.

அறிஞர்களும் ஞானிகளும் இருபது வருஷகாலம் இரவு பகலாகக் கண் விழித்துப் பன்னிரண்டாயிரம் புத்தகங்கள் எழுதினார்கள். அவற்றைப் பன்னிரண்டு ஒட்டகங்களின் மேலே ஏற்றிக் கொண்டு அரண்மனைக்கு வந்தார்கள்.

மன்னன் அந்தப் புத்தகங்களைப் பார்த்தான். அவனுக்குத் திக்பிரமை உண்டாயிற்று. “இத்தனை புத்தகங்களைப் படிக்க எனக்கு நேரம் எங்கே இருக்கிறது? இதைச் சுருக்கமாக எழுதிக்கொண்டு வாருங்கள்” என்றான்.

ஞானிகள் மீண்டும் முயன்று பல வருஷங்களுக்குப் பிறகு, மனித ஜாதியின் சரித்திரத்தை இரண்டாயிரம் புத்தகங்களிலே சுருக்கமாக எழுதி, நான்கு ஒட்டகங்களின் மேலே வைத்துக்கொண்டு அரண்மனைக்கு வந்தார்கள்.

மன்னன் அதைப் பார்த்தான். அவன் மீண்டும் முகத்தைச் சுளித்தான். “இதுவும் அதிகம். இன்னும் சுருக்கமாக எழுதுங்கள்” என்றான்.

பல வருஷங்கள் கழிந்தன. அரசன் கிழவனானான். ஞானிகளும் ஒருவர் பின் ஒருவராக இறந்து மறைந்தார்கள். ஒருவர் மாத்திரம் பாக்கியிருந்தார். ஒருநாள் அவர் மூன்று புத்தகங்களைத் தம் தலைமேலே வைத்துக்கொண்டு அரண்மனைக்கு வந்தார். அப்போது அரசன் சாகும் தறுவாயில் இருந்தான். ஞானியின் தலைமேலே இருந்த புத்தகங்களைப் பார்த்ததும் அவனுக்கு துக்கம் உண்டாயிற்று. “ஐயோ, கடைசியில், சரித்திரம் படிக்காமலேயே சாகப் போகிறேனே!” என்று கண்ணீர் பெருக்கினான்.

ஞானி அரசரைப் பார்த்து, “அரசே, கவலைப்படவேண்டாம். நீங்கள் இந்தப் புத்தகங்களைப் படிக்க வேண்டியதில்லை. நான் மனித ஜாதியின் சரித்திரத்தை நாலே நாலு வார்த்தைகளில் எழுதியிருக்கிறேன். கேளுங்கள் : **மனிதன் பிறந்தான் : இருந்தான் : இறந்தான்! இவ்வளவுதான்**” என்றார்.

“ஆ, இவ்வளவுதானா!” என்றான் மன்னன் வியப்புடன்.

ஆகாச வெடி

"இரவில் நகரிலுள்ள எல்லா டீக் கடைகளையும் மூடி வைக்க வேண்டும். திருடர்களைப் பிடிக்கவே இந்த ஏற்பாடு" என சென்னைப் போலீஸ் இலாகா கூறுகிறது.

—ஒரு செய்தி.

திருடர்கள் விழித்திருந்து வேலை நடத்த மேற்படி கடைகளில் கொடுக்கப்படும் டீ தான் காரணம் என்று போலீஸ் இலாகா எண்ணி விட்டது போலும்!



★

டிரைவர் இன்றி என்ஜின் ஓடிய அதிசயம்.

—செய்தித்தலைப்பு

என்ஜின் டிரைவர்கள் திடீரென்று ஸ்டிரைக் செய்யும் இந்தக் காலத்தில் இத்தகைய என்ஜின்கள் சில கைவசம் இருந்தால் நல்லது தானே!

★

பொடி தயாரிக்கும் கம்பெனிகளின் முதலாளிகள் கதவடைப்புச் செய்வது சட்ட விரோதம் என சென்னை சர்க்கார் ஒரு அறிக்கை விட்டிருக்கின்றனர்.

—சென்னைச் செய்தி

நமது காங்கிரஸ் மந்திரிகள் பொடி விஷயத்திலும் இவ்வளவு கவனமாக இருப்பது பாராட்டத் தக்கது தான்!

★

கார்ப்பரேஷன் சிப்பந்திகளுக்கு கிராக்கிப்படி கொடுப்பதற்கு சர்க்கார் அனுமதி அளித்து விட்டார்கள்.

—செய்தி

சிப்பந்திகள் கிராக்கி செய்து கொண்டாவது இந்த அதிகப்படி வரும்படியை ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

★

கிருபர்களுக்குப் போதிய பந்தோபஸ்து அவசியம்.

—ஒரு தீர்மானம்

கிருபர்களிடமிருந்தும் மற்றவர்களுக்குப் போதிய பந்தோபஸ்து இருக்க வேண்டியது அவசியம் என்று கருதுகிறோம்.

இந்தியாவில் சைக்கிள் உற்பத்திசாலை அமைப்பதற்கு வேண்டிய தளவாடம் வாங்குவதற்காக நான்கு பேர்கள் பிரிட்டனுக்குப் புறப்பட்டனர்.

—செய்தி

இவர்கள் சைக்கிளில் ஏறிப் புறப்பட்டிருக்க மாட்டார்கள் என்று நிச்சயமாக நம்பலாம்.

★

பம்பாய்க் கூட்டத்தில் ஒரே அலங்கோலம். பிரசங்கியை வெளியே இழுத்துப் பலமாய் அடித்தனர்.

—செய்தித் தலைப்புகள்

கூட்டத்தில் இருந்த ஒரே அலங்கோலமான மனிதர் பிரசங்கிதான் என்று தெரிகிறது.




★


இந்திய எல்லைக்கு வந்து நாகர்கள் இரும்பு திருடுகின்றனர்.

—செய்தி

இரும்பு திருடி ஆயுதங்கள் தயாரித்து இந்தியாவின் மேல் படையெடுக்கலாம் என்று நாகர்கள் நினைத்தால், அவர்கள் கொஞ்சம் புத்தியையும் இந்தியாவிடமிருந்து திருடிப் பார்ப்பது தானே என்று தான் நாம் சொல்லக் கூடும்.


இவள் ஆடைகள் இப்பொழுது
எவ்வளவு சுத்தமாகவும்
பளிச்சென்றும் காண்கின்றன
அது ஸன்லைட்டினால்
தான்!
SUNLIGHT SOAP
ஸன்லைட்
சோப்
அழுக்குத் துவைக்காமலே துணிகளை
வெண்மையாகச் சலவைசெய்கிறது
S. 66-111 TM

கவர்ச்சியான ரகங்கள் நவீன (1948) மாடல்கள்



எல்லாம் ஸ்விஸ் தயாரிப்பு — உயர்ந்த லீவர் — 3 வருட உத்தரவாதம்

நெ. 1 & 2 ([illegible])	நெ. 3 லேடி ரிஸ்ட் வாட்ச்	நெ. 4 தட்டை உருவம்
க்ரோம் 5 ஜுவல் ரூ. 40/-	4 ஜுவல் க்ரோம் ரூ. 40/-	4 அல்லது 5 ஜுவல் க்ரோம் ரூ. 25/-
கபீரியர் 7 ,, ரூ. 45/-	7 ,, ,, ரூ. 55/-	,, செண்டர் செகண்டு ரூ. 32/-
ரோல்டு கோல்டு ரூ. 48/-	7 ரோல்டு கோல்டு ரூ. 65/-	,, ரோல்டு கோல்டு ரூ. 46/-
,, கபீரியர் ரூ. 62/-	15 ஜுவல் க்ரோம் ரூ. 80/-	7 ஜுவல் கபீரியர் ரூ. 52/-
15 ஜுவல் க்ரோம் ரூ. 70/-	15 ரோல்டு கோல்டு ரூ. 110/-	15 ,, க்ரோம் ரூ. 40/-
15 ரோல்டு கோல்டு ரூ. 80/-	15 9 காரட் கோல்டு ரூ. 160/-	15 ,, ரோல்டு கோல்டு ரூ. 65/-

பாக்கிங் தபால் செலவு தனி. ஆர்டர் செய்யும்போது கடிகார நம்பர் குறிப்பிட்டு எழுதவும்.

H. DAVID CO., Post Box No. 11424, CALCUTTA

எச். டேவிட் கம்பெனி, தபால் பெட்டி நெ. 11424, கல்கத்தா



நல்ல ஆரோக்கியம் அடைவதின் ரகசியம்!...

உங்களின் குடல் சரிவர வேலை செய்து மலச்சிக்கல் ஏற்படாதிருந்தாலே, அதுவேதான் நீங்கள் நல்ல ஆரோக்கியம் அடைய மார்க்கம். மலச்சிக்கலின் காரணத்தால் சரீரத்தில் விஷமேற்பட்டு உங்களுடைய தேக ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

சுலபமாக
மலமிளக்கும்
உன்னத சஞ்சீவி

போனேமின்ட்
லாக்ஸேடிவ் சூயிங் கம்

ரூ. 1—2—0, ரூ. 0—7—0 ஆகிய இரு சைஸ்களில் எங்கும் கிடைக்கும்

சென்னை மாகாணத்துக்கு விற்பனை ஏஜண்டுகள் :

ஓரியண்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி, 99-A, அரமனைக்காரத் தெரு, மதராஸ்

No. 2.

கல்கி



KALKI ஜூலை 11, 1948 4 அணா

சாரச பரில்லா

ஒவ்வொரு துளியிலும் ஆனந்தம்!



டி.எஸ்.ஆர்.&கோ கும்பகோணம்

மதராஸ் ஏஜண்டு:

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

பைகிராப்ஸ் ரோடு

திருவல்லிக்கேணி :: மதராஸ்

கோவை, நீலகிரி, ஜில்லாக்கள் & பாலக்காடுக்கு ஏஜண்டு:

B. பாலபட்டாபி

வைசியாள் தெரு, கோயமுத்தூர்

ஆகாரத்திற்கு பின்

வயிற்று நோயா?

இதுதான் நான் சிபார்சு செய்வது



வயிற்றில் அதிக அமிலம் சேருவதால் அடிக்கடி அஜீரண உபாதைகள் ஏற்படலாம். இந்த அதிக அமிலச் சேர்ப்பினால் ஏற்படும் எரிச்சல், வாயு, இதர உபாதைகள், அஜீரணம், ஆகாரத்திற்குப் பின் வயிற்று நோய் முதலியவைகளுக்கு உலகம் அறிந்த நிவாரணியாகவே "பிஸ்மாக்"கை பிரயோகம் செய்கிறேன். அமில சேர்க்கையால் வயிற்று கோளாறு தவிப்பவர்களுக்கு உடனேயே "பிஸ்மாக்" நிவாரண மளிக்கும். இன்றே ஒரு முறை பரீக்ஷித்து உங்கள் வயிற்றை சகல உபாதைகளிலிருந்தும் தடுத்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு வேண்டியது

எல்லா கெமிஸ்டுகளிடமும் ஸ்டோர்களிலும் பவுடராகவும் மாத்திரையாகவும் கிடைக்கும்.

BISMAG

சோல் ஏஜண்டுகள்!

ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்.

பம்பாய்-கல்கத்தா-மதராஸ்-லாகூர்

Regd. No. M. 4392

